வெளியீடு 10-04-2004

Issued 10-04-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, நவம்பர் 4, 2003 – தொகுதி 52 – எண் 2

Tuesday the 4th November, 2003 —Volume 52 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Chennai - 600 009

V24,31 G03
185083

[Price Rs. 3.00

4-11-2003

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 459-495

2. **தகவல் கோரல்—**

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு 496

3. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர அரசே கட்டணத்தை ஏற்பது 496-548, 549-551

*திரு. எ.வ. வேலு 496-499, 502,504,509

திரு. சி. ஞானசேகரன் 510-515, 524,525

திரு. லா. சந்தானம் 531-532,533

திரு. மு. அப்பாவு 533-536,538

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 497,498,499, 500,502-510, 512,514,515, 518-520,522-524, 527,531,532, 535,538-547

4. **அறிவிப்பு—**

மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்தல் 548-549

5. **அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு 551

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 551

(இ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு 551-552

பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 552-553

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 — 553-556

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் — 553, 555

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 556-576

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 557,558,562,563, 571-573,574,576

திரு. சி. ஞானசேகரன் — 558-559,562-563, 565-567

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 556,560,561, 562,564,566

திரு. வி.கே. லட்சுமணன் — 557,563,564,567

திரு. பி.ஆர். சுந்தரம் — 567-570

திரு. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 559-560,561, 564,565,566

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 577-579


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

D V217,3'10B P03.52.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 18, சுபானு-திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003, நவம்பர் 4, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை"

எல்லா உயிர்களிடத்தும் கருணைகொண்டு அவற்றைக் காத்திடுவதைக் கடமையாகக் கொண்ட சான்றோர்கள் தமது உயிரைப் பற்றிக் கவலை அடையமாட்டார்கள்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 21, திரு. டி. மணி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**21—**

#### பத்திரப் பதிவுக் கட்டணம்

***5149—திரு. டி. மணி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 20 சென்டிற்குகீழ் நிலம் வாங்குபவர்கள் பத்திரப் பதிவிற்காக சென்றால், அவர்களிடம் பத்திரப் பதிவுக் கட்டணம் மூன்று மடங்கு அதிகப்படியாக வசூலிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறையைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மற்றும் மார்த்தாண்டம் பதிவு மாவட்டங்களில் நகராட்சி அல்லாத பகுதிகளில் உள்ள வீட்டு மனைகளின் மதிப்பை, விளை நிலத்தின் மதிப்பில் மூன்று மடங்காக நிர்ணயம் செய்யக் கோரி, பதிவுத் துறைத் தலைவர் பிறப்பித்திருந்த 1-2-1999ஆம் நாளிட்ட நடவடிக்கை எண் 4373/எல்-1/98-ஐ எதிர்த்து அப்பகுதி மக்களிடமிருந்தும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களிடமிருந்தும் அரசுக்குக் கோரிக்கைகள் வந்தன. அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் மேற்கூறிய பதிவுத் துறைத் தலைவரின் ஆணை திரும்பப் பெற உள்ளது என்று 19-4-2002 அன்று சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு 2002-2003, நிறைவேற்றித்தரக் கோரி நடைபெற்ற விவாதத்தின்போது, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பதிவுத் துறைத் தலைவர் அரசுடன் கலந்து ஆய்வு செய்து, 1-2-1999ஆம் நாளிட்ட மேற்கூறிய தமது ஆணையை, 30-4-2002 ஆம் நாளிட்ட கடித எண் 17227/எல்-1/2002-ல் விலக்கிக்கொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவு சம்பந்தமாக நகராட்சிப் பகுதிகள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நகராட்சிப் பகுதிகளுக்குள்ளேயே, சிறிய, அதாவது வருவாய் கம்மியானவர்கள், 1,000 ரூபாய், 1,500 ரூபாய்க்கெல்லாம் ஒரு சென்ட் நிலம் விலை போகின்ற பகுதியைக்கூட இதிலே இணைத்துக்கொண்டால்—நகரத்தோடு வருகின்ற நெடுஞ்சாலைப் பகுதி, தேசிய நெடுஞ்சாலைகளில் வருகின்ற நிலங்களுக்கு விலை அதிகமாக இருக்கும். ஆனால், உள் கிராமங்களில் அந்த விலை இருக்காது. எனவே, அதைக்கூட இணைத்துக் கொள்வதோடு, இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்திய அமைச்சருக்கு நன்றியைச் சொல்லி, இந்தப் பதிவுத் துறையினுடைய சார்-பதிவாளர் அலுவலகங்களை, பதிவாளர் அலுவலகங்களைக் குறைப்பதற்கும், இன்னும் அதை மாற்றுவதற்கும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிகிறது. அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வு செய்யப்படும். பத்திரப்பதிவுத் துறையைப் பொறுத்தவரையில், சார்-பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில், தேவைக்கு அதிகமான சார்-பதிவாளர் அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு பத்திரங்கள்கூட பதியாத சார்-பதிவாளர் அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிருக்கிறது. அவற்றையெல்லாம் கண்டறிந்து, அவற்றை மட்டும்தான் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தளவில் ஒரு பத்திரம் அல்லது இரண்டு பத்திரங்கள் பதியக்கூடிய சார்-பதிவாளர் அலுவலகமோ, பதிவாளர் அலுவலகமோ இல்லை. பொதுவாக அதிகப்படியான பத்திரங்கள் பதியக்கூடிய ஒரு தன்மைதான் அந்த மாவட்டத்திலே இருக்கிறது. எனவே, அந்த மாவட்டத்திற்கு ஒரு விதிவிலக்கு என்ற அடிப்படையில் அதிக பத்திரங்களைப் பதிகின்ற நிலையில், அரசு அதைப் பரிசீலித்து, மாற்றவேண்டாம் என்ற ஒரு முடிவிற்கு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான பத்திரங்கள் பதிவு ஏற்படின், மாண்புமிகு உறுப்பினரின் கேள்வி எழ இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தப் பத்திரங்களைப் பதிவு செய்கின்றபோது, சுமார் 1,000 ரூபாய் மதிப்புள்ள நிலத்தை, பாங்குகளில் கடன் வாங்கவேண்டும் என்ற காரணத்தாலே, அதனுடைய மதிப்பை அதிகப்படுத்தி, 20,000

ரூபாய், 25,000 ரூபாய் என்று சொல்லி பதிந்து விடுகிறார்கள். ஆனால், அதற்குப் பிறகு பத்திரம் பதிய போகின்றவர்களுக்கும் அதே ஸ்டாண்டர்டு விலையை நிர்ணயித்து பதிய வேண்டுமென்று சொல்கிறார்கள்.

யாரோ ஒரு தனி நபர், தன்னுடைய சுயநலத்திற்காகப் பதியப்பட்ட பத்திரத்தினுடைய விலை, கிரயத்தினுடைய அடிப்படையிலே மற்றவர்களுக்கும் சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ளதை இருபதாயிரம் ரூபாய் கொடுத்து பதிய வேண்டிய ஒரு நிர்பந்தமும் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றபோது, அவற்றை அரசு கண்டறிந்து உரிய விலையிலே, அந்த market rate என்ன இருக்கின்றது என்ற விலையிலே பத்திர கிரயம் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பத்திரங்கள் பதியப்படும்போது, அது எந்தவித மதிப்பாக இருந்தாலும், பத்திரங்கள் பதிந்து கொள்ளப்படும். ஆனால், பத்திரங்களை அவர்கள் வாங்கிக்கொள்ள முடியாது. குறைந்த மதிப்பில் அதை அவர்கள் பதிந்திருப்பதாக துறை தெரிவித்தால் மீண்டும் அவர்கள் அரசுக்கு appeal செய்கின்றபொழுது, உண்மையான சந்தை மதிப்பையும், வழிகாட்டி மதிப்பினையும் பரிசிலனை செய்து அதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு,

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப்புறத்திலே ஒட்டியிருக்கிற சில இடங்களை, அதாவது Municipality எல்லையில் இருக்கிற சில இடங்களை Revenue Record-லே சென்ட் கணக்கிலேதான்—அதை வாங்குபவர்கள் சென்ட் கணக்கிலேதான் வாங்குகிறோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்; கொடுப்பவர்களும் அப்படித்தான் நினைக்கிறார்கள்—ஆனால், பத்திரப் பதிவு அலுவலகத்திலே அத sq.ft. பாட்டு அதற்கென்று கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். இதன் மூலமாக பத்திரம் முதலிலே பதிவு செய்யப்படுகிறதேயொழிய, அந்தப் பத்திரம் திரும்பி வருவதில்லை. காரணம் கேட்டால், நீங்கள் sq.ft. விலையிலே வாங்கியிருக்க வேண்டும்;





சென்ட் கணக்கிலே வாங்கியது தவறு. எனவே, நீங்கள் மேற்கொண்டு பணத்தைக் கட்ட வேண்டுமென்று பத்திரப் பதிவு அலுவலகத்திலே சொல்கிறார்கள். இதன் மூலமாக ஆயிரக்கணக்கான பத்திரங்கள் தேங்கிக் கிடக்கின்றன. எனவே, இரண்டு துறைகள் வைத்திருக்கின்ற அமைச்சர் அவர்கள் இதற்கு ஏதாவது ஒரு வழிமுறை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பத்திரங்கள் பதியப்படும்போது, வீட்டு மனைகளாக இருந்தால் அது சதுர அடி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்; விளை நிலங்களாக இருந்தால் அது சென்ட் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அந்த நிலம் எந்த வகைப்பாட்டில் வருகின்றதோ அந்த வகைப்பாட்டின் கணக்குப்படிதான் அரசு கணக்கில் எடுத்துக்கொள்ளும். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதாவது அவர் சம்பந்தப்பட்டிருந்த நிலங்களின்மேல் பிரச்சினை இருந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால் தக்க ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவு அலுவலக்தில் ஒருவர் தன்னுடைய சொத்தை மற்றவருக்கு விற்கின்ற நேரத்தில், அந்த அலுவலகத்திலே அந்த சொத்தினுடைய பட்டாவையும், வாங்கியவர் பெயருக்கு மாற்றுகின்ற ஒரு மாறுதல் பத்திரமும் பதிந்து தருகிறார்கள். ஆனால், பல ஆண்டுகளாகியும்கூட அந்தப் பட்டா வாங்கியவர் பெயருக்கு வருவதில்லை என்கின்ற நிலை இருக்கிறது. இப்போது அரசாங்கம், இந்த வறட்சி நிவாரணம் கொடுப்பதில்கூட, பல்வேறு விவசாயிகள் பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒருவரிடமிருந்து நிலத்தை வாங்கியிருந்தும்கூட, அதற்கு உரிய தொகையைப் பெறுவதற்கு முடியவில்லை என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பாட்டா மாறுதல், பத்திரத்தோடு சேர்த்து வாங்குகின்ற நிலையில், உடனடியாக வருவாய் அலுவலத்திற்குச் சென்று அந்தப் பட்டா மாறுதல் செய்கின்ற நிலையை அரசு ஏற்படுத்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2003 நவம்பர் 4

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா மாறுதலில் ஏதாவது ஆட்சேபனைகள் வந்திருக்குமானால் அது நிறுத்தி வைக்கப்படும். ஆட்சேபனைகள் இல்லை என்கின்ற நிலையில் வருவாய்த் துறையிலிருந்து அதற்கு ஒப்புதல் கிடைத்தவுடன் பட்டா தானாகவே, யார் பெயருக்குப் பதிந்து இருக்கிறார்களோ அவர்களுக்கு மாற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்படுகிற பத்திரத்தின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொள்ளாமல் அந்த சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கிறது; போக்குவரத்து வசதி என்ன என்பதைத் கணக்கில் கொண்டு, பத்திரப்பதிவு அலுவலகங்களை மூடுவதை அரசு தவிர்க்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு எந்தவித இடையூறுகளும் இல்லாத வகையில் அரசு, பத்திரப் பதிவு சார்பதிவகங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. குறிப்பாக 15 அல்லது 20 கிலோமீட்டருக்கு மிகாமல், ஒரு தாலூகா அலுவலகத்திற்கு ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் என்ற நிலையிலும் மற்றும் அந்தப் பகுதிகளில் தாலுகா அலுவலகத்திற்கு நிகராக சார்-பதிவாளர் அலுவலகம் தேவைப்படுகின்றது என்றால், அதிகமான பத்திரங்கள் அந்தப் பகுதியில் பதியப்படுவதைக் கண்டறிந்தால் அதற்கு ஏற்றாற்போல்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தமிழகத்தில்தான் பத்திரப் பதிவுக் கட்டணம் கூடுதலாக இருக்கிறது. இந்தியாவி[illegible] ள ம[illegible] மாநிலங்களைக் காட்டிலும் இங்கே 13 விழுக்காடும், 1 விழு[illegible] டு பதி[illegible] புக் கட்டணமாகவும் பெறுகிறார்கள்; வசூலிக்கிறார்கள். ஆ[illegible] வ, தமிழகத்தில் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைப் போலவே--பத்திரப் பதிவுக் கட்டணம் கூடுதலாக இருப்பதை--குறைக்க அரசு முன்வருமா? அதே நேரத்தில் தற்போது



2003 நவம்பர் 4]

தமிழகத்தில் ஆண்டிற்கு பத்திரப் பதிவுத் துறை மூலமாக எவ்வளவு வருவாய் வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், தனிக் கேள்வி போட வேண்டும் இதற்கெல்லாம். கன்னியாகுமரி மாவட்டம் பற்றிய கேள்வி இது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக, பத்திரங்களினுடைய பதிவுக் கட்டணம், தமிழகத்திலே அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசுக்கு அதிக அளவிலே வருமானத்தைத் தரக்கூடிய துறையாக பத்திரப் பதிவுத் துறை இருக்கிறது. இன்றைக்கு அலுவலகங்களை குறைப்பதால், மக்கள் நகரத்திற்கு வந்து பதிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. சரியான பேருந்து வசதிகள் இல்லாமல் அங்கு வருவதற்கு சிரமமாக இருக்கிற காரணத்தினால், என்னுடைய தொகுதியிலேயே, வேட்டவலம், பெண்ணாத்தூர் போன்ற இடங்களிலும் மற்றும் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் மூடப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதிக வருமானத்தைத் தரக்கூடிய இந்தத் துறையில் அந்த அலுவலகங்களை மூடாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக வருமானம் உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களை அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் மூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் மீது பாசமும் பற்றும் உள்ள அம்மா அவர்களின் ஆட்சியிலே பத்திரப் பதிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பத்திரப் பதிவுகளில் பெண்களுக்கென்று ஒரு முன்னுரிமை கொடுத்தோமானால், எந்தச் சொத்துக்களை பத்திரப் பதிவு செய்ய வேண்டுமானாலும் அந்தப் பெண்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு குறைத்து பத்திரப் பதிவு செய்யப்படும் என்றால், அந்தச் சொத்துக்கள் அனைத்தும் பெண்கள் பேரிலே மாறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அவர்களுக்கும் ஒரு பிடிதளமாகவும் இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபெருமாள் வீட்டிலே கேட்கச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் அதற்கு இடமிருந்தால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏப்ரல் மாதம் இந்தப் பத்திரப் பதிவுத் துறையிலே நிலங்களினுடைய விலையை நிர்ணயம் செய்யும் பொருட்டு வந்த அதிகாரிகள் சிவகாசி மாநகரிலே பொறுப்பானவர்களைப் பார்க்காமலும்,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 22, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**22—**

## அணை கட்டும் திட்டம்

***18729—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, மாம்பழத்தாறு அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆய்வில் உள்ளது.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்ற பேரவைத் தொகுதிக்குட்பட்ட வில்லுகுறி பேரூராட்சியில் மாம்பழத்தாறு அணை கட்டும் திட்டத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பிலும், பத்மநாபபுரம் தொகுதி மக்கள் சார்பிலும் என் இதயபூர்வமான நன்றியை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாம்பழத்தாறு அணை, கன்னியாகுமரி மாவட்டத்தின் மையப்பகுதியான பத்மநாபபுர சட்டமன்ற தொகுதியில் கட்டுவதன் மூலம், கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை தீர்வு செய்வதற்கும், பெரும்பாலான பகுதிகளில் விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவையையும் பூர்த்தி செய்யவும் முடியும். குறிப்பாக கல்குளம் தாலுகாவில் அமைந்துள்ள வில்லுகுறி, இரணியல், கல்குளம், தக்கலை, ஆழியர், கோதநல்லூர், குறுந்தங்கோடு ஆகிய வருவாய் கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான ஆயக்கட்டு நிலங்களுக்கு விவசாயம் செய்ய தேவையான தண்ணீர் கிடைக்கும். இந்தத் திட்டத்தின் மூலம் பத்மநாபபுரம் நகராட்சியில் நிலவும் குடிநீர் பற்றாக்குறையை முழுமையாக தீர்க்க முடியும். வில்லுகுறி அருகில் அமைந்திருக்கும் நாகர்கோவில் நகராட்சியில் நிலவும் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க அதன் உபரி நீரைப் பயன்படுத்திடலாம். அணை கட்டும் பகுதியைச் சுற்றிலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திர பிரசாத், கேள்வியோடு தொடர்பு இருக்கிற மாதிரி தெரியவில்லை.

[2003 நவம்பர் 4

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** விவரங்களை சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** அணை கட்டும் இடத்தின் நீர் கொள்ளளவு சரியாக சுமார் ஆயிரம் ஏக்கர். மேலும் அந்த நிலம் தற்போது அரசின் வருவாய்த் துறையில் இருந்து வருகிறது. ஆகவே, பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு விவசாயத்திற்கும், குடிநீர் தேவைக்கும் பயன்படுகின்ற இந்த மாம்பழத்தாறு அணை கட்டும் திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளதா? தற்போது நிதி ஒதுக்கீடு செய்துள்ள மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? பணி எப்போது தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வில்லுகுறி கிராமத்தின் அருகே வள்ளியாற்றின் உபநதியாகிய மாம்பழத்தாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்காக ரூ.9.50 கோடி அனுமதித்து, அரசாணை (நிலை) எண் 315, பொதுப் பணி (எஸ்-1) துறை, நாள் 3-6-1999-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் 63.80 ஏக்கர் விடுபட்ட முதல் போக விளை நிலங்களும், 44.82 ஏக்கர் விடுபட்ட இரண்டாம் போக விளை நிலங்களும் பாசன வசதி பெறும். தற்போதுள்ள ஆயக்கட்டு நிலங்களில் 8.83 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும். மேலும் எஞ்சியிருக்கும் மிகுதியான தண்ணீர் வரத்தை பத்மநாபபுரம், புத்தனூர் கால்வாயின் இரட்டைக்கரை கிளைக் கால்வாயின் மூலம் கோதையாறு பாசன அமைப்பில் சேமித்து அதில் 155 ஏக்கர் புன்செய் நிலங்களை இரண்டு போக நன்செய் நிலங்களாக மாற்றும் வகையில் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இதன்மூலம் 608.50 ஏக்கர் மூன்றாம் போக புன்செய் பயிருக்கு பாசனம் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூபாய் 25.80 கோடிக்கான திருத்திய மதிப்பீடு அரசின் ஆய்வில் உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமசந்திரன்,



2003 நவம்பர் 4]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-லே இருந்து இந்த மாம்பழத்தாறு அணை வருகிறது என்று அன்றைக்கு இருந்த அரசுகள் எல்லாம் சொல்லிக்கொண்டு இருந்தன. இப்போதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1999-லே அனுமதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஏறத்தாழ 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. பத்மநாபபுரம் நகராட்சி பகுதிகளிலேயும் மற்றும் அருகில் இருக்கிற பகுதிகளிலேயும் இருக்கிற குடிதண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இந்த அணை பயன்படும் என்று மக்கள் நம்புவதனால் இதில் cost profit ratio என்ற முறையில் பார்க்காமல் இந்த அணையை விரைவிலே குறைந்தபட்சம் ஓராண்டு காலத்திற்குள்ளேயாவது கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டம் நபார்டு வங்கியினுடைய அனுமதிக்காக எடுத்துச் செல்லப்பட்டது. நபார்டு வங்கியில் சில வரையீடுகள் இருக்கின்றன. குறிப்பாக ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு அதனுடைய வளர்ச்சிக்காக அவர்களிடமிருந்து நாம் நிதியைப் பெறவேண்டுமென்றால் 1.75 இலட்சம்தான் அவர்கள் தருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆனால் இந்த மாம்பழத்தாறு அணை நீர்த்தேக்கத்தைப் பொறுத்தமட்டில் ஒரு ஹெக்டேருக்கு 9 இலட்சம் செலவாகிற ஒரு சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு நபார்டு வங்கி அவர்களுடைய நிதியைத் தர மறுத்து விட்டார்கள். இருந்தாலும் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்வதற்கு அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழத்தாறு அணை கட்டப்படும் என்கிற உத்தரவாதத்தை அளித்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்த மாவட்டத்திலே மிகப் பெரிய அணைகளாக இருக்கக்கூடிய பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்றவற்றில் தூர் வாரப்படுமேயானால் அதிகமான தண்ணீர் கொள்ளளவு ஏற்பட வாய்ப்பு இருக்கும். கிட்டத்தட்ட 100 ஆண்டுகளைத் தாண்டிய

[2003 நவம்பர் 4

அணை பேச்சிப்பாறை அணை. அந்த அணையில் இதுவரைக்கும் தூர் வாரப்படவில்லை. எனவே, கிட்டத்தட்ட பாதி அணை தூராலே நிறைந்து இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை தூர் வாரினால் இன்னும் ஒரு பேச்சிப்பாறை அணையினுடைய தண்ணீர் கொள்ளளவு அதிகமாக வருவதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது. அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்திலே உலக்கை அருவி அணைத் திட்டம் வரும் என்று வெகு நாட்களாக சொல்லி வருகிறார்கள். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா? அதுவும் நடைமுறைக்கு வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ், தனிக் கேள்வி போடுங்கள்.

*வினா எண் 23, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு நிதி அமைச்சர்.*

**23—**

### தொகுதி எல்லையைச் சீரமைத்தல்

***37716—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

*மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 12 ஊராட்சிகளை திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் சேர்த்து தொகுதி எல்லையைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளை எல்லை மறுவரையறை செய்ய இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 84-வது சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, எல்லை மறுவரையறை சட்டம் 2002 பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி அமைக்கப்பட்டுள்ள எல்லை மறுவரையறை ஆணையம், உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. குல்தீப் சிங் அவர்களின் தலைமையில் 04-07-2002 முதல்*



2003 நவம்பர் 4]

*செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலுள்ள மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாற்றி மறுவரையறை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.*

*சட்டமன்றத் தொகுதிகளின் மறுவரையறை செய்யும் அதிகாரம், எல்லை மறுவரையறை ஆணையத்தின் வரம்பிற்குட்பட்டது. எனினும், இந்த ஆணையத்தில் அலுவல் சாரா உறுப்பினராக உள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் மூலமாகவும் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து ஒருங்கிணைப்பு உறுப்பினர்களாக முன்மொழியப்பட்டுள்ள சட்டப்பேரவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள் மூலமாகவும் இத்தகைய பரிந்துரைகள் மேற்கொள்ளப்படலாம்.*

*முற்பகல் 10-20*

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்பாள் திசைநோக்கி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதிக்கு ஏற்கெனவே 3 ஒன்றியங்கள், திருபுவனத்தைச் சேர்த்து; பேரவைத் தலைவர் அவர்களுக்கு திருமங்கலத்திலே ஒரு ஒன்றியம்; கள்ளிக்குடியிலே ஒரு ஒன்றியம். ஆகவே, என்னுடைய திருப்பரங்குன்றம் ஒன்றியத்திலே உள்ள 12 ஊராட்சிகளை— திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அந்த 12 ஊராட்சிகளை— திருப்பரங்குன்றம் தொகுதியில் சேர்ப்பதற்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் நாவினால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத்திலே இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்.

*வினா எண் 24, திரு. வெ. ஏழுமலை. மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**24—**

### தகவல் தொழில்நுட்பவியல்

***17216—திரு. வெ. ஏழுமலை:**

*மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2003 நவம்பர் 4

சென்னையை தகவல் தொழில்நுட்பத்தில், இந்தியாவிலேயே முதலிடமாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையை தகவல் மற்றும் தொழில்நுட்பத்தில், இந்தியாவிலேயே முதலிடமாக்க அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு நன்றி. செஞ்சி போன்ற மிகமிகப் பின்தங்கிய பகுதிகளில், தகவல் தொழில்நுட்ப மையங்களைத் தொடங்கினால், இப்பாடப் பிரிவில், படித்த, வேலை இல்லாமல் இருக்கும் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். அந்தப் பகுதியும் முன்னேறும். எனவே, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, If you ignore computer, computer will ignore you என்று சொல்வார்கள். எனவே, வருங்காலத்தில், கணினி கற்பது மிகமிக அவசியம் என்கிற நிலையில், கணினிதான் வாழ்க்கையினுடைய எல்லா அம்சங்கள் என்பதை உணர்ந்த, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு, பள்ளிகளிலே, கணினிக் கல்வி கற்பிக்கப்படுவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு, இன்றைக்குப் பள்ளிகூடங்களிலே கணினிக் கல்வி கற்பிக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையிலே, ஒரு கொள்கை— முதன்முதலாக இந்தியாவிலேயே தகவல் தொழில்நுட்பத்திற்கு என்று ஒரு கொள்கை—வகுத்த ஒரு மாநிலம் என்றால், நம்முடைய தமிழ்நாடு மட்டும்தான். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கொள்கையை வகுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம்கூட அது சுற்றறுப்பப்பட்டிருக்கிறது. எனவே, அதிலே தமிழ்நாடு சென்னையை Destination of choice with Chennai என்கிற வகையிலே சென்னையை மையமாகக் கொண்டு,



2003 நவம்பர் 4]

அனைத்து தகவல் தொழில்நுட்பத்திலே முதன்மையான ஒரு மாநிலமாக தமிழ்நாடு உருவாக வேண்டும் என்கின்ற ஓர் இலட்சிய முனைப்போடு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளிலோ, வேறு எந்தவகையிலோ வேலைவாய்ப்பு இல்லாத, மழையை மட்டுமே நம்பியுள்ள செஞ்சி போன்ற பகுதியில், 'டைடல் பார்க்' போன்ற அமைப்பை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே என்னுடைய பதிலில் நான் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். முதற்கட்டமாக Tier-II cities என்ற இரண்டாம் கட்ட பெரு மாநகரங்களிலே, Tidel-II போன்ற அந்த I.T. தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. எனவே, 'குக்' கிராமங்களிலே எல்லாம் ஆரம்பிப்பது என்பது—செஞ்சி போன்ற தாலுகாவிலே எல்லாம் ஆரம்பிப்பது என்பது, தற்போது சாத்தியம் இல்லை. அதற்காகத்தான், R.A.S.I. என்கின்ற ஒரு திட்டம் இருக்கிறது. Rural Access Services through Internet என்கின்ற திட்டம். இந்தத் திட்டத்தின்படி, ஒவ்வொரு கிராமத்திலும்—கிட்டத்தட்ட தமிழ்நாட்டிலே 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன; எனவே அந்தக் கிராமத்திலே இருக்கின்றவர்கள் ஒரு தகவல் மையம், ஒரு தகவல் பெட்டி Kiosk-ஐக் கொண்டு, உலகத்தின் எந்த மூலையோடும் தொடர்புகொள்ளக்கூடிய அளவுக்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது அரசாங்கத்தினுடைய கடமை என்பதை உணர்ந்து மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், இந்த R.A.S.I. திட்டத்தை, முதற்கட்டமாக 10 மாவட்டங்களுக்கு அமல்படுத்துவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையிலே, செஞ்சியையும் அந்தத் திட்டத்திலே சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதிலளிக்கையிலே இந்தக் கணினிக் கல்வி என்பது, ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமானது என்ற கருத்தை இங்கே வலியுறுத்திச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே, வளர்ந்த குடும்பங்களிலே, வசதி படைத்தவர்கள் குடும்பங்களிலே L.K.G.—அதற்குக் கீழே இருக்கக்கூடிய Pre K.G. செல்லக்கூடிய குழந்தைகள்கூட கணினிக் கல்வியைத் தரமாகப் பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஏழையெளிய குழந்தைகள் வாழக்கூடிய கிராமங்களிலே, அதிலும் குறிப்பாக அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலே, கணினிக் கல்வி படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. பள்ளிகளிலேயும் அறிமுகப்படுத்தி, நிறைவேற்றுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பள்ளிகளிலே, எந்த அளவிலே—உயர்நிலைப் பள்ளிகளிலோ, நடுநிலைப் பள்ளிகளிலோ, மேல்நிலைப் பள்ளிகளிலோ, எந்த அளவிலே—அமைக்க இருக்கிறீர்கள்? அதிலும் குறிப்பாக அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலே அவசியம் அமைக்க வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, அதை எந்த வகையிலே அமலாக்கப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

அதோடு R.A.S.I. திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். கிராமப்புறங்களிலே தகவல் மையம். கிராமப்புறங்களிலே தகவல் மையத்தின் மூலமாக அறிந்துகொள்வதற்கு 10 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். 10 மாவட்டங்கள் என்பதைவிட எல்லா மாவட்டங்களிலும், எல்லா கிராமங்களிலும் நடப்பு ஆண்டிலே அரசு அதை நிறைவேற்றுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2 கேள்விகளை கேட்டு இருக்கின்றார்கள். ஒன்று, கணினி கல்வியை ஆரம்ப வகுப்பு முதல் கொண்டுவருவது. இப்போது நடைமுறைப்படுத்துகின்ற அந்த கணினி கல்வி எந்த அளவில் நடத்தப்படுகிறது என்ற ஒரு கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகளிலே கணினி கல்வி அரசின் சார்பிலே நடத்தப்படுகின்றது. எனவே, ஆரம்பக் கட்டத்தில் இதை தனியார் எப்படி எல்.கே.ஜி. அளவில் கொண்டு வருகிறார்களோ, அதேபோன்று





கொண்டுவர வேண்டுமென்ற ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். நம்முடைய கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட இங்கு இருக்கின்றார்கள். எனவே, இது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும். இது நல்ல கருத்து.

R.A.S.I. திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே முதன்மையாக செயல்படுத்துகின்ற ஒரு திட்டம். எனவே, எடுத்த உடனேயே எல்லா மாவட்டங்களிலும் successful-ஆக வருகின்ற ஒரு சூழ்நிலைதான் உள்ளது. விரிவுபடுத்துவதை இரண்டாம் கட்டமாக மற்ற மாவட்டங்களுக்கு அதை விரிவுபடுத்த முடியும். எனவே, முதல் 10 மாவட்டங்களில் அது எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றது. வருகின்ற காலங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை ஏற்று அரசு அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்புத்திற்கு என்றே சென்னை தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறை, ஐ.ஏ.எஸ். அதிகாரி அவர்களுடைய தலைமையில் 5-10-1998-ல் ஏற்படுத்தப்பட்டது. அதேபோல 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் மென்பொருள் பூங்கா சென்னை தரமணியில் உருவாக்கப்பட்டு 4-7-2000 அன்று திறந்துவைக்கப்பட்டது. இந்த தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையில் எங்களுடைய தலைவர் முன்னாள் முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், தகவல் தொழில்நுட்பத்தைத் தெரிந்துகொள்ளாத இன்றைய மனிதன், நேற்றைய மனிதன் ஆகிவிட்டான் என்ற கருத்தைக் கூறி, மாநிலம் முழுவதும் உள்ள 1200 மேல்நிலைப் பள்ளிகளிலே 11-வது மற்றும் 12-வது வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் 187 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது. அது குறித்து நீதிமன்றத்திலேகூட ஒரு வழக்கு வந்தபோது, அந்த நீதிமன்றத்தில் அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்; என்ன கேள்வி என்று கேளுங்கள்.

[2003 நவம்பர் 4

**திரு. இ. புகழேந்தி:** அதாவது, தகவல் தொழில்நுட்பத் துறை மிகச் சிறப்பான முறையிலே கடந்த ஆட்சி காலத்திலே பயன்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே முதன்மை நிலை அடையக்கூடிய நிலையை உருவாக்கி வைத்து இருந்தார்கள்; தகவல் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்த டானிடெக் எனும் தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை அரசு ஏற்படுத்தியது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, இது விவாதமல்ல. என்ன கேள்வி என்பதை கேளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** அப்படி செயல்பட்டுக் கொண்டிருந்த அந்தத் துறையின் இன்றைய நிலை எந்த அளவிற்கு உயர்வு நிலையை அடைந்து இருக்கிறது? கடந்த ஆட்சி காலத்திலே கொண்டுவந்து நிறுத்தப்பட்டு இருக்கிற அந்த மென்பொருள் ஏற்றுமதி நிலை, 1999-2000 ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதி அளவு 1914 கோடி ரூபாயாக உயர்ந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் இரண்டாவது டைடல் பூங்கா அமைப்பதற்காக அரசு நடவடிக்கை எடுப்பதாக கூறியிருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே உருவாக்கப்பட்ட அந்த நிலைகள் எல்லாம், செயல்பாடுகள் எல்லாம் எந்த நிலையில் இருக்கின்றன? ஏன், 2½ வருட காலம் இந்த அரசு தாமதித்துக் கொண்டிருக்கிறது? அதற்கு என்ன காரணம்?...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன காரணம் என்பதோடு உட்காருங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** எதிர்கால மாணவர்களுக்கு கல்வி அளிக்க (குறுக்கீடு) இந்த அரசு தடையாக......

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீண் சண்டை தேவை இல்லை என்றுதான் நான் கருதுகின்றேன். அவரே வீணாக வம்புக்கு இழுத்துவிட்டார். எனவே, அவர் வம்புக்கு இழுத்ததற்காக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தை இந்த மாதிரி பயன்படுத்தக் கூடாது. கேள்வி நேரத்தில் என்ன கேள்வி என்பதைக் கேட்க வேண்டும். கடந்த ஆட்சியில் இப்படி நடந்து இருக்கிறது; இந்த ஆட்சியிலே என்ன செய்து இருக்கிறீர்கள் என்று கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் எல்லா புள்ளிவிவரங்களையும் வாசித்து, அதற்கு அமைச்சரும் திரும்ப புள்ளிவிவரங்களை எல்லாம் சொல்ல வேண்டிய நிலைமை வரும் அல்லவா?



2003 நவம்பர் 4]

**திரு. இ. புகழேந்தி:** கேள்வியின் நோக்கமே, கடந்த ஆட்சியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியின் நோக்கமல்ல; கேள்விதான் வேண்டும். அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே என்னுடைய பதிலில் விரிவாகவே நான் சொல்லி இருக்கிறேன். வேண்டுமென்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த Graph-ஐக் கேட்டால் நிச்சயமாக அதை நான் தருவதற்குத் தயாராக இருக்கின்றேன். மத்திய தகவல் தொழில்நுட்ப Graph-போடு அதை compare செய்துகொள்ளலாம். இதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. எனவே, மென்பொருள் ஏற்றுமதியில் எந்த அளவிற்கு வளர்ச்சி பெற்று இருக்கின்றது? 2003-2004 ஆம் ஆண்டில், அந்த நிதி ஆண்டில் கிட்டத்தட்ட 9 ஆயிரம் கோடி அகில இந்திய ரீதியிலே நம்முடைய மாநிலம் மட்டும் 30 சதவிகிதம் அளவிற்கு ஏற்றுமதி செய்கின்ற நிலைமை. ஆனால் உங்களுடைய ஆட்சியில் 1998-2001-ல் அகில இந்திய ரீதியிலே 11 சதவிகிதம் வளர்ச்சி. இது எந்த அளவிற்கு வித்தியாசம்? 4 ஆண்டு காலத்திலே, உங்கள் ஆட்சியில் 4%, 6%, 11%, 11% ஆக இருந்தது. ஆனால் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் நாங்கள் 14%, 17%; அப்படியானால் எந்த அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதியிலே வளர்ச்சி கண்டுள்ளது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு என்பதற்கு இதைவிட ஓர் உதாரணம் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனேதான், Bank Office என்று சொல்லக்கூடிய World Bank, ABN Amro, Standard Chartered, Citi Bank போன்ற பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் எல்லாம்கூட இங்கே வந்தன. உங்களுடைய ஆட்சியிலே எந்த ஒரு பன்னாட்டு நிறுவனம் வந்தது? உங்களால் சொல்ல முடியுமா? சொல்ல முடியாது. அதேநேரத்திலே டைடல்-ஐ உருவாக்கினீர்கள். ஆனால் அந்த டைடல் மூலமாக அன்றைக்கு மென்பொருள் ஏற்றுமதியினுடைய அளவு என்ன? அதற்காக பல்வேறு முயற்சிகளை நீங்கள் எடுத்தீர்களா? ஆனால் இன்றைக்கு கிட்டத்தட்ட நம்முடைய அரசினுடைய கொள்கை, மென்பொருள் ஏற்றுமதி, மின் ஆளுமை, மின் தயார் நிலை—இந்த மூன்று நிலைகளிலும் இன்றைக்கு இந்தியாவிலேயே

முன்னோடியாக இருக்கிற நிலைமை. அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் International மற்றும் நேஷனல் அளவில் எந்தவொரு கண்காட்சி நடந்தாலும் சரி, CeBIT ASIA, GITEX *2003*, CeBIT Hannover, SMAU, Italy, Electronica Munich, Germany, Comdex, USA Connect 2003, Bangalore I.T. Com, GITEX Hyderabad, Indiasoft இந்த exhibitions-லே participate பண்ணுகிற அந்த நிறுவனங்களுக்கு 30 சதவிகிதம் அளவிற்கு மானியம் அளித்து நம்முடைய மென்பொருள் ஏற்றுமதியை ஊக்கப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகள் உங்களுடைய காலத்தில் எடுக்கப்பட்டனவா? அப்படி இல்லை.

சமீபத்திலேகூட ஒரு வாரத்திற்கு முன்பாக 'இந்து' பத்திரிகையிலே நீங்கள் பார்த்திருக்க முடியும். ஆந்திரா ஒரு காலத்திலே முன்னிலையில் இருந்தது, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே. ஆனால் இன்றைக்கு ஆந்திராவினுடைய நிலைமை. என்ன? இன்றைக்கு அது தகவல் தொழில்நுட்பத்திலே பின் நோக்கி போய்விட்ட ஒரு நிலைமை. இன்றைக்கு கர்நாடகத்திற்கு 31 மார்க்; நமக்கு 30 மார்க். இன்றைக்கு எந்த அளவிற்கு அவர்கள் பிரிக்கின்றார்கள்? முன்னோடிகள்—leaders. இந்திய அரசு, மின் தயார் நிலைமையில் 6 வகையான தலைப்புகளிலே மாநிலங்களை பிரிக்கின்றது. ஒன்று, முன்னோடிகள், இரண்டு, முனைப்பான முன்னோடிகள், அதாவது, leaders, aspiring leaders, எதிர்நோக்கர்கள்—expectants, சராசரி சாதனையாளர்கள்—average achievers, சராசரிக்கும் கீழே உள்ள சாதனையாளர்கள்—below average achievers, வெறும் சாதனையாளர்கள். எனவே, அன்றைக்கு 6-வது இடத்திலே நீங்கள் வெறும் சாதனையாளர்களாகத்தான் இருந்தீர்களேயொழிய முன்னோடிகளாக இல்லை. ஆனால் இன்றைக்கு அகில இந்திய ரீதியிலே முன்னோடியான ஒரு முதல் மாநிலம் தமிழ்நாடு என்கிற பெருமையை (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் லவர்:** ல்லை, இல்லை. இந்த அளவிற்கு கொடுத்தால்தான் மு க முடியும். திரு. சுந்தரம். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.





**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத்தில் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்களுடைய ஆட்சித் திறமையைப் பற்றி, தகவல் தொழில்நுட்பத்திலே தமிழகம் முன்னிலையில் இருப்பதைப் பற்றி மேலைநாடுகள் எல்லாம் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. அந்தவிதத்திலே இன்றைக்கு வெளிநாடுகளிலே தேவையான வேலைகளை நமது நாட்டிலே செய்து, அவற்றைச் செயற்கைக்கோள் மூலமாக அயல்நாடுகளுக்கு அனுப்புகின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது, Business Process Outsourcing அதாவது, வெளிநாட்டினுடைய அன்றாட நடவடிக்கைகளை நம்முடைய நாட்டிலே இருந்துகொண்டு, இங்கே வேலை செய்து அவர்களுக்குத் தேவையான தகவலை அனுப்புகின்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். எனவே, Business Process Outsourcing மூலமாக வருங்காலங்களில் நிச்சயமாக நம்முடைய படித்த தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, ஒரு இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கின்ற ஒரு வாய்ப்பை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். எனவே, டைடல்-2 உருவாவதன் மூலமாக சென்னையிலே நிச்சயமாக ஒரு இலட்சம் பேருக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் B.E.(Computer Science) படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற ஒரு நிலைமை, விரைவிலே உருவாக இருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**25—**

### கோயில் குடமுழுக்கு

***27326—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், லஞ்சமேடு கிராமத்திலுள்ள பிரசித்தி பெற்ற வீரமாகளிகர் திருக்கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்திட, அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த லஞ்சமேடு கிராமத்தில் வீரமாகளிகர் என்ற திருக்கோயில் இருப்பதாக வினாவில் இருந்தது. அப்படி இல்லை. அருள்மிகு வீரமாகாளி என்னும் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்படாத திருக்கோயிலாகும் என்பதால், இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்திடவோ, அதற்காக நிதியுதவி வழங்கிடவோ இந்து சமய அறநிலைக் கொடைகளின் சட்ட விதிகளில் வழிவகையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, இலுப்பூர் வட்டம் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், லஞ்சமேடு வீரமாகாளி அம்மன் திருக்கோயில் திருப்பணிக்கு அறநிலைக் கொடைகளின் சட்ட விதிகளில் வழிவகை இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவித்துள்ளார்கள். ஆனால் இக்கோயில் அப்பகுதியைச் சார்ந்த பெரும்பான்மையான மக்களால் வழிபடக்கூடிய ஒரு திருக்கோயில். எனவே, இத்திருக்கோயில், புதுப்பித்துக் கட்டப்படுவதற்கு கிராம மக்கள் அளிக்கக்கூடிய நிதியோடு, கூடுதல் நிதியாக அரசு ஏதாவது நிதி வழங்குவதற்கும் இக்கோயிலில் ஒருகால பூஜை நடைபெறுவதற்கும், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற உன்னத அறத்தை அன்னதான திட்டத்தின்மூலம் அகிலத்திற்கு உணர்த்திட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய [illegible]வம் [illegible]ம்மா அவர்களின் நல்லாட்சியில், அரசு ஆவன செய்யு[illegible] என்ப[illegible]தத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு பல ஆலயங்கள் இன்றைக்குத் திருப்பணி செய்யப்பட்டு இருக்கின்றன. உதாரணத்திற்காக திருத்தணி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டில் உள்ள சந்தானகோபாலசாமி என்பது கார்வேட் அரசர்களால் 1628 ஆம் ஆண்டில் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதுவரையில் அது திருப்பணி செய்யப்படாமல் இருந்ததை தற்சமயம் அந்தப் பகுதி பொதுமக்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே சொல்லியதற்கிணங்க, இன்றைக்கு அந்தக் கோயில் அறநிலையத் துறை மூலமாக புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு ரூ.15 இலட்சம் செலவு செய்யப்படுகிறது. அதை இன்றைக்குக்கூட பத்திரிகைகளில் பார்த்து இருப்பீர்கள். 6-11-2003 அன்று குடமுழுக்கு நடைபெற உள்ளது. இதற்குக்கூட அம்மா அவர்களினுடைய அரசு செய்யும் நல்ல காரியத்தை முன்னிட்டு அருகில் இருக்கின்ற பெங்களூரைச் சார்ந்த நாகராஜ், இங்கே பெங்களூரைச் சார்ந்த பங்காருராஜ், பெங்களூரைச் சார்ந்த தொழில் அதிபர் சத்தியராஜ் போன்றவர்களெல்லாம் நன்கொடையாகக் கொடுத்து அந்தக் கோயில் திருப்பணிக்கு ரூ.15 இலட்சத்தைச் செலவு செய்து 6 ஆம் தேதி குடமுழுக்கு நடைபெற இருக்கின்றது. அந்த அடிப்படையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்ட அந்தத் திருக்கோயிலுக்கும், நன்கொடையாளர்கள்மூலம் திருப்பணி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் ஒரு கால பூஜை வேண்டும் என்று கேட்டார்கள். அம்மா அவர்களுடைய ஆட்சியில் எந்த ஒரு கோயிலும் ஒருகால பூஜை செய்யப்படாத நிலைமையில் இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்குமேயானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒருகால பூஜைக்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. ந. கணபதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[2003 நவம்பர் 4

26—

## அரசுக் கல்லூரி அமைத்தல்

***19089—திரு. ந. கணபதி:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வானூர் தொகுதியில் அரசுக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசுக் கல்லூரிகள் அனைத்தும், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுவிட்ட நிலையில், வானூர் என்னும் இடத்தில் புதிதாக பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி தொடங்குவது தொடர்பாக, வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், தேவையின் அடிப்படையில் பரிசீலித்து பரிந்துரை செய்தால், புதிய கல்லூரி தொடங்குவது குறித்து அரசால் முடிவு எடுக்கப்படும். அதேபோல சுயநிதி அடிப்படையிலும் கல்லூரி தொடங்க, கல்லூரி இயக்குநருக்கு முறையாக விண்ணப்பித்தால் அரசு கொள்கை முடிவின் அடிப்படையில் சுயநிதிக் கல்லூரி தொடங்குவது குறித்தும், அதற்கு அனுமதி அளிப்பது குறித்தும் முடிவு எடுக்கும்.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வானூர் தொகுதியில் 10-க்கும் மேற்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ள மாணவ மாணவிகள் படிக்கின்றனர். அவர்கள் சுமார் 50 கிலோ மீட்டருக்கு மேல் வெளியே சென்று கலைக் கல்லூரியில் படிப்பதற்கு திண்டிவனம், கடலூர் அல்லது பக்கத்து மாநிலம் பாண்டிச்சேரிக்குச் சென்று படிக்க வேண்டி உள்ளதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அடுத்த நிதியாண்டிலாவது அப்பகுதி மாணவ மாணவியர்கள் 100 சதவிகிதம் கல்வியறிவைப் பெற அரசு கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



2003 நவம்பர் 4]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூர் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில் இரண்டு அரசுக் கலைக் கல்லூரிகள் மற்றும் 7 சுயநிதிக் கல்லூரிகள் அமைந்து உள்ளன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட மாணவ மாணவியர்களின் உயர்கல்வித் தேவையை நிறைவு செய்வதாக இருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம், தேவையின் அடிப்படையில் அரசுக்குக் கருத்துரு அனுப்பினால் அது குறித்து அரசு, கொள்கையின் அடிப்படையில் முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

27—

## அரசு அருங்காட்சியகம்

***30608—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் அரசு அருங்காட்சியகம், நவீன தொழில் நுட்பத்துடன் புதுப்பிக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை அருங்காட்சியகக் கட்டடத்தை அதன் பழமை மாறாமல் தொல்லியல் முறைப்படி பலப்படுத்தி பாதுகாக்க தேவையான முழு மதிப்பீட்டு விவரம் பெற்று நல்லமுறையில் காட்சிக்கூடங்களை நவீனப்படுத்த உரிய திட்டத்தை, துறை, அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது. அத்தகைய முழுமையான வரைவு, துறையிடமிருந்து அரசுக்குக் கிடைக்கப் பெற்றதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2003 நவம்பர் 4

முற்பகல் 10-40

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு இந்த நடவடிக்கைக்காக நன்றியைத் தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் அரசு அருங்காட்சியகம் என்பது ஏறத்தாழ 93 ஆண்டுகளுக்கு முன்பாக, 1910 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட பழம் பெருமை வாய்ந்த, பவழ விழா கண்ட அருங்காட்சியகம் ஆகும். விலை மதிப்புள்ள வெண்கலச் சிலைகளும், 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கற்சிலைகளும், தங்க நாணயங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்ற மிகப்பெரிய Multi-purpose Museum என்று சொல்லக்கூடிய இந்த அருங்காட்சியகம், புதுக்கோட்டையிலே இயங்கி வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் சென்னையிலே உள்ள எழும்பூர் அருங்காட்சியகம், 150 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அந்த அருங்காட்சியகம், ஏறத்தாழ 4½ கோடி ரூபாய் செலவிலே புதுப்பிக்கப்பட்டு, அம்மா அவர்கள் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு உதவியதோடு, பழம் பெருமை வாய்ந்த நம்முடைய கலை பண்பாட்டுத் துறைக்கு இன்றைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதேபோன்று நம்முடைய புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தையும் அரசு புதுப்பித்துத் தரவேண்டும் என்பதைப் பணிவோடு கேட்டுக்கொண்டு, தற்போது இந்த அருங்காட்சியகத்திலே பார்வையாளர்களுக்கான கட்டணம் ரூ.15 என்ற அளவிலே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை, மற்ற மாவட்டங்களைப்போல, பள்ளி மாணவர்களுடைய நலன் கருதி, பார்வையாளர்களுடைய நலன் கருதி, ரூ.5 அல்லது அதுபோன்ற ஒரு குறைவான தொகையை நிர்ணயிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1851ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை அருங்காட்சியகம் இவ்வளவு காலமாக கேட்பாரற்ற நிலையிலே இருந்த நிலையை மாற்றி, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11-வது நிதி கமிஷனின் உதவியைப் பெற்று சுமார் 4½ கோடி ரூபாய் அளவிலே அந்த அருங்காட்சியகத்தைப் புதுப்பித்து, இன்றைக்கு வெளிநாட்டுப் பயணிகள்கூட வந்து அதிக அளவிலே அதை



2003 நவம்பர் 4]

பார்வையிடுவதற்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலே அதைச் செய்திருக்கிறார்கள். அந்தவகையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய இந்த புதுக்கோட்டை அருங்காட்சியகம் 1910 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது, உள்ளபடியே இது ஒரு பல்நோக்கு மண்டல அருங்காட்சியகமாகும். மண்ணியல், விலங்கியல், மானிடவியல், கலை மற்றும் தொல்லியல் ஆகிய இயல்புகளை உள்ளடக்கிய காட்சிப் பொருள்கள் மட்டும் சுமார் 10 ஆயிரத்திற்கு மேல் அங்கே வைக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியப் படிமங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்தவகையிலே சென்னைக்கு அடுத்தாற்போல இரண்டாவது பழமையான அருங்காட்சியகம் இது. இதைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னால், புத்தாக்கம் செய்ய வேண்டுமென்று சொன்னால் 30 இலட்சம் ரூபாய் நிதி தேவைப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இப்படிப்பட்ட அருங்காட்சியகங்களைப் புத்தாக்கம் செய்வதற்கும், காப்பகம் செய்வதற்கும் 12-வது நிதி கமிஷனுக்கு 50 கோடி ரூபாய்க்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த நிதியைப் பெற்று இந்த அருங்காட்சியகம் நிச்சயமாக புத்தாக்கம் செய்யப்படும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற வரிகளுக்கேற்ப புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கேட்கின்ற கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகின்றன என்றவகையிலே மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலுக்கு என் நன்றியை மாவட்ட மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றிக்கு நன்றி. ஏற்கெனவே அவர் கேட்ட கேள்வியில், தற்போது 15 ரூபாய் நுழைவுக் கட்டணம் வசூலிப்பதாகச் சொன்னார்கள். உள்ளபடியே அது அதிகம் என்பதை நம்முடைய தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணர்ந்து, அதை 5 ரூபாயாகக் குறைக்க ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இனி, புதுக்கோட்டை அருங்காட்சியகத்திற்கு 15 ரூபாய் நுழைவுக் கட்டணம் என்பதை மாற்றி, 5 ரூபாய் என்ற அளவிற்கு அது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 நவம்பர் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எழும்பூரிலே உள்ள அருங்காட்சியகம் 11-வது நிதி கமிஷனுடைய பரிந்துரையின்பேரில் ரூ.4½ கோடி செலவிலே புதுப்பிக்கப்பட்டதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்த அருங்காட்சியகத்தின் பக்கத்திலே இருக்கின்ற National Art Gallery சற்று சிதிலம் அடைந்த நிலையிலே இருக்கின்றது. இந்த தேசிய கலைக்கூடத்தையும் புதுப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கையைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை அருங்காட்சியகம் ஆரம்பிக்கப்பட்டு 151-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய நேரத்தில் உலகப் புகழ் மிக்கதும், பழமை வாய்ந்ததுமான அந்த National Art Gallery-ஐப் பாதுகாத்துப் புதுப்பிக்க மத்திய அரசினுடைய சிறப்பு நிதி ஒதுக்கீட்டைக் கேட்பது என்று முடிவு செய்து, அதற்காக 6 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அந்த நிதி 12-வது நிதி கமிஷன் மூலம் பெறப்பட்டு நிச்சயமாக அந்த National Art Gallery புதுப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருங்காட்சியகத்தில் நுழைவுக் கட்டணத்தைக் குறைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அந்த அருங்காட்சியகம் புதுக்கோட்டையில் ஓர் ஓரத்தில் இருக்கிறது. அந்தப் பகுதிக்கு நகர்ப்புற பேருந்து வசதி எல்லாம் சற்றுக் குறைவாக இருக்கிறது. ஆகவே அந்த அருங்காட்சியகத்தை நகரத்தின் மத்திய பகுதியிலே அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2003 நவம்பர் 4]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை அருங்காட்சியகத்தின் அந்தக் கட்டடம் பழமை வாய்ந்தது. அந்தப் பழமை மாறாமல், தொல்லியல் முறைப்படி பலப்படுத்தி அது பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கம். எனவே, அந்த அருங்காட்சியகத்தில் இருக்கின்ற அருங்காட்சிப் பொருட்களை வேறு இடத்திற்கு மாற்றுவதிலே எந்தப் பிரயோசனமும் இல்லை. எனவே அந்தப் பழமையான கட்டடத்தைப் பலப்படுத்தி, புத்தாக்கம் செய்து, அது சிதிலமடைந்திருந்தால்கூட அதைப் பாதுகாத்து அதே இடத்திலே அந்த அருங்காட்சியகத்தை அமைக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். எனவே, இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *28*, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**28—**

**புதிய அவசர ஊர்தி**

***8144—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய அவசர ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டது.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர ஊர்தி வழங்கியதற்காக இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர்

[2003 நவம்பர் 4

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அருப்புக்கோட்டை தொகுதியில் காரியாபட்டி வட்டார அரசு மருத்துவமனை உள்ளது. அந்த வட்டார மருத்துவமனை, மதுரை—தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. அந்த மருத்துவமனைக்கு அவசர ஊர்தி கிடையாது. அந்த வட்டார மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் பேரவைத் தலைவர் வாயிலாக சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று விருதுநகர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய வட்டம், வட்டம் சார்ந்த அருப்புக்கோட்டை, இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், சிவகாசி, திருச்சுழி, காரியாபட்டி ஆகிய அனைத்து மருத்துவமனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே. சிவசாமி.

**திரு. கே.கே. சிவசாமி:** தொகுதி மக்கள் சார்பாக அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**29—**

**நெற்களம் அமைத்தல்**

***21838—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தென் இலுப்பை கிராமத்தில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?



2003 நவம்பர் 4]

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தென் இலுப்பை கிராமத்தில் அடுத்த நிதியாண்டில் நெற்களம் அமைப்பது குறித்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, வந்தவாசி முழுமையாக விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய ஒரு பகுதி. அதிலும் வறட்சியால் மிகவும் கொடூரமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கை—தென் இலுப்பை கிராமத்தில் கிட்டத்தட்ட 300 ஹெக்டேர் நிலப் பரப்பிலே விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கிராமத்தில் நூத்தம்பாடி என்கிற மதுராவும் இருக்கிறது—கிட்டத்தட்ட 5 ஆயிரம் விவசாயிகள் பயன்படக்கூடிய அந்தப் பகுதியிலே நெற்களம் இல்லையென்பது நீண்ட நாளைய கோரிக்கையாக இருக்கிறது. அடுத்த நிதியாண்டிலே அது பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டிலே அதை எடுத்துக்கொள்வதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புவதோடு, வந்தவாசி, கோரைப் பாய் தொழிலுக்கு மிகவும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன், நெற்களம் பற்றி மட்டும்தான் கேட்க வேண்டும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலர்களம் கட்டுவதற்கு இடம் தயார் நிலையில் இருக்கும்பட்சத்தில் தென் இலுப்பை கிராமத்தில் அடுத்த ஆண்டில் கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேட்கிற அந்த இடத்தைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அப்படி இடம் தருகிறபட்சத்தில் இந்த

[2003 நவம்பர் 4

ஆண்டிலே அதைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே கட்டிக் கொடுப்பதற்கு அந்த விற்பனை வாரியத்தில் நிதி இருக்க வேண்டும். ஆகவே அடுத்த ஆண்டு கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**30—**

### குளிர்பதன கிடங்கு

***22882—திரு. வி. ஜெயராமன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியில் தக்காளி மற்றும் பலவகை பச்சைக் காய்கறிகளை சேமித்து வைக்கும் குளிர்பதன கிடங்குகள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சியில் குளிர்பதன கிடங்கில் இருப்பு வைத்து விற்பனை செய்யும் அளவிற்கு தக்காளி மற்றும் காய்கறிகள் வரத்து இல்லை. எனவே, அங்கு குளிர்பதன கிடங்கு அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்கி வெற்றிநடை போட்டுவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, பொள்ளாச்சி என்பது தென் இந்தியாவிலேயே மிகப் பெரிய காய்கறிச் சந்தையைக் கொண்டிருக்கிற ஒரு பகுதி என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். பொள்ளாச்சியிலே மட்டும் காய்கறிகள் விளைவதில்லை. பொள்ளாச்சியைச் சுற்றியுள்ள 50 கிலோமீட்டர் பகுதியிலே விளைகிற



2003 நவம்பர் 4]

தக்காளி, அவரைக்காய், அரசாணிக்காய், புடலங்காய், பூசனிக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், மாங்காய், கொத்துமல்லி தழை, புதினா, கொய்யா, கத்தரிக்காய், முள்ளங்கி, பீட்ரூட் போன்ற......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காய்கறிக் கடையே வைத்துவிட்டார்.

**திரு. வி. ஜெயராமன்:** பருவ காலங்களிலே ஏராளமாக விளைகிற காய்கறிகளைக் கொண்டுவந்து சந்தையிலே விற்க போதிய விலை கிடைக்காமல், விவசாயிகள் திண்டாடுகிற நிலையைப் போக்க, இல்லாமை என்பதே தன்னுடைய அகராதியிலே இல்லை என்று சொல்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே வந்த தாங்கள், இந்த ஆண்டே விவசாயப் பெருமக்கள் மகிழ்ச்சியடையத்தக்க வகையிலே ஒரு மிகப் பெரிய குளிர்பதன கிடங்கை உருவாக்கி, பொள்ளாச்சி பகுதி விவசாயிகளுடைய மனங்களைக் குளிர்விப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலே விளையக்கூடிய காய்கறிகளையும், மற்ற பகுதிகளிலேயிருந்து வரக்கூடிய காய்கறிகளுடைய பெயரையெல்லாம் சொல்லி, அந்தப் பகுதியிலே ஒரு குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டார்கள். 2002-2003-ல் பொள்ளாச்சியில் 1,750 ஹெக்டேரில் தக்காளி நடவு செய்யப்பட்டு, 35,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2003-2004-லே 1,297 ஹெக்டரிலே பயிரிடப்பட்டு, 25,940 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆக, அந்தவகையிலே பார்க்கிறபோது, உற்பத்தியாகக்கூடிய அனைத்து காய்கறிகளும் மொத்த சந்தையிலே விற்பனையாகி விடுகின்றன. அதற்கு அருகிலே இருக்கக்கூடிய கோவையிலே குளிர்பதன கிடங்கு இருக்கிறது. அந்த குளிர்பதன கிடங்கை எல்லாம் யாரும் பயன்படுத்திக்கொள்ளவில்லை. அங்கே காய்கறிகள் சேமித்து வைக்கப்படுவதில்லை. உறுப்பினர் அவர்கள், பொள்ளாச்சிக்கு அவசியம் தேவை என்று சொன்னால், யாராவது தனியார் வந்து அணுகினால், அவர்களுக்கு அரசினுடைய உதவியோடு, மானியத்தோடு குளிர்பதன கிடங்கு கட்டித் தருவதற்கு உதவி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயராமன்.

[2003 நவம்பர் 4

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001, 2002, 2003 ஆகிய இந்த மூன்று ஆண்டுகளும் கடுமையான வறட்சிக் காலம் என்பது தாங்கள் அறியாதது அல்ல. இந்தக் காலங்களிலே ஏற்பட்ட பயிர் விளைச்சல் குறைவைக் கணக்கிடாமல், இதற்கு முன்பு கடந்த காலங்களிலே, மழை மும்மாரி செம்மையாகப் பெய்து, பயிர் செம்மையாக விளைந்த காலங்களிலே, வரத்து வந்த நேரங்களிலே, விவசாயிகள் விளைந்த பொருளை விற்பனைச் சந்தையிலே விற்க முடியாமல் பக்கத்திலே வீதியிலே வீணாக விட்டுவிட்டுப் போன காட்சிகள் உண்டு. அவை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட நிலையைப் போக்க, கோவையோடு பொள்ளாச்சியை ஒப்பிடாமல், பொள்ளாச்சி ஒரு விவசாயப் பகுதி என்பதை உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டே உடனடியாக குளிர்பதன கிடங்கை ஏற்படுத்திக் கொடுத்து காய்கறி விவசாயிகளுடைய மனதைக் குளிர்விக்க வேண்டும் என்று மீண்டும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியை கோவையோடு ஒப்பிட வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பொள்ளாச்சியிலிருந்து கோவைக்குச் செல்கிற 29-வது கிலோமீட்டர் தூரத்திலேயே ஒரு குளிர்பதன கிடங்கு இருக்கிறது. அந்தக் கிடங்கிலே காய்கறிகளே வருவது இல்லை. தக்காளிப் பழங்களும் வருவதில்லை. சில நேரங்களில் அதிகமாக விளைச்சல் ஏற்படுகிறபோது சந்தையிலே இப்படிப்பட்ட நிலை ஏற்படுவதுண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசியம் பொள்ளாச்சியில் ஒரு குளிர்பதன கிடங்கு தேவை என்கின்ற பட்சத்தில் யாராவது அரசை அணுகினால் அதற்குரிய உதவிகள் வழங்கப்படும். 25 சதவிகிதம் மானியத்தில் குளிர்பதன கிடங்கு அமைப்பதற்கு உதவப்படும். அதற்கு நம்முடைய உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



2003 நவம்பர் 4]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நகராட்சியும் இப்போது ஆங்காங்கே சில மார்க்கெட்டுகளை வைத்திருக்கின்றன. ஆனால் அந்த மார்க்கெட்டுகளிலே சில நேரங்களிலே தக்காளி 5 ரூபாய்க்கும் விற்கிறது, சில நேரங்களில் 40 ரூபாய்க்கும் விற்கிறது. அது demand இருக்கிறபோது அதிகமாக விற்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று சொன்னால் நகராட்சிகளேகூட ஆங்காங்கே ஒரு சிறிய அளவிலே— ஏனென்றால் மத்திய அரசில் எங்களுடைய வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் உணவுப் பதப்படுத்தும் துறையினுடைய அமைச்சராக இருந்தும் அங்கே இருந்து ஒரு மானியமும் இங்கே வரமாட்டேன் என்கிறது. 50% மானியம் கொடுப்பதாகச் சொல்கிறார்களேயொழிய, ஆனால் அப்பேடா போன்ற நிறுவனம் ஏதேதோ நிறுவனம் அங்கே இங்கே application போட்டு இதுவரை தமிழகத்திற்கு மானியம் வந்ததாகவே தெரியவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மானியத்தை மத்திய அரசிடமிருந்து பெற்று ஆங்காங்கே ஒவ்வொரு நகராட்சியும் ஒரு சிறிய அளவிலாவது—இந்தக் குளிர்பதன கிடங்குகளை அமைத்து, குறைந்த வாடகைக்குக் கொடுப்பார்கள் என்று சொன்னால் காய்கறி விலையை நம்மாலே balance-ஆக வைக்கமுடியும். ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இதுபோன்ற குளிர்பதன கிடங்கு வைப்பதற்காக யாராவது கேட்டு அந்த அனுமதி வழங்கப்படவில்லை, மானியம் வழங்கப்படவில்லை என்று சொன்னால் அதற்குரிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே.மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் வினா நேரத்திலே ஏதோ மத்திய அரசாங்கத்திலே உணவுப் பதப்படுத்தும் துறையிலேயிருந்து

[2003 நவம்பர் 4

தமிழகத்திற்கு மானியம் வரவில்லை என்று சொன்னார்கள். நான் வேதனையோடு சொல்கிறேன். மத்திய உணவுப் பதப்படுத்தும் துறையிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கூடுதலான மானியம் ஒதுக்க வேண்டும், தமிழ்நாடு பலன் பெற வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை நாங்களே சொல்லிக் கொண்டிருக்கிறோம். பயன்படுத்துவதற்கு ஆட்கள் முன்வரவில்லை. மானியம் கொடுப்பதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது, பயன்படுத்துவதற்கு யாரும் முன்வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இது நீங்களும் ஞானசேகரனும் பேச வேண்டியது. மந்திரியிடம் சொன்னால் என்ன செய்ய முடியும்?

**திரு. ஜி.கே. மணி:** அவர் குற்றச்சாட்டிற்குப் பதில் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலும் அதனுடைய சுற்றுவட்டாரத்திலும் காய்கறியினுடைய உற்பத்தி, சேமிக்கும் அளவிற்கு இல்லை என்கிற காரணத்தை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அங்கேயிருந்து 60 கி.மீ தூரத்தில் இருக்கிற ஒட்டன்சத்திரத்திலே—ஒட்டன்சத்திரத்திற்கும், காரைக்குடிக்கும் 135 கிலோ மீட்டர். காரைக்குடிக்குக்கூட தக்காளி போன்ற காய்கறிகள், பூ வகைகள் தினந்தோறும் ஒட்டன்சத்திரம் பகுதியிலே இருந்துதான் வருகின்றன. அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள், உற்பத்தி அதிகமாகிற காலகட்டங்களிலே மிகவும் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே ஒன்று at the place of production, இல்லை என்று சொன்னால், nearest to the market ஏதோ ஓர் இடத்திலே, அந்தப் பகுதியிலே குளிர்பதன கிடங்கிற்கு அவசியம் இருக்கிறது என்கிற காரணத்தினாலே பொள்ளாச்சியைச் சுற்றி, தேவையான அளவிற்குக் காய்கறி உற்பத்தி இல்லை என்று கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் 60 கிலோ மீட்டருக்கு அருகிலே இருக்கிற ஒட்டன்சத்திரம் பகுதியிலே மிக அதிகமான காய்கறிகளும், பூ வகைகளும் உற்பத்தி ஆகின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே குளிர்பதன கிடங்கு வருவதற்கான அவசியம் இருக்கிற காரணத்தால், அரசு இதைப் பரிசீலிக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2003 நவம்பர் 4]

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அந்த ஒட்டன்சத்திரத்தில் விரைவிலேயே குளிர்பதன கிடங்கு அமைக்கப்படவிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டும் அல்ல, கோவை மாவட்டம், பொள்ளாச்சிக்கு அருகிலே இருக்கிற உடுமலைப்பேட்டையில்கூட தனியார் மூலம் குளிர்பதன கிடங்கு அமைப்பதற்கு அரசு கடித எண் 120/வேளாண்மை/ நாள் 7-5-2002-லே ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பேசுகிறபோது பொள்ளாச்சி பகுதியிலே காய்கறி விளைச்சல் மிகக் குறைவாக இருக்கிறது, குறைவாக இருக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். நிச்சயமாக அவ்வாறு கிடையாது. கடந்த 3 ஆண்டு காலமாக மழையின்மையின் காரணமாகத்தான் காய்கறி விளைச்சல் குறைவாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் சார்பாக குளிர்பதன நிலையம் அமைப்பதற்கு 25 சதவீதம் மானியம் வழங்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. எஞ்சிய வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker, Sir, நேற்றைக்கே.. (குறுக்கீடுகள்)அரசு ஊழியர்களின் பிரச்சினையை எடுக்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் உட்காருங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர அரசே கட்டணத்தை ஏற்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் (குறுக்கீடுகள்) அதுதான் சொல்கிறேன், உட்காருங்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. மு. அப்பாவு, திரு கோ.சி. மணி, திரு. இ. புகழேந்தி, திரு. எ.வ. வேலு, திரு. கு. பிச்சாண்டி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. லா. சந்தானம் அவர்களும், கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. கே. ஆறுமுகம், திரு. மே.ப. காமராஜ் ஆகியோரும் முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இவற்றைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதித்து முதலில் ஒரு கட்சியின் சார்பாக சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரத்தை இரத்து செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாங்கள் இலவச மின்சாரத்தை இரத்து செய்யவில்லை; ஒவ்வொரு விவசாயிக்கும் நாங்கள் நேரடியாக பணம் அனுப்புகிறோம்; அதன் மூலமாக அவர்கள் உதவி பெற முடியும் என்கிற ஒரு திட்டத்தை இங்கு அறிவித்தார்கள். ஆனால், விவசாயிகளைப் பொறுத்தளவிற்கு இந்தப் பணம்கூட முழுமையாக அவர்களுக்குப் போய் சென்றடையவில்லை. உதாரணமாக நான் ஒன்றிரண்டு கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, 25 ஆண்டு காலத்திற்கு, 30 ஆண்டு காலத்திற்கு முன்னால் ஒரு குடும்பத்திலே இருந்த





தலைவர் பெயரில் சர்வீஸ் வாங்கப்படுகிறது. அந்த சர்வீஸ் வாங்கப்பட்டவர் இன்றைக்கு இல்லை. அவர் இறந்துவிட்டார். ஆனால், பணம் அங்கே சென்று அந்த இறந்தவருடைய பெயரைக் கொண்டு இருப்பதால் Money Order-ஐ அவர் கையில்தான் கொடுப்பேன், இறந்தவருடைய குடும்பத்தினுடைய வாரிசுகளுக்கு நான் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை, ஏனென்று சொன்னால் அரசாங்கம் இறந்தவருடைய பெயரில்தான் பணம் அனுப்பி வந்திருக்கிறது என்று அங்கே இருக்கிற Postman திருப்பி பணத்தை எடுத்துக்கொண்டு போகிறான். இப்படி ஒரு குழப்பம்.

இன்னொன்று, நிலத்தகராறு. ஒருவரோடு ஒருவர் நிலத்தகராறு. இறந்துவிட்ட பின்பு யார் வாரிசு, அண்ணனுக்கு நிலம் சொந்தமா, தம்பிக்கு நிலம் சொந்தமா, அதுவும் கலைஞருடைய ஆட்சியிலே பெண்களுக்கெல்லாம் சொத்துரிமை என்று சொல்லிவிட்ட காரணத்தினால், பெண்களும் அதற்கு வாரிசா என்கிற நிலை வருகிறபோது அவர்கள் மனு போட்டு தாசில்தாரிடத்திலே யார் வாரிசு என்கிற அந்தப் பிரச்சினை ஒரு பகுதியாக இருக்கிற காரணத்தினால், அந்தப் பணத்தை அவர்களால் அனுபவிக்க முடியாமல் இருக்கிறது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மின் கட்டணம் செலுத்துவதற்கு அரசே அவர்களுக்கு Money Order அனுப்புகிற புதிய திட்டத்தைக் கொண்டு வந்தது. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகிறபோது பெரும்பாலானவர்களுக்குப் பணம் போய்ச் சேரவில்லை என்று குறிப்பிட்டார். அது தவறான தகவலாகும். நான் இந்த அறிவிப்புகளைச் செய்தபோது அரசின் இந்த நிதியுதவித் திட்டம் விவசாயிகளை உரிய காலத்தில் சென்று அடையாது என்றும், இந்தப் பணம் விவசாயிகளைச் சென்று அடைவதில் பெரிய பிரச்சினைகள் எழும் எனவும் சந்தேகங்கள் அப்போதே எழுப்பப்பட்டன. அரசின் இந்த நிதியுதவித் திட்டத்தின் பயன்கள் சிறு மற்றும் குறு விவசாயிகளைச் சென்று அடைவதில் தவறு ஏற்பட வாய்ப்பே இல்லாமல் உரிய காலத்தில் அஞ்சல் பணவிடை மூலமாக அதாவது Money Order மூலமாக பணத்தை அனுப்பும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். பம்புசெட் வைத்துள்ள 8.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அஞ்சல் பணவிடை அனுப்புவதை வருவாய்த் துறை உறுதிப்படுத்தியுள்ளது. இந்தப் பணம் அஞ்சல் பணவிடைகள் மூலம் அனுப்பப்பட்டதால் இது விவசாயிகளுக்குச்

சரியாகப் போய்ச் சேருவதில் எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படவில்லை. இந்தத் திட்டம் மாபெரும் வெற்றியாக அமைந்துவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மொத்தமுள்ள 15.24 இலட்சம் விவசாயிகளில் 13.36 இலட்சம் விவசாயிகள் 81.85 கோடி ரூபாய் அளவு மின் கட்டணத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 28-10-2003 நிலவரப்படி செலுத்தியுள்ளனர். அதாவது, 87.69 சதவீத விவசாயிகள் கட்டணம் செலுத்தியுள்ளனர் என்பதும், செலுத்தப்பட்ட தொகை மொத்த கட்டணத் தொகையில் 88.37 சதவீதம் என்பதும் குறிப்பிடத்தக்கது. 8.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளில் 87.78 சதவீதமான 7.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் 28-10-2003 நிலவரப்படி தங்களது கட்டணத்தை இந்த அரசின் நிதியுதவியுடன் செலுத்தியுள்ளனர். தமிழக மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையில் 88.84 சதவிகிதம் தொகையை இவர்கள் செலுத்தியுள்ளது பெரும்பான்மையான விவசாயிகள் அரசின் இந்தப் புதிய திட்டத்தை வெகுவாக வரவேற்று உள்ளனர் என்பதையே காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சில பேருக்கு போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். மின் இணைப்பின் உரிமம் மாறியது, மின் இணைப்பின் உரிமையாளர் இறந்தபின் வாரிசுதாரர் பெயர் மாற்றம் செய்து கொள்ளாதது, தவறான முகவரிகள் போன்ற காரணங்களினால் ஒருசில அஞ்சல் பணவிடைகள் திரும்பி விட்டன. தமிழ்நாடு மின்சார வாரியம் உரிய பெயர் மாற்றம் செய்ய எளிய நடைமுறையை வகுத்துள்ளது. இந்தப் பெயர் மாற்றங்கள், நவம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள் முடிக்கப்படும். அதாவது இம்மாதம் 15 ஆம் தேதிக்குள் முடிக்கப்படும். அதற்குப் பிறகு உரிய அஞ்சல் பணவிடைகள் பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அனுப்பப்படும். மின் கட்டணத்தைச் செலுத்த நவம்பர் திங்கள் 30 ஆம் தேதி வரை கால அவகாசம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-05*

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 80 கோடிக்கு மேல் பணம் 'இப்போது விவசாயிகளுக்கு கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அந்த 80 கோடி



ரூபாய் வருவாய் வந்தது எப்படி என்று சொன்னால், எங்கே மின்சாரத்தினுடைய ஃப்யூசை பிடுங்கிக்கொண்டு மறுநாள் விவசாயி அங்கே பயிர் வைக்க முடியாது என்று இருந்த நிலையிலே பணம் யார் யாருக்கு வரவில்லையோ, அவர்கள் எல்லாம்கூட பணம் கட்டியிருக்கிறார்கள். சொந்தமான நகைகளை அடகு வைத்துவிட்டு அந்தப் பணம் கட்டியிருக்கிறார்கள். அந்தப் பணமும் சேர்ந்ததுதான் இது. இதில் நீங்கள் எவ்வளவு பணத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் கற்பனையான தகவல்கள். யாருக்கெல்லாம் மணி ஆர்டர் சென்றிருக்கிறதோ அவர்கள்தான் கட்டணத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். யாருக்கெல்லாம் மணி ஆர்டர் போய்ச் சேரவில்லையோ அவர்கள் முறையே தகவல் தெரிவித்து அவர்களுக்கு மீண்டும் என்ன மாற்றம் செய்ய வேண்டுமோ அதைச் செய்து அவர்களுக்கு கால அவகாசம் நீட்டித்துத் தரப்பட உள்ளது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தகவலுக்குத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த அளவுக்கு தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் இறைவைப் பாசனம் அதிகமாக உள்ளது. அங்கே 25 ஆயிரம் பேருக்கு இதுவரை பணமே வந்து சேரவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கூற்றில் ஒரு விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். வேலு அவர்கள் கேட்பது இதுதான். அரசாங்கம் இத்தனை பர்சென்ட் பணத்தைக் கட்டி விட்டது. நாங்கள் கொடுத்தோம். அவர்கள் கட்டி விட்டார்கள் என்று சொல்கிறீர்கள். அவர் கேட்பது, சில பேருக்கு இன்னும் போய்ச் சேரவில்லை. ஆனால், அவர்கள் எங்கே நீங்கள் ஃப்யூசை எடுத்துக்கொள்வீர்களோ என்று பயந்து போய் அவர்களே கட்டி விட்டார்கள். அல்லது (குறுக்கீடு) இன்னும் சில பேருக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இன்னும் சில பேருக்கு-உதாரணத்திற்கு சொல்கிறேன். எங்களையே எடுத்துக்கொள்ளுங்கள். எங்கள் அப்பா பெயரிலேதான் அந்த சர்வீஸ் இருக்கிறது. ஆனால், இவர்கள்

கொடுப்பது, எங்கள் அப்பா இப்போது இல்லை. நான் இப்பொழுது என்ன பண்ணுவேன் என்று கேட்டால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *15ஆம் தேதிக்குள் மாற்றுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** சொல்வதைக் கேளுங்கள். அதை மாற்றுகிறேன். அது வேறு. ஆனால், நீங்கள் எங்கே இந்த மாதிரி ஃப்யூசை பிடுங்கி விடுவீர்களோ என்று பயந்து கொண்டு நாங்கள் பணத்தைக் கட்டி விட்டோம். உங்களிடமிருந்து நாங்கள் இன்னும் பணம் வாங்கவில்லை. ஆனால், நாங்கள் கட்டி விட்டோம். ஆகையினால், அதுமாதிரி வந்த பணம் எவ்வளவு என்றுதான் அவர் கேட்கிறார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் ஒரு உதாரணத்தை இங்கே சொன்னார். அவர் அப்பா பெயரில்தான் அந்த சர்வீஸ் இருக்கிறது என்று சொல்கிறார். அதனால் அப்பா பெயரில் இருப்பதால் மணி ஆர்டர் வந்து சேரவில்லை என்கிறார். இருந்தாலும், எங்கே ஃப்யூசை எடுத்து விடுவார்களோ என்று பயந்து பணத்தைக் கட்டிவிட்டதாக அவர் தெரிவிக்கிறார். பணத்தை கட்டியிருந்தால், அதற்கான ரசீது இருக்குமே, அந்த ரசீதைக் காண்பித்தால், அதற்கான பணம் மின்சார வாரியம் உங்களுக்கு கொடுக்கும்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் கேட்கிறோம். நீங்கள் இவ்வளவு பணம் என்று திட்டவட்டமாக சர்க்கார் கட்டியதாகச் சொல்கிறீர்கள். தொகையைச் சொல்லாமல் பர்சென்டேஜை சொல்கிற காரணத்தால் வேலு அவர்கள் கேட்பது, இதைப்போல் பயந்து கட்டியவர்கள் எவ்வளவு, அரசு கட்டியது எவ்வளவு என்று தெரிந்துகொள்ள கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதிலே எந்தவிதத் தவறும் நடக்கக் கூடாது. 100 percent fool-proof system-ஆக இருக்க வேண்டும் என்கிற ஒரு அடிப்படையில் 5 கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, ஆனால், உரிய பணம், அந்த விவசாயிகளுக்குச் சென்றடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு இந்தியாவிலேயே எந்த ஒரு தவறும் நடக்காத வகையிலே இந்தத்





திட்டம் சிறப்பான முறையிலே வெற்றி பெற்றிருக்கிறது. ஏறக்குறைய சிறு விவசாயிகள் 94 சதவீத பேர்களும், பெரு விவசாயிகள் 88 சதவீத பேர்களும், குறு விவசாயிகள் 83 சதவீத பேர்களும் பணத்தை ரெமிட் செய்திருக்கின்றார்கள். எனவே, சில மாவட்டங்களில் பல இடங்களில் இந்த உடைமை உரிமைச் சான்றிதழைப் பெற்றுத் தருவதிலே உள்ள சிக்கல் காரணமாக கட்டாதவர்கள்; அதைக்கூட ஒரு விரிவாக்கப் பணியாக மின்சார வாரியம் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய கட்டளையை ஏற்று அந்தப் பணியைச் செய்திருக்கின்றது. எனவே, 15 ஆம் தேதிக்குள்ளாகவே அனைவரும் நிச்சயமாக கட்டிவிடுவார்கள். இதிலே இன்னொரு சிறப்பு என்னவென்றால், பல மாவட்டங்களிலே அந்தப் போராட்டத்தை lead செய்கின்ற தலைவர்களே முதல் நாளே ஓடிப்போய் அந்தப் பணத்தை ரெமிட் செய்திருப்பதுதான் வரவேற்கத்தக்க ஒரு விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-10*

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். 'படுக்கும்போது, போர்த்திக்கொண்டு படுத்தால் என்ன, படுத்துக்கொண்டு போர்த்தினால் என்ன' என்று சொல்வார்கள். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சலுகையை அளித்ததன் காரணமாக, கிடைத்தவர்கள் பணத்தைக் கட்டுகிறார்கள்; அப்படித் தவறான முகவரி அல்லது தகப்பனார் பெயரில் இருந்து மற்ற வாரிசுகளுக்கு மாற்றப்படுகிறபோது காலதாமதமாக வருகிறது என்றால் அவர்கள் சொந்தப் பணத்தைக் கட்டிவிடுகிறார்கள். அப்படிக் கட்டினாலும் பிறகு அவர்களுக்குப் பணத்தை வாங்கிக் கொள்வதற்கு வழி இருக்கிறது. எனவே, எந்தப் பணமானாலும் விவசாயிகளால் கட்டப்படுகிற பணம் அரசினுடைய பணம்தான்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே, நீங்கள் கொடுக்க மாட்டீர்கள், அந்தப் பணத்தை எங்களுக்குக் கொடுக்க மாட்டீர்கள், நாங்கள் கட்டிய பணத்தை நீங்கள் எங்களுக்குத் தரமாட்டீர்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால், கட்டப்பட்ட பணத்தினுடைய ஒரு தொகையை அந்த பர்சென்டேஜை (முதலமைச்சர் தெரிவித்தார்கள்) திரு. வேலு கேட்பது

185081.
சென்னை-600 009
நூலகம்
P03.52.2

என்ன என்று கேட்டால், அது முழுக்க அரசாங்கத்தின் பணமா? பயந்துபோய் கட்டியவர்கள் பணம் அதிலே இருக்கிறதே? எல்லாவற்றையுமேதானே இதிலே டோட்டலாகச் சொல்கிறீர்கள் என்று கேட்கிறார். அதைச் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தூங்குபவர்களை எழுப்பிவிடலாம், ஆனால் தூங்குபவர்களைப் போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது' மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். 89 சதவீதம் பணம் கட்டியாயிற்று. 88 சதவீதம் பணம் ஒரு செக்டாரிலே கட்டியாயிற்று. இன்னொரு செக்டாரிலே 88 சதவீதம் பணம் கட்டியாயிற்று. அப்போது பேலன்ஸ் எவ்வளவு இருக்கிறது? 11 பர்சன்ட் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, உங்கள் பேச்சுக்கு துரைமுருகன் அவர்களே, விளக்கம் சொல்லிவிட்டார்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, நீங்கள் 84 சதவீதம் பணம் கட்டப்பட்டுவிட்டது என்று சொல்கிறீர்கள். நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'படுக்கும்போது, போர்த்திக்கொண்டு படுத்தால் என்ன, படுத்துக்கொண்டு போர்த்தினால் என்ன' என்ற ஒரு கதையெல்லாம் சொன்னார்கள். போர்வையே இல்லை என்பதுதான் எங்களுடைய இப்பொழுது இருக்கிற கருத்தே தவிர வேறு ஒன்றும் இல்லை. படுத்துக்கொள்வதா, போர்த்திக்கொள்வதா என்பது அல்ல. ஒரு வார்த்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போர்வையைத்தான் அரசாங்கம் கொடுத்திருக்கிறதே? போர்த்திக்கொள்ளவில்லை என்றால் நாங்கள் என்ன பண்ணுவது? (சிரிப்பு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போர்வையே இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னார். எவ்வளவு விலைமதிப்புள்ள போர்வையை இந்த அரசாங்கம் தந்திருக்கிறது விவசாயிகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இப்போது தெளிவாக்க விரும்புகிறேன். சில புள்ளிவிவரங்களைச் சொல்கிறேன். பொறுமையாகக் கேட்க வேண்டும். சுருக்கமாக முடித்துவிடுகிறேன்.



ஆண்டிற்கு ஒரு குதிரைத் திறன் உள்ள பம்பு செட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் உத்தேச அளவு 1051 யூனிட்டுகள். 5 குதிரைத் திறன் உடைய பம்பு செட்டுக்கு 5x1051, அதாவது 5255 யூனிட்டுகள். மின்சாரத்தின் அடக்க விலை, ஒரு யூனிட்டுக்கு 307 காசுகள், அதாவது, ஒரு யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஆகின்ற செலவு, யூனிட்டுக்கு 307 காசுகள். ஆனால் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதித்த கட்டணம் யூனிட்டுக்கு 20 காசுகள். இதை நன்றாகக் கவனிக்க வேண்டும். ஒரு யூனிட்டு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவு 307 காசுகள். ஆனால், மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதித்த கட்டணம், விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு வெறும் 20 காசுகள். ஆக, வாரியத்திற்கு, மின்சார வாரியத்திற்கு ஒரு யூனிட்டுக்கு ஏற்படும் இழப்பு 287 காசுகள். இதை நன்றாக நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். மின்சார வாரியத்திற்கு ஒரு யூனிட்டுக்கு விவசாயத்திற்கு வழங்கப்படும் மின்சாரத்தில் ஏற்படும் இழப்பு 287 காசுகள். 5 குதிரைத் திறன் உள்ள பம்புசெட் பயன்படுத்தும் மின்சாரத்தின் விலை 5255x3 ரூபாய் 70 காசுகள். (குறுக்கீடு) ஆமாம். 3 ரூபாய் 7 காசுகள். சரி, மொத்தம் 16 ஆயிரத்து 132 ரூபாய்.

முற்பகல் 11-15

ஆனால் விவசாயிகள் ஆண்டிற்கு செலுத்தும் தொகை வெறும் 1250 ரூபாய் மட்டுமே, மின்சார வாரியம் 5 குதிரைத் திறன் உள்ள பம்புசெட்டுக்கு வழங்கும் மின் கட்டண சலுகை 16,132-1250, அதாவது ரூபாய் 14882. 16.74 இலட்சம் பம்புசெட்டுகள் உள்ளன தமிழ்நாட்டில். ஆக, இந்த 16.74 இலட்சம் பம்புசெட்டுகளுக்கு அளிக்கும் மின் கட்டண சலுகை, 16.74 இலட்சம் x ரூபாய் 14882. அதைப் பெருக்கினால் மொத்தத் தொகை 2491.25 கோடி ரூபாய். அதை ஒட்டுமொத்தமாக, தோராயமாகச் சொல்வது என்றால் 2500 கோடி ரூபாய் என்று கொள்ளலாம். ஆக, தமிழ்நாடு மின்சார வாரியம் இப்போதுகூட ஆண்டிற்கு 2500 கோடி ரூபாய் மதிப்புள்ள மின்சாரத்தை மானியமாக விவசாயிகளுக்கு இன்றும் அளித்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, உரையை முடித்துக்கொள்ளுங்கள். மற்ற கட்சித் தலைவர்கள் எல்லாம் பேச வேண்டும். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசி முடித்துவிடட்டும்.

பழனிசாமி, அவர் பேசி முடித்துவிடட்டும், (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். முடித்த உடனே சொல்லுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பத் திரும்ப அரசுக்கு நினைவூட்ட விரும்புவது, விவசாயிகளில் பெரு விவசாயிகள் 10 Horse Power, 5 Horse Power, 7 Horse Power, 15 Horse Power என்றெல்லாம் வைத்திருக்கிறோம். அவர்கள் எல்லாம்கூட இப்போது பணம் கட்டியிருக்கிறார்கள், ஃப்யூஸ் பிடுங்கி விடுவார்கள் என்று. ஏனென்றால், ஏற்கெனவே பெரிய விவசாயி, சிறு விவசாயி, நடு விவசாயி என்றெல்லாம் இல்லாமல் இலவச மின்சாரத்தை முழுமையாக கலைஞர் ஆட்சியில் அனுபவித்தவர்கள். இப்போது 10 Horse Power, 7 Horse Power, 5 Horse Power என்று கட்டியிருக்கிறோம். அந்தப் பணமும் நீங்கள் சொன்ன Percentage-ல் தான் வருகிறது. ஆரம்பத்தில் நான் கேட்ட கேள்வி, அரசாங்கம் இதிலே எவ்வளவு பணம் கட்டியிருக்கிறது? ஏனென்றால், நாங்கள் கட்டிய பணம், எல்லா விவசாயிகள் கட்டியதை எல்லாம்கூட எடுத்திருக்கிறீர்கள். உதாரணமாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் 25 ஆயிரம் விவசாயிகள் பணம் கட்டியிருக்கிறார்கள். பணம் வரவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15.24 இலட்சம் விவசாய மின் நுகர்வோருக்கு விதிக்கப்பட்ட கட்டணம் 92 கோடியே 59 இலட்சம், 31-10-2003 வரை செலுத்தப்பட்ட விவசாய மின் கட்டணம் சுமார் 89 சதவிகிதம், 82 கோடியே 51 இலட்சம், மீதி செலுத்தப்பட வேண்டிய தொகை 10 கோடியே 8 இலட்சம். மின்சாரம் உபயோகிப்பவர்களுடைய, குறு விவசாயிகளுடைய எண்ணிக்கை 4.23 இலட்சம். இதில் மின் கட்டணம் செலுத்தியோர் சுமார் 83 சதவிகிதம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொன்றாகப் பதில் சொல்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள், அவருடைய தந்தையைப் பற்றிக் குறிப்பிட்டார். அவருடைய தகப்பனார் நிச்சயமாக பெரிய விவசாயியாகத்தான் இருந்திருப்பார். அவருடைய வாரிசாகிய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களும் பெரிய விவசாயியாகத்தான் இருப்பார். ஆகவே, பெரிய விவசாயியாக இருக்கின்ற இவர்கள் நிச்சயமாக கட்ட வேண்டிய கட்டணத்தை





மின்சார வாரியத்திற்குக் கட்டிவிடலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இவர்கள் பெரிய விவசாயிகளாக இருப்பதால்தான் இந்த மானியத் தொகை மின்சார வாரியத்திடமிருந்து வராமல் போயிருக்கும். எப்படியும் பெரிய விவசாயியாகத்தான் இருக்கிறார்கள். அதனால் அந்த மணி ஆர்டர் வராமல் இருந்திருக்கும். ஆகவே, நீங்கள் கட்டுவதுதான் நல்லது. (குறுக்கீடு) மற்ற கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிடுகிறேன். கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதாவது முதலமைச்சர் சொல்கிறார் நான் பெரிய விவசாயி என்று. பெரிய விவசாயியா, சிறு விவசாயியா என்பதல்ல. ஏனென்றால் குறு விவசாயி என்றாலும், புஞ்சை, நஞ்சை என்று போடுவதற்கு எங்களுக்கு இருப்பது 6,7 ஏக்கர் நிலம். அதிலே பம்ப்செட் போட்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படி நான் பெரிய விவசாயி என்று நினைத்து, என்னுடைய அப்பாவுக்கோ, எனக்கோ வராமல் இருக்கவில்லை. மணி ஆர்டர் கொண்டு வந்தான். கொண்டு வந்து, இருக்கிறாரா துரைசாமி கவுண்டர் என்றான். இல்லை, இல்லை செத்துவிட்டார் என்று சொன்னதும் எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இனிமேல் ரத்து செய்துவிடலாம் என்று சொல்கிறார். (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** அது வேறு விஷயம். அதுவல்ல. அதாவது குற்றம் சொல்வதற்காக அல்ல. சில நேரங்களில் இப்படிப்பட்ட நிர்வாக ஆணைகள் போடுகிறபோது சில குழப்பங்கள் வரும். அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது எதிர்க் கட்சிகளுடைய கடமை. அதைத்தான் எங்களுடைய தோழர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். அப்படி மணி ஆர்டர் வரப்பெற்றிருந்தால், அவர் பெரிய விவசாயியாக இருப்பதால் பெருந்தன்மையாக அதை மின்சார வாரியத்திற்கே திருப்பிச் செலுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் தேவையில்லை என்று அவர் எழுதிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மற்ற பாயின்ட்ஸ் இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துரைமுருகன் ஒரு பெரிய விவசாயி அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி.யும் பெரிய விவசாயி என்றுதான் நினைக்கிறேன்.

*முற்பகல் 11-20*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் விவசாயி ஆமாம். அதை நான் மறுக்கவே இல்லை. எங்கே போனாலும் என்னுடைய தொழில் என்பது விவசாயம்தான், வேளாண்மைதான். நான் வேறு தொழில் செய்யவில்லை. அது ஒன்றுதான் என்னுடைய தொழில். அதனாலே அந்தச் சலுகை எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை ஏற்கெனவே சொல்லி ஆகிவிட்டது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையாக யார் ஏழைகளாக இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அரசின் சலுகைகள் போய்ச் சேர வேண்டும் என்பது இந்த அரசின் உறுதியான கொள்கையாகும் (மேசையைத் தட்டும் ஒலி). உரிய நேரத்தில் கட்டணத்தைச் செலுத்தவில்லையென்றால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்று விவசாயிகள் பயப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் வேலு இங்கே தெரிவித்தார். இதுவரை கட்டணம் செலுத்தப்படாததால் எந்த மின் இணைப்பும், இதுவரை துண்டிக்கப்படவில்லை. அதற்கு இம்மாதம் 30 ஆம் தேதி வரை கால அவகாசம் தரப்பட்டுள்ளது என்பதை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன். உயர்நீதிமன்றம்கூட கட்டணம் செலுத்தாமல் இருந்தால் மின் இணைப்பு துண்டிக்கப்படுவது என்றால் அதை 30 நவம்பருக்குப் பிறகுதான் செய்யவேண்டுமென்று ஆணையிட்டுள்ளது.

திரு. வேலு அவர்கள், எவ்வளவு செலுத்தியிருக்கிறீர்கள்; விவசாயிகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று திரும்பத் திரும்ப கேட்டார். இதுவரை சிறு/குறு விவசாயிகளுக்கு Money Order மூலமாக அரசு அனுப்பியுள்ள தொகை 49.07 கோடி



ரூபாய் ஆகும். 28-10-2003 வரை சிறு/குறு விவசாயிகள் மின்சார வாரியத்திற்கு கட்டிய, செலுத்திய கட்டணம் 42.94 கோடி ரூபாய் ஆகும். மின்சார வாரியம் அதாவது அரசு அனுப்பியுள்ள தொகை 49.07 கோடி ரூபாய். விவசாயிகள் செலுத்தியிருக்கின்ற கட்டணம் 42.94 கோடி ரூபாய்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்காக தெரிவிக்கிறேன். துரைமுருகனுக்கு, எனக்கு பம்புசெட் 3 Horse Power இருக்கிறது. அதற்கு எனக்குப் பணம் வந்தது. நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். திருப்பி அனுப்பி விட்டேன். இது முதலமைச்சருக்கு. இரண்டாவது, எதற்கு இந்த Cumbersome? Procedure? அவர்கள் சொன்னார்கள் Electricity Board-லே எவ்வளவு பணம் பாக்கி. இத்தனை ஆயிரம் கோடி கொடுக்க வேண்டும். It is all right. Electricity Board உனக்கு இலவச மின்சாரத்திற்கு கொடுக்க வேண்டுமா? Right. Finance Secretary, அந்தப் பணத்தை கொடுத்துவிடுங்கள் என்று சொன்னால் book adjustment முடிந்துபோய்விட்டது. எதற்குச் சுற்றி இந்த ரகளை?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கு இந்த ரகளை என்று மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் கேட்கிறார். அவருக்கு நான் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். மின்சாரம் சம்பந்தமாக நடைமுறையிலிருந்த அனைத்து சட்டங்களுக்கும் பதிலாக மின்சார சட்டம், 2003 என்னும் சட்டத்தை மைய அரசு நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளதை அவையின் உறுப்பினர்கள் அறிந்து இருக்கக்கூடும். எனவே, இனிமேல் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இயக்கம் இந்தச் சட்டத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டது. தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசால் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பதை நான் தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் 10-6-2003 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின்படி, எந்தவிதமான விதிவிலக்கும் இன்றி எல்லா மின் நுகர்வோர்களுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும். அதாவது மீட்டர் பொருத்தப்படாமல் எந்த ஒரு மின் நுகர்வோருக்கும் மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று புதிய Electricity Act தெளிவாக கூறுகிறது. அந்த Electricity Act-ஐ பார்லிமெண்டில் கொண்டுவந்தவர்களே நீங்கள் அங்கம் வகிக்கும் மத்திய அரசு. எதற்குச் சுற்றி வளைத்து இப்படிச் செய்கிறீர்கள் என்ற கேள்வியை நீங்கள் கேட்கலாமா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அங்கம் வகிக்கிற அரசு செய்து இருந்தாலும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் பலவற்றை எதிர்த்து மற்ற முதலமைச்சர்கள் கடிதம் எழுதுகிறார்கள். இதிலேகூட மத்திய அரசாங்கத்தை எதிர்த்து ஒரு கடிதம் எழுதினால் நாங்களும் மத்திய அரசாங்கத்தை எதிர்ப்போம். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிதம் எழுதுவதால் ஒன்றும் ஆகிவிடாது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அமலுக்கும் வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு இதிலே உங்கள் கட்சி சார்பாக பேசியாகி விட்டது. (குறுக்கீடு) என்ன மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே Electricity Board அதாவது மின்சார வாரியத்திற்கு இழப்பு..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே, (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடத்தில், ஒரே செகண்டிலே சொல்லிவிடுகிறேன். ஒரு சின்ன தகவல். 2491.25 கோடி மின்சார வாரியத்திற்கு இழப்பு என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உங்கள் கட்சி உறுப்பினரிடம் கொடுங்கள். அவர் பேசட்டும். வேலு பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** தலைவரே,..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அவர் பேசி முடித்துவிடட்டும்.



முற்பகல் 11-25

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதெல்லாம், நான் இங்கே குறிப்பாகச் சொன்னேன், எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் நாங்களும் ஒரு கணக்கை எடுத்து வைத்திருக்கிறோம். அதிகமாக, தமிழ்நாட்டிலேயே இரண்டாவதாக இறைவைப் பாசனம் உள்ள மாவட்டம் அந்த மாவட்டம். 25,000 விவசாயிகள், நாங்களெல்லாம் பணம் கட்டியிருக்கிறோம். நாங்கள் என்று சொல்வது எங்கள் தொகுதியின் சார்பாக. மாவட்டத்தின் சார்பாக, சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், இவர்களைச் சேர்ந்தவர்கள் இதுவரை மணி ஆர்டர் வரவில்லை என்று பணம் கட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஒரு விவசாயிக்கு ஒரு யூனிட்டுக்கு 2.70 பைசா நாங்கள் அதாவது, அரசாங்கம், மின்சாரச் செலவை ஏற்றுக்கொள்கிறோம்; மீதி 20 பைசாதான் அவர்கள் ஒரு யூனிட்டுக்குக் கட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். நான் இந்த அரசாங்கத்திற்குத் திரும்பத் திரும்பச் சொல்வதெல்லாம், இந்த 20 பைசாவை விவசாயிகளைக் கட்டச் சொல்கிறீர்களே, அது தேவையில்லை; மீண்டும் இலவச மின்சாரத்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள். இழப்பு 2.87-ஐ ஏற்றிருக்கும்போது, ஏன் இந்த 20 பைசாவை ஏற்றுக்கொள்ளக்கூடாது? அந்த 20 பைசாவையும் ஏற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் நல்ல பெயரை வாங்கிக்கொள்ளலாமே?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியில் மீண்டும் விரிவாகப் பதில் சொல்லவிருக்கிறேன். சுருக்கமாகச் சொல்கிறேன். State Electricity Regulatiry Commission என்ற ஒன்றை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு 1998-லேயே சட்டம் கொண்டு வந்தது. அதன்படி அந்த ஆணையம்தான் எல்லா நுகர்வோர்களுக்கும் என்ன கட்டணம் என்பதை நிர்ணயிக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இப்போதுதான், சற்று முன்புதான், நான் சுட்டிக்காட்டியதுபோல புதிய Electricity Act, 2003 என்ற ஒரு புதிய சட்டம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்களில் தி.மு.க.வினரும் பெரும் பங்கு வகித்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின்படி, யாருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கக் கூடாது என்று தெளிவாக இருக்கிறது. மின்சாரம்

பயன்படுத்துபவர்கள், நுகர்வோர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்பது அந்தச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது., ஆகவேதான், இப்போதுகூட விவசாயிகளுக்குப் பெரிய சிரமம் ஏற்படக் கூடாது, எந்தச் சிரமமும் ஏற்படக் கூடாது என்பதற்காக 2500/- கோடி ரூபாய் அளவுக்கு மானியம் கொடுத்து விவசாயிகள் செலுத்த வேண்டிய மிகக் குறைந்த கட்டணத்திற்கும் அரசே மணி ஆர்டர் அனுப்பி அந்தச் சட்டத்தின்படி அவர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. போர்வையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். இந்த அரசு போர்வையாக இல்லை. 2,500/- கோடி ரூபாய் மானியம் கொடுத்து கேடயமாக விளங்குகிறது விவசாயிகளுக்கு என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு சி. ஞானசேகரன்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்னதை......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி உங்கள் கட்சி சார்பாக வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி சார்பாக நீங்கள் பேசுங்கள். முடிக்க வேண்டும். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

**திரு. ஜி. கே. மணி**: தலைவர் அவர்களே, 2500 கோடி என்று சொல்கிறார்களே, முதலமைச்சர் சொன்னது மாதிரி 2500 கோடி (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி உங்கள் இயக்கத்தின் சார்பாக நீங்கள் வேண்டுமானால் பேசுங்கள். இப்போது திரு. ஞானசேகரன் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, உங்கள் கட்சி உறுப்பினரிடம் கொடுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்து விவசாயிகள் இலவச மின்சாரம் என்பதைப் போராடிப் பெற்றவர்கள்.





இன்னும் சொல்லப் போனால், இதே அவையிலேகூட திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முதன்முதலில் இலவச மின்சாரத்தை தமிழக விவசாயிகளுக்குக் கொடுத்தது யார் என்று ஒரு--பட்டிமன்றத்தையே--மிக நெடிய நேரம் விவாதத்தை நடத்தியிருக்கிறது. அந்த அளவிற்கு இரண்டு இயக்கங்களும் இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பதிலே நீங்கள் அக்கறைகொண்டு முதலிலே கொடுத்தீர்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுத்தார்கள். பிறகு, தலைஞர் கொடுத்தார். இப்படி நீங்களே வாதத்தை இதே அவையிலேயே எடுத்து வைத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், ஒன்றைச் சொல்லிவிடுகிறேன், முதலிலே.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இதோ உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது இதுபற்றி ஏற்கெனவே விரிவான விவாதம் நடைபெற்று, முதலமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது இது சம்பந்தமாக நடைமுறைச் சிக்கல்கள் (குறுக்கீடு) இருந்தால் அதைச் சொல்லுங்கள். மறுபடியும் பழையவற்றிற்கே போனீர்கள் என்றால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறைச் சிக்கலைச் சொல்லிவிடுகிறேன். இன்று இந்த இலவச மின்சாரத்தைப் பொதுவாக நீங்கள் கொடுத்தாலும்கூட, 'உழவனுக்கு உழவுக்கோல்கூட மிஞ்சவில்லை' என்பதுதான் நிதர்சனம். காரணம் என்னவென்று சொன்னால், நீங்கள் ஏர் உழுவதிலிருந்து, உரமிடுவது, பிறகு கூலியாளுக்குப் பணம் கொடுப்பது, அறுவடைச் செலவு இவற்றையெல்லாம் பார்த்தீர்கள் என்று சொன்னால் அவர்கள் செலவு செய்யக்கூடிய பணத்தைக்கூட முழுமையாக அந்த விளை பொருளிலிருந்து விவசாயிகளால் எடுக்க முடியவில்லை.

தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக வரவேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுக்கு நீங்கள் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளித்து ஏதாவது மானியத்தைக்கூட தந்து ஊக்குவிக்க வேண்டும்.

[திரு. சி. ஞானசேகரன்] [2003 நவம்பர் 4

ஏனென்றால் விளைபொருளை அதிகமாக விளைவித்து இந்தியாவிலேயே முதல் மாநிலமாக வரவேண்டுமென்ற நோக்கில்தான் நம்முடைய பயணத்தை நாம் அமைத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது பார்த்தோம் என்று சொன்னால், இங்கே இலவச மின்சாரத்தை முதலிலே கொடுத்து, பிறகு அவர்கள் எல்லாம் பயன்படுத்தி, இத்தனை காலம் முடிந்த பிறகு, திடீரென்று 2003-லே மத்திய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, ஒரு Electricity Act-ஐக் கொண்டு வந்து இப்போதெல்லாம் மீட்டர் பொருத்த வேண்டும், பணம் கட்ட வேண்டும் என்று சொன்ன காரணத்தினால், இப்படிப்பட்ட கட்டாய நிலைக்கு ஆளாகியிருக்கிறோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அதிலே ஏதும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால், விவசாயிகளுடைய நிலைமையை முதலிலே நாம் புரிந்து கொண்டால், இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முதலமைச்சர் அவர்கள் முன்வரலாம்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நிலைமையை மிகவும் நன்றாக இந்த அரசு புரிந்து கொண்டதால்தான், விவசாயிகளுக்கு எந்தப் பாதிப்பும், சிரமும் ஏற்படாத வகையில் இந்தப் புதிய ஏற்பாட்டை செய்திருக்கிறோம். இலவச மின்சாரம் கொடுப்பது ரத்தாகிவிட்டது, ரத்தாகிவிட்டது என்று மீண்டும், மீண்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை. முன்பு, இலவச மின்சாரம் என்ற பெயரில் வழங்கப்பட்டது. இப்பொழுது அதே மின்சாரம் அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதற்குக் கட்டணம் செலுத்துங்கள் என்று சொல்கிறோம். கட்டணம் செலுத்த வேண்டிய பணத்தை அரசே அவர்களுக்கு மணி ஆர்டர் மூலமாக அனுப்புகிறது. ஆகவே, இப்போதும்கூட அவர்களுக்கு இலவச மின்சாரம் கிடைத்துக் கொண்டு இருக்கிறது என்றுதானே அர்த்தம்? *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள், குறு விவசாயிகளுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். நானும் ஒரு விவசாயி. பல ஆண்டுகள் அந்தச் சலுகையைப் பெற்றவன்.



2003 நவம்பர் 4] [திரு. சி. ஞானசேகரன்]

ஆனால் என்னுடைய தந்தையார் பெயரில் இருக்கக்கூடிய மின்சார பம்ப்செட்டு ஆனாலும் சரி, என்னுடைய மனைவி பெயரில் இருக்கக்கூடிய மின்சார பம்ப்செட்டு ஆனாலும் சரி, மாமியார் பெயரில் இருப்பதானாலும் சரி, என்னுடைய அம்மா பெயரில் இருப்பதற்கும் நாங்கள் பணத்தை இப்பொழுது முழுமையாகக் கட்டிக்கொண்டிருக்கிறோம். இப்படிக் கட்டக்கூடிய ஒரு சூழல் வருகிறபோது, எங்களுடைய விவசாய உற்பத்திக்கு நாங்கள் செலவு செய்த பணம்கூட வரவில்லை என்ற காரணத்தால்தான் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் 20 பைசா ஒரு யூனிட்டுக்கு என்று இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி 2500 கோடி ரூபாய் என்று சொல்கிறீர்கள். ஆனால், உற்பத்திச் செலவை அதிகமாகச் சொல்கிறீர்கள். இல்லை என்று நான் மறுக்கவில்லை. ஆனால், இவ்வளவு செய்தாலும்கூட, எங்களாலே விவசாயம் செய்ய முடியவில்லை. ஏனென்றால், சில நேரங்களிலே நீங்களே கணக்கு போட்டு, எல்லா நேரமும் அந்த மோட்டார் ஓடினால் எவ்வளவு கணக்கு என்று சொல்கிறீர்கள். 15 ஆண்டு காலமாக எங்களுடைய ஒரு பம்ப்செட்டில் இதுவரைக்கும் கிணற்றில் தண்ணீர் இல்லாததால், ஓடவே இல்லை. அதற்கும் நாங்கள் இப்போது பணம் கட்டியாகிவிட்டது. 15 வருடமாக நாங்கள் பயன்படுத்தவில்லை. 35 ஏக்கரில் கொஞ்சநஞ்சம் பயிர் செய்தால் அதை யானை வந்து அடித்துக்கொண்டு போய் விடுகிறது. அதனாலே, அதற்குப் பயந்து கொண்டே ஒரு இடத்திலே நான் பயிரே பண்ணாமல் இருக்கிறேன். இப்படிப் பயிர் செய்யாத இடத்திற்கும்கூட நான் அந்தப் பணத்தைக் கட்டியாக வேண்டும். இப்படிப்பட்ட ஒரு சூழல் இருக்கிற காரணத்தினாலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வது...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீட்டர் பொருத்துவதை ஏற்றுக்கொள்கிறாரா?

**திரு. சி. ஞானசேகரன்:** மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறீர்கள். ஏன், இந்த விஷயத்திலும்கூட நாங்கள் பணத்தைக் கட்ட மாட்டோம், ஒழுங்கு முறை ஆணையத்தை நான் கூட்ட மாட்டேன்; தலைவரைப் போட மாட்டேன்; மெம்பரை போட மாட்டேன் என்று அந்த

[திரு. சி. ஞானசேகரன்] [2003 நவம்பர் 4

ஒழுங்கு முறை ஆணையத்தைக் கலைத்து விட்டு, தமிழக விவசாயிகளுக்கு நீங்கள் உண்மையிலே உழைப்பது உண்மையானால், தயவுசெய்து மீண்டும் இலவச மின்சாரத்தைக் கொண்டு வாருங்கள் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். போராடிப் பெற்ற உரிமையை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு இந்திய அரசியல் சட்டத்தின்படிதான் நடக்க வேண்டும். அதன்படிதான் செயல்பட வேண்டும். மத்திய அரசு கொண்டு வந்த ஒரு சட்டத்தை மீறி, அந்தச் சட்டத்தை நாங்கள் மதிக்க மாட்டோம் எனறு சொன்னால், இந்திய அரசியல் சட்டப்படி இந்த ஆட்சி நடைபெறவில்லை என்று சொல்லி, அரசைக் கலைத்துவிடுவார்கள். விவசாயிகளுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே, மத்திய அரசின் சட்டத்தை மதித்தும் நடக்கிறோம்; அதே நேரத்தில், விவசாயிகளுக்கு எந்தச் சுமையும் ஏற்படாதவாறு அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை நாங்களே வழங்கிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பணத்தை செலுத்தவில்லை என்று சொன்னால், விவசாயிகளிடமிருந்து பணத்தை வசூல் செய்யவில்லை என்று சொன்னால், மத்திய அரசு கலைத்துவிடும் என்று சொன்னார். நிச்சயமாக முடியாது. நீங்கள் ஏற்கெனவே விவசாயிகளுக்கு 49.07 கோடி ரூபாய் எம்.ஓ. மூலம் அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால், செலுத்தப்பட்ட தொகை என்று எடுத்துக்கொண்டால், 42.94 கோடி ரூபாய்தான் செலுத்தப்பட்டு இருக்கிறது. இதிலே ரூ.6 கோடியே 13 இலட்சத்தைக் காணோம். இதற்குப் பதிலாக எல்லா விவசாயிகளின் சார்பிலே நீங்களே செலுத்திவிட்டால், நிச்சயமாக மத்திய அரசாங்கம் கேட்காது. எல்லா விவசாயிகளுக்கும் அந்தச் சலுகை விஸ்தரிக்கப்பட வேண்டும் என்கிற நிலையை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ். (குறுக்கீடுகள்) எல்லா உறுப்பினர்களும் பங்குகொள்ளக்கூடிய விவாதம் அல்ல இது. சிறப்புக் கவன ஈர்ப்பு கொஞ்சம் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.



2003 நவம்பர் 4] [பேரவைத் தலைவர்]

ஞானசேகரன், நீங்கள் பேசி முடியுங்கள் (குறுக்கீடுகள்) ஞானசேகரன், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் நீங்களே செலுத்தக் கூடாது என்று மாண்புமிகு எஸ்.ஆர்.பி. கேட்கிறார். எனக்குத் தெரிந்தவரை வந்த தகவல்களின் அடிப்படையில் இந்தப் புதிய திட்டத்தை சிறு, குறு விவசாயிகள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். இங்கேயிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலர்தான் இதை ஏற்றுக்கொள்ளாமல் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் சொன்ன புள்ளிவிவரங்களே இதற்கு சாட்சி; இதற்கு ஆதாரம். இதுவரை சிறு, குறு விவசாயிகளுக்கு அரசு அனுப்பியிருக்கிற தொகை 49 கோடியே 7 இலட்சம் ரூபாய். இதில் சிறு, குறு விவசாயிகள் அதை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் அரசுக்கு செலுத்திவிட்டார்கள். ஆகவே பெரும்பான்மையான விவசாயிகள் இந்தத் திட்டத்தை வரவேற்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது இதிலிருந்தே தெளிவாகிறது.

முற்பகல் 11-35

**திரு. துரைமுருகன்:** அதுதான். பாலசுப்பிரமணியம் கேட்டார். 49 கோடியில் 43 கோடி போக மிச்சம் 6 கோடி எங்கே? அரசாங்கம் கொடுத்த பணமே 6 கோடியை அவன் திருப்பி கட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேச்சை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் basic concept-ஐயே புரிந்துகொள்ளவில்லையே என்பதுதான் ரொம்ப வருத்தமாக இருக்கிறது. இன்றைக்கும் free electricity-தான். அதிலே எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. (குறுக்கீடுகள்) இன்றைக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அனுமதி வாங்காமல் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சிறு, குறு விவசாயிகள்...... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறு விவசாயிகள் மட்டுமல்ல, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னதுபோல, பெரு விவசாயிகள் மத்தியில்கூட இந்தத் திட்டத்திற்கு எந்த அளவிற்கு வரவேற்பு இருக்கிறது என்பதற்கு ஒரேயொரு புள்ளிவிவரம். அவர்களுக்கு நாம் மணி-ஆர்டர் அனுப்பவில்லை. ஆனால் அவர்களாக வந்து, தாங்களாக வந்து கட்டியவர்கள்—மின்சாரம் உபயோகிக்கும் பெரு விவசாயிகள் இன்றைக்கு 6 இலட்சத்து 67 ஆயிரம் பேர். இதுவரைக்கும் கிட்டத்தட்ட 5 இலட்சத்து 88 ஆயிரம் பேர். இவர்கள் தாங்களாகவே வந்து பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். இதிலே கிட்டத்தட்ட செலுத்த வேண்டிய மின் கட்டணத் தொகை 44 கோடியே 26 இலட்சம் ரூபாய். ஆனால் 31-10-2003 வரை E.B.-க்கு remit செய்யப்பட்ட தொகை 39 கோடியே 19 இலட்சம். இந்தப் புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது பெரு விவசாயிகள் எந்த அளவிற்கு இந்தத் திட்டத்தினை வரவேற்றிருக்கிறார்கள் என்பதற்கு இதனைவிட வேறு ஒரு சான்று இருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுகிற வழக்கம் தி.மு.க.விற்கு தொடர்ந்து இருந்து வருவதை (மேசையைத் தட்டும் ஒலி) நாடு அறியும். 1998 இல் உழவர் பெருமக்கள் வயிற்றில் அடிக்கின்ற வகையில் மைய அரசின் கூட்டாளியாக இருந்துகொண்டு இந்த நடைமுறைக்கு வழிவகுத்ததே டெல்லியிலே கூட்டாளியாக ஆட்சி செய்த தி.மு.க.தான். இது நாடறியும்.





தற்போது அண்மையிலே நாடாளுமன்றத்திலே சட்டம் வந்தது. கட்டாயமாக மீட்டர் பொருத்த வேண்டும் விவசாயப் பெருங்குடி மக்கள் உள்ளிட என்று. அந்தச் சட்டம் வருவதற்கு ஒத்துழைத்தது, வாக்களித்தது, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது இதே தி.மு.க. தான். (குறுக்கீடுகள்) தி.மு.க.வும் அதனுடைய கூட்டாளிகள் அனைவரும் சேர்ந்து செய்தார்கள். ஆனால் மன்னிக்க வேண்டும். ஆனால் அப்படி விவசாயிகளுக்குப் பாதகமான ஒரு சட்டத்தை டெல்லியிலே கொண்டு வர காரணமாக இருந்துவிட்டு, டெல்லியிலே இருக்கிற பி.ஜே.பி. ஆட்சியினுடைய பங்காளியாக இருந்துகொண்டு, தமிழகத்து விவசாயிகள் வயிற்றில் அடிக்கக்கூடிய அளவிற்கு மீட்டரைப் பொருத்தக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்ததே தி.மு.க.தான் என்பதைத் தமிழக விவசாயிகள் தற்போது நன்கு உணர்வார்கள். அந்த விவசாயிகள் வயிற்றிலே பாலை வார்க்கின்றமுகத்தான்—நீங்கள் விவசாயிகள் வயிற்றில் அடிக்கின்றீர்கள்—புரட்சித் தலைவி விவசாயிகள் வயிற்றில் பாலை வார்க்கின்ற வகையில் 2,500 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது மானியமாக—அம்மா அவர்கள் சொன்னதைப்போல—கேடயமாக நின்று அந்த விவசாயிகளுக்கு உதவுகிறார்கள். உண்மையிலேயே உழவர்கள்மீது அக்கறை தி.மு.க.வுக்கு இருக்குமேயானால் டெல்லியிலே நீங்கள் கொண்டு வந்த சட்டத்தை, டெல்லி கூட்டாட்சியோடு மோதி அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறச் செய்யுங்கள். அதேபோல, உங்கள் டெல்லி அரசாங்கம், உங்களுடைய அரசாங்கம்—இந்த உழவர்களுக்கு மானியத்தைத் தந்து—இலவச மின்சாரம் தரலாமே! நாடாளுமன்ற உறுப்பினர்களாக விவசாயிகளின் வாக்குகளைப் பெற்று டெல்லிக்குச் செல்கிறீர்கள். எம்.பி.க்கள் ஆகிறீர்கள். அமைச்சர்கள் ஆகிறீர்கள். அங்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது (குறுக்கீடுகள்) எனவே, அங்கு கொண்டு வருகிறபோது நீங்கள் (குறுக்கீடுகள்) இருங்கள் சார். உழவர் பெருமக்களுக்கு, மானியம் தருகின்ற முறையில் இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறச் சொல்லாதது ஏன்? டெல்லியிலே ஆளுகின்ற, தி.மு.க., நீங்கள் விவசாயிகளுக்கு மானியமாக இலவச மின்சாரத்தைத் தருவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள்.

முற்பகல் 11-40

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், "1998 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்தது; அதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்றுக்கொண்டது. இன்றைக்கு பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறது" என்று சொன்னார்கள். நான் அந்தக் கருத்துக்குள்ளே போகவில்லை. நான் சொல்ல விரும்புவது, மத்திய அரசாங்கம் அப்படி ஒரு சட்டம் கொண்டு வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்தது. எதிர்த்தது மட்டுமல்ல; 2001 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் தமிழ்நாட்டு மக்களுக்கு இலவச மின்சாரத்தை தொடர்ந்து கொடுத்துக் கொண்டுதான் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் ஒன்று; அ.தி.மு.க. கட்சியினுடைய தேர்தல் அறிக்கையைப் பார்த்தால்கூட, 'அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இலவச மின்சாரம் தொடரும்' என்றுதான் அறிவித்து விவசாயிகளுடைய வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், நிதியமைச்சருக்கு நான் சொல்ல விரும்புவது எல்லாம், இன்றைக்கு நீங்கள் சுமார் 8 இலட்சம் விவசாயிகளுக்கு 100 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் செலுத்த இருக்கிறீர்கள். அதிலே 46 கோடி ரூபாய் மணி ஆர்டர் செய்துவிட்டீர்கள், ஆறு மாதத்திற்கு. நான் சொல்ல விரும்புவது, அனைத்து விவசாயிகளுக்கும் 20 பைசா என்று கணக்கிட்டுப் பார்த்தால்கூட 250 கோடி ரூபாய்தான் ஆண்டிற்கு அரசாங்கத்திற்கோ அல்லது மின்சார இலாகாவிற்கோ வருமானம் வரும். அதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மானியமாக ஒவ்வொரு ஆண்டும் மின்சார வாரியத்திற்குக் கொடுத்துக்கொண்டிருந்தது. அதைப்போல, இந்த அரசாங்கம் 250 கோடி ரூபாயை மானியமாக மின்சார வாரியத்திற்குக் கொடுத்துவிட்டால், இந்தப் பிரச்சினையே வராது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே பேசியதால், நானும் சில உண்மை விளக்கங்களை இங்கே கூற விரும்புகிறேன்.





1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் என்னும் புதியதொரு சட்டத்தை இந்திய அரசு இயற்றியது. இந்தச் சட்டம் 25-4-1998 முதல் செயல்பாட்டிற்கு வந்தது. இந்தச் சட்டத்தின்கீழ், முந்தைய தி.மு.க. அரசு—நன்றாக கவனிக்க வேண்டும்—முந்தைய தி.மு.க. அரசுதான் 17-3-1999 அன்று, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை தோற்றுவித்தது. பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் சராசரி செலவின் அடிப்படையில் மின்சாரத்திற்கான கட்டணம் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் மட்டுமே நிர்ணயிக்கப்படவேண்டும் என்று இந்தச் சட்டத்தில் கூறப்படுகிறது. ஆகவே, 'இந்தச் சட்டம் கொண்டு வந்தபோது நாங்கள் எதிர்த்தோம்' என்று மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் கூறுகிறார். ஆனால், 1999-ல் அந்தச் சட்டத்தின்படி, இந்த State Electricity Regulatory Commission-என்னும் ஆணையத்தை அமைத்ததே தி.மு.க. அரசுதான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், 2001 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முந்தைய தி.மு.க. அரசு, துரிதப்படுத்தப்பட்ட மின்சார வளர்ச்சித் திட்டத்தின்கீழ், அதாவது, Accelerated Power Development Programme-ன்கீழ் நிதியுதவியைப் பெற்றுவிட்டது. இதற்குத் தேவைப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், அதாவது, Memorandum of Understanding ஒன்று மத்திய அரசால் முன்மொழியப்பட்டது. மாநில ஒழுங்குமுறை ஆணையத்தை செயலாக்கம் பெறச்செய்யவும், மேலும் 31-12-2003-க்குள் அனைத்து நுகர்வோருக்கும் மின் பயனீட்டு அளவு கருவிகள், அதாவது. மீட்டர்கள், பொருத்தப்பட வேண்டும் என்பதும், தமிழ்நாடு மின்சார வாரியம், மாநில ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண விகிதத்தை மாற்றியமைக்க ஒரு விண்ணப்பத்தினை 30-9-2002-க்குள் கொடுக்கவேண்டும் என்பதும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள். முந்தைய தி.மு.க. அரசு இந்த நிதியுதவியை, இந்திய அரசால் அனுப்பப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்கெனவே பெற்றுவிட்டது. எனவே, மைய அரசால் அனுப்பப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதைத்தவிர வேறு வழி இந்த அரசுக்கு இல்லை. இந்த நிலையில் வேறு வழியில்லாததால், 2002 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்த ஒப்பந்தத்தில் இந்த அரசு கையெழுத்திட வேண்டியதாயிற்று. ஆகவே, எப்படியெல்லாம் இந்த அவையையும், மக்களையும் முன்னாள் அமைச்சர் அவர்கள் திசை திருப்பப் பார்க்கிறார் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். 1998-ல் மத்திய

அரசு, இந்த State Electricity Regulatory Commission-ஐ அமைக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது. அதை எதிர்த்தோம் என்கிறார் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள். ஆனால், அந்தச் சட்டத்தின்படி அந்த ஆணையத்தை அமைத்ததே அவர்களுடைய அரசுதான்; தி.மு.க. அரசுதான். 1999-லே இந்த State Electricity Regulatory Commission-ஐ அமைத்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த Accelerated Power Development Programme-ன்கீழ், மத்திய அரசிடமிருந்து முன்பணமாக நிதியைப் பெற்றுவிட்டார்கள். அதற்கு ஒரு M.O.U.-வில், ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுகிறோம் என்று உத்தரவாதம் கொடுத்தார்கள். அந்த ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது; 30-12-2003-க்குள் எல்லா நுகர்வோர்களுக்கும் மீட்டர் பொருத்தப்படும் என்று இருந்தது.(மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவையும் செய்துவிட்டு, இன்றைக்கு இந்தத் திட்டத்தை எதிர்த்துப் பேச தி.மு.க.வினருக்கு என்ன முகாந்திரம் இருக்கிறது என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) மணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) எஸ்.ஆர்.பி. பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25-4-1998 ஆம் தேதியன்று இந்தச் சட்டத்தை மத்திய அரசு அமலுக்குக் கொண்டு வந்தது என்று சொன்னார்கள். 1998 ஏப்ரல் மாதத்தில் அ.தி.மு.க.-வும் அந்த அரசில் அங்கம் வகித்தது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 2002-லேயே இது விரிவாக இந்த அவையில் பேசப்பட்டது; விவாதிக்கப்பட்டது. அப்போது இதற்கான விளக்கத்தையும் நான் கூறிவிட்டேன். 1998-ல் இந்தச் சட்டம் கொண்டு வந்தபோது, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசில் அங்கம் வகித்தது. ஆனால், ஒரு மாநில அரசு விரும்பும் வரை இலவச மின்சாரம் தொடரலாம் என்னும் ஷரத்தை நானே அந்தச் சட்டத்தில் சேர்க்க வைத்தேன் என்பதையும் தெரிவித்துகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. எஸ்.ஆர்.பி. (குறுக்கீடு) ஆற்காடு வீராசாமி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லும்போது, அவர்களுடைய ஆட்சியிலே 250 கோடி ரூபாய், வருடத்திற்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள். 1991-96 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்றைக்கு மின் வாரியத்தை நிர்வாகம் செய்யும்போது, 1996-ல், அந்த இறுதி ஆண்டில் மின்சார வாரியத்திற்கு எந்த நஷ்டமும் இல்லை. நல்லதொரு இருப்பை வைத்துவிட்டுத்தான் அன்றைக்கு வந்தோம். அதன் பிறகு, அந்த 1996-2001, அந்த ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு, நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, கிட்டத்தட்ட ஐந்தாயிரம் கோடி ரூபாய் மின் வாரியத்திற்கு இழப்பு. பெயரளவில்தான் ஒவ்வொரு ஆண்டும் 250 கோடி ரூபாய் மின்வாரியத்திற்கு கொடுத்தோம் என்று சொன்னீர்கள். ஆனால், 250 கோடி ரூபாய் கொடுத்தீர்களா? இல்லை. அதுமட்டுமல்லாமல், உங்களுடைய மோசமான நிர்வாகத்தின் காரணமாக, நிர்வாகத் திறமை இல்லாத காரணத்தினால் கிட்டத்தட்ட, என்.எல்.சி. — நெய்வேலி லிக்னைட் கார்பரேஷன் — மத்திய மின் தொகுப்பிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய அந்த மின்சாரத்திற்கு கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் பாக்கி வைத்துவிட்டு நீங்கள் ஓடிவிட்டீர்கள். நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக் கடனை அடைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடனை அடைத்து, இன்றைக்கு மின்சார வாரியம் நாட்டிலேயே நம்பர் ஒன் மின் வாரியமாக திகழ்கின்றது. சமீபத்திலே நம்முடைய மத்திய மின் வாரிய செயலர் அவர்கள், இங்கே சென்னைக்கு வருகை தந்திருந்தபோது certificate கொடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Sir, I raise a Point of Order. (குறுக்கீடு) I am on a Point of Order. (குறுக்கீடு) அதாவது, விதி 55-ஐ மீறி இந்த discussion போகிறது. அதனாலே, I want an half-an-hour discussion on this. (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏதோ, மோசமான நிர்வாகம், (குறுக்க்டு) மோசமான நிர்வாகம் தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்றது என்று சொன்னார். (குறுக்கீடு)

[2003 நவம்பர் 4

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** விதி 55-ன்படி சொல்ல வேண்டிய விவரங்களுக்கு அப்பால் இந்த விஷயங்கள் போகின்றன. எல்லாக் கட்சிக்காரர்களும் இதிலே கருத்து சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக ஒரு half-an-hour discussion எடுத்துக்கொள்ள வேண்டும். இது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். சொல்லிவிடுகிறேன். தேவையேயில்லை இது. இது ஏற்கெனவே பலமுறை சட்டமன்றத்திலே பேசப்பட்டு, முதலமைச்சர் அவர்களாலே விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுவிட்டது. இப்போது சிறப்புக் கவன ஈர்ப்பு என்று நீங்கள் கொண்டு வந்ததற்கு நான் அனுமதித்தற்குக் காரணம், ஏதாவது நடைமுறைச் சிக்கல்கள் இதிலே இருப்பதைப் பற்றி நீங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்பதற்காகத்தான். இப்போது பழையபடியே அந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறீர்கள். ஏற்கெனவே விரிவான விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் மீண்டும் இதைப் பற்றி ஒரு தவறான கருத்தை மக்கள் மத்தியில் பரப்பக்கூடும் என்பதால், இப்போது அவர்கள் எழுப்பிய சில சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் மீண்டும் தெளிவாக பதில் கூற விரும்புகிறேன்.

1998-ல் இந்த State Electricity Regulatory Commission அமைக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியது. அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசில் அங்கம் வகித்தது உண்மைதான். ஆனால், அப்போது நான் பிரதமரிடமே பேசி, விரும்புகின்ற வரை எந்த ஒரு இனத்திற்கும் இலவச மின்சாரம் தொடரலாம் என்னும் ஷரத்தை அதில் நான் சேர்க்க வைத்தேன். ஆனால், அதன் பின்னர் 2003-ல் தி.மு.க. மத்திய அரசில் அங்கம் வகிக்கும்போதுதான் இந்த புதிய Electricity Act, 2003 என்ற சட்டத்தைக் கொண்டு வந்து, இலவசமாக மின்சாரம் கொடுப்பதற்கு வழியே இல்லாமல், யாராக இருந்தாலும், எந்த நுகர்வோர்களாக இருந்தாலும் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற அனைவருக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும்; மீட்டர் இல்லாமல் மின்சாரத்தை வழங்கக்கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது மத்திய அரசு. அதில் அங்கம் வகிக்கிறது தி.மு.க. என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



2003 நவம்பர் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதையும் மீறி இப்போது இலவச மின்சாரம் வழங்கக்கூடாது என்று சட்டம் வந்துவிட்டது. மீட்டர் பொருத்தப்படாமல் மின்சாரம் வழங்கக்கூடாது என்று சட்டம் வந்துவிட்டது. இருந்தாலும்கூட, தமிழ்நாட்டில் சிறு-குறு விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக, மிகவும் குறைவான கட்டணத்தை அவர்களுக்கு நிர்ணயித்து அந்தக் கட்டணப் பணத்தையும் மணியார்டர் மூலமாக அரசே வழங்கிக் கொண்டு விவசாயிகளை காப்பாற்றிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, மறைமுகமாக-Indirect-ஆக இலவச மின்சாரத் திட்டத்தை தொடரும்படி நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், பேசி முடியுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஒரே ஒரு நிமிடம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக சிலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் அதற்குள்ளே போனால், ஏற்கெனவே ஒரு உரிமைப் பிரச்சினை இருக்கிறது, அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால், தெளிவாகச் சொல்கிறேன்.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குள்ளே போக விரும்பவில்லையென்றால் என்ன அர்த்தம்? நான் சொன்னது பூராவும் உண்மை. அதை மறுக்க முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக நான் உரிமைக் குழுவிற்கும் பதில் எழுதியிருக்கிறேன். அதில் என்ன உண்மை என்பது பிறகு தெரியவரும். நான் சொல்ல விரும்புவது, 1998-லே State Regulatory Commission நியமிக்கப்பட்டது உண்மை. ஆனால், 2001 வரையில் அந்த கமிஷன் இயங்கவில்லை. ஏனென்று சொன்னால் நாங்கள் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்குவோம் என்று, எப்படி முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடத்திலே போய் சொல்லி, அதற்கு ஒப்புதல் பெற்றார்களோ, அதைப்போல நாங்களும் அந்த மானியத்தை

ஏற்றுக்கொள்கிறோம், அரசாங்கமே அவர்களுக்கு செலுத்திவிடும் என்று சொல்லி, நாங்கள் 2001 வரையிலே இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்கினோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 வரை தி.மு.க.வினர் இங்கே மாநிலத்தில் ஆட்சியில் இருந்தார்கள். அதுவரை இலவசமாக விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கினார்கள். உண்மைதான். ஆனால், தற்போது தி.மு.க. மத்திய அரசில் ஆட்சி புரிகிறது. இப்போது, அவர்கள் புதிய Electricity Act, 2003 என்னும் புதிய சட்டத்தைக் கொண்டு வந்து, இலவச மின்சாரம் வழங்கப்படக் கூடாது, எல்லோருக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே அதற்கு மாண்புமிகு ஆற்காடு வீராசாமி என்ன பதில் கூறப்போகிறார்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மிக அருமையாக ஒரு கேள்வியைக் கேட்டார்கள். மத்திய அராசங்கம் எல்லோருக்கும் மீட்டர் பொருத்த வேண்டும் என்ற ஒரு சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்களே அதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார் என்று சொல்லுகிறார்கள். மீட்டர் பொருத்தினாலும், எப்படி நீங்கள் இப்போது சிறு, குறு விவசாயிகளுக்கு மீட்டர் பொருத்தி 100 கோடி ரூபாய் மானியம் வழங்கப் போகிறீர்களோ அதைபோல, மற்ற விவசாயிகளுக்கும் 20 பைசா ஒரு யூனிட்டுக்கு என்று கணக்கு போட்டால் மேலும் ஒரு 150 கோடி ரூபாய் வரும். ஆக, 250 கோடி ரூபாயை நீங்கள் மானியம் கொடுத்துவிட்டு மீட்டர் பொருத்தினால், ஏன் நீங்கள் மீட்டர் பொருத்தியதற்கு பிறகு மானியம் கொடுக்கிறீர்கள் என்று மத்திய அரசாங்கம் நிச்சயமாகக் கேட்காது. அப்படி கேட்டால், அந்த மத்திய அரசாங்கத்திடம் கலந்து பேசி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை தி.மு.க. பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி பேசுங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன் முடிந்தது. மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும்; விடுங்கள். (குறுக்கீடு) ஜி.கே. மணி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு பாயிண்டை சொல்லிவிடுகிறேன். சபாநாயகர் சார், ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். இதனை கொடுத்தது நான்தான். ஒரே ஒரு பாயிண்டை ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.



**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மணியார்டருக்காக, 5 கோடி ரூபாயை இப்போது செலவு செய்து அனுப்பிக் கொண்டு இருக்கிறது. அதை நீங்களே பேப்பர் அட்ஜெஸ்ட்மென்ட்டாக செய்து கொண்டு--ஏன் 5 கோடி ரூபாய் விரயம் செய்கிறீர்கள் என்பதை நான் வன்மையாக இந்த இடத்திலே கண்டிக்கிறேன். தேவையற்ற ஒன்று. மத்திய அரசுக்குப் போய் ஏன் பணத்தை கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள்? நீங்களே பேப்பர் அட்ஜெஸ்ட்மென்ட் போட்டு மின்சார வாரியத்திற்குப் பணத்தை கொடுத்துவிட்டுப் போய் இருக்கலாம். இந்த வகையில் 5 கோடி ரூபாய் பெரிய விவசாயிகளுக்கு நீங்கள் கொடுத்து அவர்களைக் காப்பாற்றியிருக்கலாமே! ** நீங்கள் விவசாயிகளுக்காக இருப்பது உண்மையானால், தயவு செய்து உடனடியாக இலவச மின்சாரத்தைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டு அமைகிறேன்.

**திரு. எச். ராஜா:** தலைவர் அவர்களே,...

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரனுடைய பேச்சில் இதற்குத் தொடர்பு இல்லாமல்** என்று சொன்ன அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஜி.கே. மணி சொல்லுங்கள்.

**திரு. எச். ராஜா:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா சொல்லுங்கள்.

*முற்பகல் 11-55*

**திரு. எச். ராஜா:** அதாவது மத்திய அரசாங்கம் முதலில் Power Regulation Authority கொண்டு வந்தபோது எந்த மாநிலம் எந்த ஒரு class of consumer-க்கு சப்சிடியிலே மின்சாரம் கொடுக்கலாமோ அதைக் கொடுக்கலாம் என்று சொல்லியிருந்தது. இப்போதும்கூட அனைவரும் மீட்டர் பொருத்த வேண்டுமென்று சொல்லி இருப்பதற்குக் காரணம் மின் திருட்டை நிறுத்துவதற்காக, அதைத் தடுப்பதற்காகத்தான். ஒரு தகவலுக்காகச் சொல்லுகிறேன். கம்யூனிஸ்ட், காங்கிரஸ் ஆளுகின்ற

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாநிலங்களில்கூட அனைவரும் மீட்டர் பொருத்த வேண்டும் என்கின்ற ஒரு விதியைக் கொண்டு வந்த காரணத்தினாலே மின் திருட்டு 70 சதவீதம் வரை தடுக்கப்பட்டு இருக்கிறது என்கின்ற புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. ஆனால் அப்படி மீட்டர் பொருத்தினாலும்கூட மாநில அரசாங்கம் விரும்பினால் எந்த ஒரு class of consumer-க்கும் அவர்கள் சப்சிடி கொடுக்க முடியும். ஆகவே, அந்த விதமாக மாநில அரசாங்கம் இப்பொழுது விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டு இருப்பதிலே I have no quarrel. It is right and proper. அதனாலே இதை நாம் எதற்காக கொண்டு வந்தோம் என்றால், மின் திருட்டைத் தடுக்கத்தான், எனவே, அதை சரியாகத்தான் தமிழக அரசு செயல்படுத்தி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, 5 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்து. ஒரு தவறான தகவல் இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு தலைவர்கள் பேச வேண்டும். உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவையிலே விவாதித்துக்கொண்டு இருப்பது மிக முக்கியமான பிரச்சினை. அதிலும் விவசாயிகளுடைய வாழ்க்கைப் பிரச்சினை. உயிர்நாடிப் பிரச்சினை. 'உழுவார் உலகுக்கு அச்சாணி' என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த உழக்கூடிய உழவுத் தொழிலைச் செய்து அனைவருக்கும் உணவு அளிக்கக்கூடிய விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு சலுகை இந்த இலவச மின்சாரம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட பதிலுரையிலே, இதை விவசாயிகளெல்லாம் ஏற்றுக்கொண்டுவிட்டதாகச் சொல்லுகிறார்கள். நாங்கள் தமிழ்நாடு முழுவதும் கிராமம் கிராமமாகச் செல்லுகிறோம். இந்த மின் கட்டணத் தொகை அரசாலே மணி ஆர்டர் செய்யப்பட்டிருந்தாலும் அது விவசாயிகளாலே திரும்பச் செலுத்தப்பட்டு இருந்தாலும்கூட, விவசாயிகள் மத்தியிலே மிகப்பெரிய கொந்தளிப்பு இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. கிராமம் கிராமமாகப் பார்க்கிறோம். விவசாயிகள் இதுவரையிலே அராசங்கத்தாலே பெற்றிருந்த அந்தச் சலுகை...





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் ரத்து ஆகிவிட்டது என்று சொல்லி இதனால் விவசாயிகள் மத்தியில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுவதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது என்றுதான் சொல்ல முடிகிறது. காரணம் 1998 இல் இந்த State Electricity Regulatory Commission என்னும் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியபோதும் பாட்டாளி மக்கள் கட்சி மத்திய அரசில் அங்கம் வகித்தது. இப்போது 2003 இல் இந்தப் புதிய Electricity Act, 2003 என்னும் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றி விவசாயிகள் வயிற்றில் அடித்தபோதும், பாட்டாளி மக்கள் கட்சி இன்னும் மத்திய அரசில் அங்கம் வகிக்கிறது. ஆகவே, அங்கே எதிர்ப்பைத் தெரிவிக்காமல், அங்கே இந்தச் சட்டத்தை எதிர்க்காமல், உங்களுடைய அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மத்தியிலே ஆதரித்துவிட்டு, இங்கே தமிழகத்தில் வந்து இதைப்பற்றிக் குறை கூறினால் என்ன அர்த்தம் என்று புரியவில்லை. கொந்தளிப்பு, அது, இது என்று பேசுகிறீர்களே, உங்களைப் பற்றிய உண்மைகளை மக்கள் மத்தியிலே எடுத்து விட்டால் உங்களைப் பார்க்கின்றபோது அல்லவா கொந்தளிப்பு ஏற்படும்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பற்றிய உண்மைகளை முதலமைச்சர் அவர்கள் பகிரங்கமாக, வெட்ட வெளிச்சமாக மக்கள் மத்தியிலே எப்பொழுதும் சொல்லலாம். எங்களுக்கு ஒன்றும் மடியில் கனம் இல்லை. வழியிலும் பயம் இல்லை, பயப்பட வேண்டிய அவசியமும் இல்லை. நாங்கள் திறந்த புத்தகமாக இருந்துகொண்டு இருக்கிறோம். இதிலே மாற்றம் இல்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மாநில அரசு விரும்புகின்ற வரையிலே இலவச மின்சாரத்தை வழங்கலாம் என்று 1998-லே தான் மத்திய அமைச்சரவையிலே அங்கம் வகித்தபோது எடுத்து வைத்ததாக, அந்த ஷரத்தைச் சேர்த்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இப்போது இலவச மின்சாரம் வழங்கக் கூடாது என்று தமிழக அரசும் முதலமைச்சரும் முடிவு எடுத்து விட்டார்களா? அன்று இருந்த சிந்தனை இன்று மக்கள் மத்தியிலே, மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கவேண்டும் என்ற எண்ணம் முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் இல்லையா என்பதனை நான் கேட்க விரும்புகிறேன். நாங்கள் கேட்க

விரும்புவதெல்லாம், இதை ஏதோ அரசியல் ஆக்க வேண்டும்; இதை பூதாகரப்படுத்தவேண்டும் என்ற நோக்கம் இல்லை. பொதுவாக, விவசாயிகளுக்குப் பெரிய குறையாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே எந்த மாநிலத்திலும் கிடைக்காத காலத்திலே அன்றிலிருந்து இன்று வரையிலே விவசாயிகளுக்கு கிடைத்து வந்த ஒரே சலுகை, இலவச மின்சாரம். இதிலே மாற்றம் இல்லை. அந்த இலவச மின்சாரம் பறிபோய் விட்டதே என்ற மிகப் பெரிய ஏக்கம். ஆகவே, விவசாயிகள் மத்தியிலே கொந்தளிப்பு இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, மறுபடியும், மறுபடியும் அதையே பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். இலவச மின்சாரம் ரத்து ஆகவில்லை; பணம் அனுப்புகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நீங்கள் ரத்து ஆகிவிட்டது என்று மறுபடியும் சொல்லுகிறீர்கள். மறுபடியும், மறுபடியும் பழைய விவாதத்திற்கே போக வேண்டாம். ஏதாவது ஒரு நடைமுறைச் சிக்கல் இருந்தால் அதை சொல்வதற்காகத்தான் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு. இதிலே ஏதாவது பெரியதாகச் சிக்கல் இருந்தால் சொல்லுங்கள்.

*நண்பகல் 12-00*

**திரு. ஜி.கே. மணி:** அதிலே இருக்கிற உண்மையைச் சொல்லிவிடுகிறேன். ஆகவே, மத்திய அரசு கொண்டு வந்ததினுடைய நோக்கம், இந்த மின் திருட்டைத் தடுப்பதற்காக மட்டும்தான். அதைத்தான் திரு. ராஜா அவர்கள்கூடத் தெளிவுபடுத்தினார்கள். இது சம்பந்தமாக, மத்திய அமைச்சரிடத்திலே நாங்கள் பேசினோம். விளக்கமாகவும் கேட்டோம். இன்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்களே, இந்த இழப்பை ஈடுகட்ட வேண்டுமென்று சொன்னால், மின் திருட்டைத் தடுத்தாலே போதுமானது. தமிழகத்திலே மின்சாரத் திருட்டு எவ்வளவு? 16.7 சதவீதம் என்று தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. ஆனால், உண்மையான கணக்கு, இன்னும் கூடுதலாக இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். *(குறுக்கீடு)*



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார்கள். மின் திருட்டு 16 சதவிகிதம் இல்லை. Transmission loss அதாவது உற்பத்தி செய்து, மின் கடத்தும்போது, அந்த லைன் வழியாக 'லாஸ்' செய்வது, 16.5%. இது அகில இந்திய ரீதியில் ஒப்பிடும்போது சில மாநிலங்களில் 30 சதவிகிதம், 40 சதவிகிதம் என்ற அளவுக்கு இருக்கிற நிலையில் நம்முடைய தமிழ்நாட்டிலே மட்டும்தான் 16.5 சதவிகிதம். எனவே, இதையும் குறைக்க வேண்டும்—இண்டர்நேஷனல் அளவிலே, அந்த Transmission loss-ஐ reduce செய்ய வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் சில உத்தரவுகளைப் பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மின்மாற்றிகள் மற்றும் லைன்கள் எல்லாம் இன்றைக்கு மாற்றம் செய்யப்பட்டு வருவதன் காரணமாக, இன்னும் 2 சதவிகிதம் அளவுக்கு T & T losses குறைகின்ற வாய்ப்பு இருக்கிறது.

மின் திருட்டைப் பொறுத்தவரையிலே, பத்திரிகையிலே அடிக்கடி பார்த்திருக்க முடியும். அதற்கென்று இரண்டு squad-களைப் போட்டு, தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு C.E-ஐயும், ஒவ்வொரு S.E.-ஐயும், ஒவ்வொரு E.E.-ஐயும் இத்தனை squads மூலமாக, ஒவ்வொரு நாளும் இத்தனை inspect செய்யவேண்டும்; இவ்வளவு பேரைப் பிடிக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த 2 ஆண்டுகளுக்கு மட்டும் கிட்டத்தட்ட 66 கோடி ரூபாய்க்கு மேலே மின் திருட்டு கண்டுபிடித்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, ஒரு மணித் துளிக்குள் பேசி முடியுங்கள். இன்னும் 2 பேர் பேசவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Transmission loss, theft இரண்டும்—இவை இரண்டும் இதிலேதான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த இரண்டையும் முறைப்படுத்தினாலே, இந்த மின் இழப்பை, இந்த இழப்பீட்டுத் தொகையை ஈடுகட்டலாம் என்று மத்திய அரசாங்க அதிகாரிகள் சொல்கிறார்கள். ஒரு மிகப் பெரிய அதிகாரி, சேலம் மாவட்டத்திலே நடைபெற்ற ஒரு கருத்தரங்கத்திலே கலந்துகொண்டு, அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆகவே, இதிலே நாங்கள் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டிலே இதுவரை இருந்ததைப் போலவே தொடரவேண்டும் என்பதுதான். விவசாயிகளுக்கு மிகப் பெரிய இழப்பு.

[திரு. ஜி.கே. மணி] [2003 நவம்பர் 4

முதலமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே, 2491.25 கோடி இழப்பீடு என்று சொல்கிறார்கள். அது மின்சார வாரியத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய 2,500 கோடியிலே இன்னும் கூடுதலாக விவசாயிகளுக்கும், இன்னும் ஒரு விளக்கைப் பயன்படுத்தக்கூடிய அந்தக் குடிசைவாசிகளுக்கும் சேர்த்து 100 கோடி ரூபாய்தான். அந்தப் புள்ளிவிவரத்தைக் கடந்த கூட்டத்தொடரிலேயே நான் சொன்னேன். ஆக, இவ்வளவெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நீங்கள், அதிலும் குறிப்பாக 66 கோடி ரூபாய் மின் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இவ்வளவெல்லாம் சாதித்ததாகச் சொல்லக்கூடிய நீங்கள், இன்னும் 100 கோடியை விவசாயிகளுக்கு வழங்கி, விவசாயிகளுக்குப் பழைய நிலை தொடருவதற்கு மனம் இல்லையா? 100 கோடிதான். ஒன்றும் அதிகமான தொகை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். திரு. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, எந்த வகையிலே எடுத்துக்கொண்டாலும்கூட—இப்போது இன்னொன்றையும் சொல்கிறீர்கள். ஏதோ, மணி ஆர்டர் மூலமாக விவசாயிகளுக்கு அனுப்புவதாகச் சொல்கிறீர்கள். விவசாயிகளின் மத்தியிலே இருக்கக்கூடிய மனக்குறை என்னவென்று சொன்னால், காலப்போக்கிலே நிதி நெருக்கடி என்றோ பல காரணங்கள் காட்டி, இதையும் நிறுத்திவிடுவார்கள் என்ற அச்ச உணர்வே பிரதானமாக இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட அச்சத்தைப் போக்கக்கூடிய அளவிலே, 100 கோடிதானே செலவு; அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு அதைத் தொடரவேண்டும் என்ற மனம் கட்டாயம் வரவேண்டும். இதிலே அரசியல்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். திரு. சந்தானம்.

**திரு. ஜி.கே. மணி:** இதில் அரசியலுக்கே இடமில்லை. ஆகவே, அந்த வகையில், அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். முடித்துவிடுங்கள். திரு. சந்தானம்.



2003 நவம்பர் 4]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அரசியல் பிரச்சினைக்கும் இது காரணமாக இருக்காது. இது விவசாயிகளுடைய பிரச்சினை; வாழ்க்கைப் பிரச்சினை, விவசாயிகளின் எதிர்பார்ப்பு. ஆகவே, எதையும் மனதிலே எடுத்துக்கொள்ளாமல், பழைய நிலை தொடரவேண்டும்; 100 கோடி வழங்கினாலே போதுமானது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தமிழ்நாட்டில்தான் தொடர்கிறது என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் தமிழக அரசை வற்புறுத்தி அமர்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது பற்றி, ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் விரிவான பதிலை அளித்திருந்தாலும்கூட, எங்களைப் பொறுத்தளவிலே, மத்திய அரசு, இந்த மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தைக் கொண்டு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் நாங்கள். இது வேண்டாம் என்று சொல்லி, நாடாளுமன்றத்திலேகூட நாங்கள் தர்ணா செய்தவர்கள். இங்கே இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகளும் இதற்கு ஆதரவாக இருந்தாலும்கூட, எங்களைப் பொறுத்தளவிலே, இதை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் இலவச மின்சாரம் மீண்டும் விவசாயிகளுக்கு வழங்குகிறோம் என்று சொல்கின்ற நிலையை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அதிலே அவர்கள் வழங்குவது சிறு விவசாயிகளுக்கும், குறு விவசாயிகளுக்கும் வழங்குகிறார்கள். ஆனால் பெரிய விவசாயிகள் என்று பாகுபாடு செய்து அவர்களுக்கு இலவச மின்சாரம் இல்லை என்கின்ற நிலை இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள். இன்றைக்கு அவர்கள் கொடுத்து இருக்கின்ற புள்ளிவிவரங்கள் பிரகாரம் ஏறக்குறைய 49 கோடி ரூபாய்தான் சிறு, குறு விவசாயிகளுக்கு அரசாங்கம் மானியமாக வழங்கி இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். அதேபோல் மின் துறை அமைச்சர் கூறுகின்றபோது, பெரு விவசாயிகள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் 44 கோடி மட்டுமே; அதிலே 39 கோடி ரூபாய் செலுத்தி இருக்கிறார்கள் என்றும் குறிப்பிடுகிறார்கள்....

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 49 கோடி என்று சொன்னால், அது 1/2 ஆண்டுக்கு.

6 மாதங்களுக்கு ஒரு முறை இந்தப் பணம் விவசாயிகளுக்கு அனுப்பப்படும். முழு ஆண்டுக்கான செலவினம் 100 கோடி ரூபாய்.

**திரு. லா. சந்தானம்:** அதுபோல, பெரிய விவசாயிகள் மொத்தமாகச் செலுத்த வேண்டிய கட்டணமே 44 கோடி ரூபாய் என்று மின் துறை அமைச்சர் இங்கு குறிப்பிடுகின்றபோது குறிப்பிட்டு இருக்கின்றார்கள். அதை ஓராண்டுக்கு என்ற கணக்கிலே பார்க்கும்போது ஏறக்குறைய 88 கோடி ரூபாய் பெரிய விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இதில் என்ன ஒரு சிறு சங்கடம் என்று சொன்னால், பெரிய விவசாயிகள் என்று வருகின்றபோது, இன்றைக்கு இருக்கின்ற கடுமையான வறட்சி சூழ்நிலையிலே பெரிய விவசாயிகள், சிறு விவசாயிகள் என்று வேறுபடுத்திப் பார்க்கவே முடியாத ஒரு நிலை இருக்கிறது. 2 ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயியும், தான் வைத்திருக்கின்ற அந்த நிலத்திலே விவசாயம் செய்ய முடியவில்லை. அதைபோல 100 ஏக்கர் வைத்திருப்பவனுக்குக்கூட மழை இல்லை; கிணற்றில் தண்ணீர் இல்லை என்று சொல்கின்றபோது, மொத்த நிலமும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஒரு சூழ்நிலைதான் இருக்கின்றது. நாங்கள் எல்லாம் கிராமப்புறங்களிலே கிணற்றுப் பாசனத்தை நம்பி விவசாயத்தைச் செய்கின்றவர்கள்; பல்வேறு கிராமங்களிலே இன்றைக்கு கிணற்றுப் பாசனத்தைப் பொறுத்தவரையில், ஏறக்குறைய 100 அடிகளுக்கு மேலாக தோண்டிக்கூட தண்ணீர் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. ஆழ்துளைக் கிணறுகள் மூலமாக ஏறக்குறைய 500 அடிகளுக்கு மேலாக இருக்கின்ற தண்ணீரைத்தான் இன்றைக்கு விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, ஏறக்குறைய 60 சதவீதத்திற்கு மேலான கிணறுகளிலே மின் இணைப்புகள் பெற்று இருந்தாலும், அவை எல்லாம் இன்றைக்கு பயனற்றதாக, ஓடாத நிலையிலேதான், இருந்துகொண்டு இருக்கின்றன. இருந்தாலும், அரசாங்கம் மின்கட்டணம் செலுத்த வேண்டும் என்கின்ற விதியை ஏற்படுத்திவிட்டது என்கின்ற நிலையிலேதான், அரசினுடைய திட்டத்திற்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று சொல்லித்தான், இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு முன்வந்து இருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்த அரசு பல்வேறு சலுகைகளை அளித்து இருக்கிறது. ஏறக்குறைய பொது விநியோகத் திட்டத்திலே 20 கிலோ அரிசிக்கு, 10 கிலோ அரிசிக்கு மட்டும்தான் ரூ.3.50; பாக்கி 6 ரூபாய்க்கு வாங்க வேண்டுமென்ற நிலையைக்கூட சற்று நிதிநிலை சீரான பிறகு இந்த



அரசு அதை மறுபரிசீலனை செய்து 20 கிலோ அரிசியுமே ரூ.3.50-க்கு வழங்கலாம் என்கின்ற நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

அதுபோல இலவச வேஷ்டி சேலை வழங்க முடியவில்லை என்கின்ற நிலையை மாற்றி, இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 120 கோடி ரூபாயை இலவச வேஷ்டி சேலை வழங்குவதற்காக பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அறிவித்து இருக்கிறார்கள். இப்படியெல்லாம் ஏழை எளிய மக்கள் மீது, விவசாயிகள் மீது பற்றுதல் உள்ள அரசாகத்தான் இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது. எனவே, முதலமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து இந்த பெரிய விவசாயிகளுக்கு, நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ஏறக்குறைய 88 கோடி ரூபாய்தான் ஆண்டு ஒன்றுக்கு வருகிறது என்கின்ற முறையில், இந்த மின்சாரம் ரத்து செய்யப்பட்டது என்று நமது எதிர்க்கட்சியினர் மக்களிடத்திலே ஒரு தவறான தகவலை கொண்டு செல்லாத அளவிற்கு, அவர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அனுப்பிய ரூ.625/-ஐயும் பெற்று வந்திருக்கிறேன். உங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் மின் இணைப்பைப் பற்றி....... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பாவு, சிறு விவசாயியா நீங்கள்?

பிற்பகல் 12-10

**திரு. மு. அப்பாவு:** மிகக் குறுகிய விவசாயி. (சிரிப்பு) இன்று தமிழகத்தில் 80 சதவிகித மக்கள் விவசாயம் செய்து அன்றாடம் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் மீட்டர் இருந்தது; இரண்டு பைசா குறைக்க வேண்டும் என்று சொன்னபோது கோவில்பட்டி, குருவிகுளம், கோயம்புத்தூரிலே பல இடங்களிலே விவசாயிகள் சூடுபட்டார்கள், செத்தார்கள், மடிந்தார்கள். விவசாயிகள் மறக்கவில்லை இன்னும். அதன் பின்பு, 2000 ஆம் ஆண்டு நமது மாண்புமிகு முன்னாள் மின் துறை அமைச்சர் அவர்கள், ஒரு விவசாயி முதன்முதலாக மின் இணைப்பு பெறும்போது 3 எச்.பி. வாங்கி—3 குதிரைத்திறன் கொண்ட மின் இணைப்பைப் பெற்று,

கிணற்றினுடைய ஆழம் கீழே செல்லச் செல்ல, 5, 10 எச்.பி. என்று வைத்திருந்தால் அதை நடைமுறைபடுத்துவதற்கு ரூ.25,000 கட்ட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன் பின்பு, இந்த மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை உருவாக்கி மின் கட்டணம் கட்ட வேண்டும், குதிரைத் திறனுக்கு 250 ரூபாய் கட்ட வேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்ததும் முன்னாள் மின் துறை அமைச்சர் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நேரத்தில் இதை எதிர்த்து நான் சட்டமன்றத்திலே குரல் கொடுத்து, ஜீரோ அவரிலே எதிர்த்தபோது, என்னைப் பேசவிடாமல், சட்டமன்றத்தை விட்டு வெளியே தூக்கிப் போட்டதை விவசாயிகள் மறந்து இருக்க மாட்டார்கள். அதன் பின்பு மாண்புமிகு அன்றைய முதலமைச்சர் அவர்களை வீட்டிலே போய் சந்தித்தேன்; 05-01-2001 என்று எண்ணுகிறேன். வள்ளியூரிலே விவசாயிகளை எல்லாம் திரட்டி, இதற்கு எதிர்ப்பாக ஒரு பெரிய போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து அதற்காக சுமார் 25 ஆயிரம் விவசாயிகள் அங்கே திரளுகின்ற நிலை ஏற்பட்டபோது, முதலமைச்சரைப் பார்க்க வேண்டும், முதலமைச்சரைப் பார்த்து ஒரு கோரிக்கை கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சரை அவருடைய இல்லத்திலே சென்று சந்தித்து, தமிகத்திலே 16 இலட்சம் பம்புசெட் விவசாயிகள் இருக்கிறார்கள். ஏற்கெனவே விவசாயிகள் இரண்டு காசு குறைக்க வேண்டும் என்று சொன்னபோது துப்பாக்கிச் சூடு நடந்து ஆட்சியை இழந்ததை மறந்து விடாதீர்கள். 16 இலட்சம் விவசாயிகள்—இரண்டு காசு—இரண்டு ஓட்டுகள் எதிராக போட்டால் 32 இலட்சம் ஓட்டுகள் உங்களுக்கு எதிராக விழும் என்பதை அவருடைய நினைவுக்குக் கொண்டுவந்து சொல்லிவிட்டு, கீழே வந்தேன். நான் 10-30 மணிக்கு பார்த்துவிட்டு வந்திருப்பேன். 12-00 மணிக்கு தொலைக்காட்சியிலே, தமிழகத்திலே உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தொடரும் என்றவொரு அறிவிப்பை அறிவித்தார்கள். ஆக, இந்த ஒழுங்குமுறை ஆணையத்தை அமைக்கவில்லை என்றோ, விவசாயிகளுக்கு, நாங்கள் ஒழுங்குமுறை ஆணையம் அமைத்தால் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்குவோம் என்றோ அந்த அரசு அறிவிக்கவில்லை. இதுதான் நடந்த உண்மை என்பதை நாடு அறியும் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்துகிறேன். இருந்தாலும்கூட தமிழகத்தில் 80% மக்கள்



விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். 30 ஆண்டுக்கு முன்னால் இரண்டு மூட்டை நெல்—அதாவது, ஒரு மூட்டை நெல் 100 ரூபாய், ஒரு பவுன் தங்கம் 100 ரூபாய். ஒரு அரசு ஊழியருடைய மாத வருமானம் 100 ரூபாய், அதாவது மாதச் சம்பளம். ஆகவே, ஒரு மாதச் சம்பளம் ஒரு ஆசிரியர் பெற்றால் ஒரு மூட்டை நெல்தான் வாங்க முடியும். ஆனால் இன்று ஒரு மாதச் சம்பளத்தில் சுமார் 40 மூட்டை நெல் வாங்குகின்ற அளவிற்கு ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுவிட்டன. விவசாயிகள் மிகப் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். விவசாயம் செய்து ஆண்டு முழுவதும்கூட 10 மூட்டை நெல்லை அவர்களால் பார்க்க முடியவில்லை. ஆண்டிற்கு ஒரு வேஷ்டி, சேலைகூட எடுத்து உடுக்க முடியவில்லை. இன்னும் சொல்லப்போனால் மழை பொய்த்துவிட்டது.

என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் விவசாயிகள் எல்லாம் விவசாயம் செய்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. 10 ஆண்டுகள் தொடர்ந்து மழை இல்லாமலேயே இருந்து கொண்டிருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில், பெண்கள் பீடி சுற்றி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரேஷனிலே கொடுக்கின்ற அரிசியை வாங்கி அன்றாடம் ஜீவன் போக்குகின்ற நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு, 16 இலட்சம் பம்புசெட் விவசாயிகளுக்கும் இந்த மின் இணைப்பை இலவசமாகக் கொடுப்பதால் பல பிரச்சினைகள் இருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 80 சதவிகித மக்கள் இன்று தமிழகத்திலே இருக்கிறார்கள். சுமார் 25 ஆயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் தாக்கல் செய்கிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய நிலவரப்படி சரியான புள்ளிவிவரத்தை நான் கூற விரும்புகிறேன். தற்போது தமிழகத்தில் விவசாயத்தை நம்பி இருக்கின்றவர்கள் மக்கள்தொகையில் சரியாக 62 சதவிகிதம் பேர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் எனக்குத் தெரிந்த அளவு உள்ள விவரத்தைச் சொன்னேன். ஏற்கெனவே நாம் சுதந்திரம் பெறும்போது பெரும்பாலான மக்கள் விவசாயத்தைத்தான் நம்பி வாழ்ந்தார்கள். அந்த அடிப்படையில் அந்தக் கருத்தை நான் மனதில் வைத்து சொல்லிவிட்டேன்.

62% என்று சொன்னாலும்கூட, சுமார் 25,000 கோடி ரூபாய் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் ஒரு 500 கோடி ரூபாய் இந்த விவசாயிகளுக்கு ஒரு ஆண்டு மட்டும் கொடுத்தால், ஒரு ஆண்டில் 500 கோடி ரூபாயை ஒதுக்கி 500 மின் காற்றாலைகள், மின் உற்பத்தி செய்கின்ற மின் காற்றாலைகள் அமைத்தால் அதன்மூலம், ஒவ்வொரு காற்றாலையும் ஒரு ஆண்டிற்கு 20 இலட்சம் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது. ரூ.2.50 என்று பார்த்தாலும் கிட்டத்தட்ட 50 இலட்ச ரூபாய் ஒரு ஆண்டுக்கு ஒரு மின் காற்றாலை மூலம் உற்பத்தி பலன் கிடைக்கின்றது. அந்த அளவில் 500 கோடி ரூபாய்க்கு 500 மின் காற்றாலைகள் பொருத்தினால் ஒரு ஆண்டுக்கு அதன் மூலம் வருகின்ற வருமானம் 250 கோடி ரூபாய். (மணியடிக்கப்பெற்றது) ஒவ்வொரு ஆண்டும் 250 கோடி ரூபாய் வருமானமாக வரும். அதே 250 கோடி ரூபாயை—1000 கோடி ரூபாய் இந்த விவசாயிகளுக்கு ஒரு முறை ஒதுக்கிவிட்டாலே போதும், ஒவ்வொரு ஆண்டும் 500 கோடி ரூபாய்க்கு இந்த இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து பயன்படுத்தலாம். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் இருக்கின்றார்கள். அருமையான ஒரு மின் துறை அமைச்சர் இருக்கின்றார்கள். நம்முடைய அள்ளிக் கொடுக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கின்றீர்கள். தயவு செய்து இந்தக் கருத்தை பரிசீலனை செய்து இந்த அடிப்படையில் தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை நாங்கள் தொடர்ந்து தருகிறோம்; ஆக்கபூர்வமான பணியைச் செய்து இருக்கிறோம் என்று இந்த நாடு போற்றுகின்ற அளவிற்கு இந்தியத் திருநாட்டில் தமிழகத்தை தலைசிறந்த நாடாக உருவாக்குவதற்கு உழைக்கின்ற உங்களுடைய உழைப்பிற்கு இந்த விவசாயிகளுக்கு செய்கின்ற எந்தச் சலுகையும் வீண்போகாது. உங்களுக்கு விரோதமாக இருக்கமாட்டார்கள். நன்றி மறக்க மாட்டார்கள். விவசாயிகளை எதிர்த்தால்தான்—அவர்கள் பாவம். ஆகவே விவசாயிகள் பட்டினி, பசி என்று சொன்னபோது உணவு வழங்கிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணவைத் தட்டிலே ஏந்துவதற்கு சங்கடப்பட்டவுடன் 30 கிலோ அரிசியை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதையும் பரிசீலனை செய்து இந்த விவசாயிகளுக்குத் தொடர்ந்து இந்த இலவச மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையும் பேச அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சிறப்புக் கவன ஈர்ப்பு.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சிறப்புக் கவன ஈர்ப்பு என்று சட்டத்தில் இருப்பதற்கு அப்பால் போயாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** போயாகிவிட்டது. We feel it. இந்த முக்கியமான பிரச்சினையில் எல்லா கட்சிகளுக்கும் பேச வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனியாக ஒரு கச்சேரி வைத்துக்கொள்வோம் உங்களுக்காக. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலேயே காற்றாலை மூலமாக மின் உற்பத்தியில் முதல் இடம் வகிக்கவேண்டும் என்கிற அந்த கொள்கை அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக 60 சதவிகிதம் நாட்டிலே நாம்தான் முதன்மையாக இருக்கின்ற நிலைமை. கிட்டத்தட்ட 1100 மெகாவாட் காற்றாலை மூலமாக நமக்கு மின் உற்பத்தி கிடைக்கப்பெறுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். காற்றாலை நிறுவி அதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற மின்சாரத்தை விவசாயிகளுக்கு உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனவே அவருக்கு ஒரு கருத்தாக நான் சொல்லிக்கொள்வது, காற்றாலை அமைக்கப்படும்போது, ஆண்டு முழுவதும் மின் உற்பத்தி கிடைக்கப்பெறுவதில்லை. 4 மாதங்கள்தான் கிடைக்கப்பெறுகிறது என்கிற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கிடைக்கும் என்று சொல்லவில்லை. ஒரு கோடி ரூபாய்க்கு ஒரு காற்றாலை நிறுவினால் அதன்மூலம் ஒவ்வொரு ஆண்டும் 20 இலட்சம் யூனிட் மின்சாரம் கிடைக்கின்றது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்புதான் காற்றாலைகள் மிக அதிகமாக நிறுவப்படுகின்றன. அதேபோன்று 1991-1996 ஆம் ஆண்டிலே மிக அதிகமாக, கிட்டத்தட்ட 850 மெகாவாட் அளவு, இந்தியாவில் தமிழகத்தில்தான் மிக அதிகமாக காற்றாலைகள் உற்பத்தி செய்கின்ற அளவிலே நாம் செய்து இருந்தோம். தற்போது இந்த அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்தில்தான் சுமார் 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு அவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டு இருக்கின்றீர்கள். ஆகவே அந்த காற்றாலைத் திட்டத்தால் நிச்சயமாக விவசாயிகளுக்கு பலன் வரும். அதை பரிசீலனை செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த தி.மு.க அரசு நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகளை சிறிதும் கவனத்தில் கொள்ளாமல், மாநிலத்தை நிதிச் சீரழிவில் தள்ளிவிட்டது என்பது அனைவரும் அறிந்ததே.

1999-2000 மற்றும் 2000-2001 ஆகிய ஆண்டுகளில் மிகச் சீர்குலைந்து இருந்த நிதி நிலைமையைச் சரிசெய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை செயல்படுத்தாததால், மார்ச் 2001 இறுதியில் முந்தைய தி.மு.க. அரசு மாநிலத்தில் நிதி நிலையை முற்றிலும் சீர் கேடடையச் செய்துவிட்டது. இந்த மிகப்பெரிய நிதிச் சீரழிவினால் கிட்டத்தட்ட திவாலாகும் நிலையை எதிர்கொண்ட இந்த அரசு நிலைமையைச் சரி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதாகி விட்டது. தமிழக அரசின் நிதிநிலை, தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் பேருந்து போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் நிதி நிலைமை ஆகியவற்றையும் சீர்செய்யும் இமாலயப் பணியை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டது.

1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் என்னும் புதியதொரு சட்டத்தை இந்திய அரசு இயற்றியது. இந்தச் சட்டம் 25-4-1998 முதல் செயல்பாட்டுக்கு வந்தது. இந்தச் சட்டத்தின்கீழ் முந்தைய தி.மு.க. அரசு 17-3-1999 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தைத் தோற்றுவித்தது. பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் சராசரிச் செலவின் அடிப்படையில் மின்சாரத்திற்கான கட்டணம் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் மட்டுமே நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று இந்தச் சட்டம் குறிப்பிடுகிறது.





பிற்பகல் 12-20

2001 ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதி நிலைமை சீரழிந்த நிலையில் இருப்பதைக் கண்டது. 2001-2002 ஆம் ஆண்டில் மின்சார வாரியம் 5000 கோடி ரூபாய் அளவுக்கு மொத்த இழப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மைய அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு மின்சாரம் மற்றும் நிலக்கரி வாங்கியதற்காக 1962 கோடி ரூபாய் மின்சார வாரியத்தால் கொடுக்கப்பட வேண்டியிருந்தது. நிதி நிலைமை மிக அபாயகரமான நிலையில் இருந்ததால் 1-12-2001 முதல் மின்கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்திற்கும், மைய அரசு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் செலுத்த வேண்டிய இந்தத் தொகைகளை அரசே ஏற்க வேண்டிய கட்டாயத்திற்கும் இந்த அரசு தள்ளப்பட்டது. டிசம்பர் திங்கள் 1 ஆம் தேதி முதல் மின் கட்டண மாற்றத்தை அமலுக்குக் கொண்டுவந்த அதே வேளையில், விவசாய பம்பு செட்டுகளுக்கும் கிராமப்புறக் குடிசைகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்குவது தொடரப்பட வேண்டும் என்பதை இந்த அரசு உறுதி செய்தது.

2001 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முந்தைய தி.மு.க. அரசு துரிதப்படுத்தப்பட்ட மின்சார வளர்ச்சித் திட்டத்தின்கீழ், அதாவது Accelerated Power Development Programme-ன்கீழ் நிதி உதவியைப் பெற்றுவிட்டது. இதற்குத் தேவைப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அதாவது Memorandum of Understanding ஒன்று மத்திய அரசால் முன்மொழியப்பட்டது. மாநில ஒழுங்குமுறை ஆணையத்தை செயலாக்கம் பெறச் செய்யவும் மேலும் 31-12-2003-க்குள் அனைத்து நுகர்வோருக்கும் மின் பயனீட்டு அளவு கருவிகள், அதாவது மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டும் என்பதும் தமிழ்நாடு மின்சார வாரியம், மாநில ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண விகிதத்தை மாற்றியமைக்க ஒரு விண்ணப்பத்தினை 30-9-2002-க்குள் கொடுக்க

வேண்டும் என்பதும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள். முந்தைய தி.மு.க. அரசு இந்த நிதியுதவியை இந்திய அரசால் அனுப்பப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்கெனவே பெற்றுவிட்டது. எனவே, மைய அரசால் அனுப்பப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதைத் தவிர வேறு வழி இந்த அரசுக்கு இல்லை. இந்த நிலையில் வேறு வழி இல்லாததால் 2002 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்த ஒப்பந்தத்தில் இந்த அரசு கையெழுத்திட வேண்டியதாயிற்று.

2001-2002 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறையைச் சரி செய்ய 1-12-2001 அன்று முதற்கொண்டு கட்டண விகிதத்தை மாற்றி அமைத்த பின்னரும் 2002-2003 ஆம் ஆண்டில் 2589 கோடி ரூபாய் அளவிற்கும், 2003-2004 ஆம் ஆண்டில் 2993 கோடி ரூபாய் அளவிற்கும் பற்றாக்குறையை தமிழ்நாடு மின்வாரியம் சந்திக்க வேண்டியிருந்தது. இந்தப் பற்றாக்குறையைச் சரி செய்ய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின்கட்டண மாற்றத்திற்கான விண்ணப்பத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் 25-9-2003 அன்று அளித்தது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னர் தமிழ்நாடு அரசு விரிவான அறிக்கையை எழுத்து மூலமாக சமர்ப்பித்தது. அதில் விவசாய பம்புசெட்டுகளுக்கும், கிராமப்புறக் குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுவது தொடரப்பட வேண்டுமென்று திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருந்தது. 1998 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மத்திய அரசின் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சட்டத்திலுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி 2003 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் தேதி முதல் செயல்படுத்தும்படியான புதிய மின்கட்டண விகித ஆணையை பிறப்பித்தது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பல்வேறு வகையான மின் உபயோகிப்பாளர்களின் கட்டண விகிதத்தில் மாற்றம் செய்து வெளியிட்ட தனது ஆணையில், விவசாய பம்புசெட்டுக்களுக்கான கட்டண விகிதம் மீட்டர் பொருத்தப்பட்டு அதன் அடிப்படையிலான பயனீட்டு அளவில் யூனிட் ஒன்றுக்கு 20 பைசா வீதம் என்றும், அல்லது மீட்டர் பொருத்தப்படும் வரை ஆண்டொன்றுக்கு ஒரு குதிரை சக்தி பம்புசெட்டுக்கு 250 ரூபாய் வீதம் என்றும் குறிப்பிட்டு இந்தக் கட்டணம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில்



2003 செப்டம்பர் திங்கள் முதல் செலுத்தப்பட வேண்டும் என ஆணையை வெளியிட்டது.

பிற்பகல் 12-25

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டுள்ள இந்தக் கட்டணம் நாடு முழுமையிலும் உள்ள பம்புசெட்டுகளுக்கான கட்டண விகிதத்தைவிட மிகக் குறைந்த அளவாகும். மிகப் பெருமளவில் நிதிப் பற்றாக்குறையை தானே எதிர்கொண்டுள்ள நிலையிலும், தமிழ்நாடு அரசு தனது கடன்பாடுகளை நிறைவேற்றவே சிரமப்படும் நிலையிலும் இருந்தபோதும் விவசாயிகளுக்கு அரசின் உறுதியான உதவியை வழங்கும் ஒரு நடவடிக்கையாக இதுவரை இலவச மின்சாரம் பெற்றுவந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை நான் அறிவித்தேன். இந்தத் திட்டத்தின் கீழ் 3 குதிரைத் திறன் மோட்டார் வைத்துள்ள எல்லா சிறு மற்றும் குறு விவசாயிகளும் ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய் நிதியுதவி பெறுவர். இந்த நிதியுதவி இரண்டு அரையாண்டுத் தவணைகளில், தவணைக்கு 500 ரூபாய் என்ற வீதத்தில் வழங்கப்படும். மேலும் 5 குதிரை சக்தி மற்றும் அதற்கு அதிகமான குதிரை சக்தி மோட்டார் வைத்துள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆண்டொன்றுக்கு 1250 ரூபாய் என்ற வீதத்தில் இரண்டு அரையாண்டுத் தவணைகளில் நிதியுதவி பெறுவார்கள்.

இந்தத் திட்டத்தின்கீழ் 8.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். மேலும் கிராமப்புறங்களிலுள்ள குடிசை இணைப்புகளுக்கு நுகர்வோர் மின்கட்டணம் செலுத்த ஏதுவாக நிதியுதவி வழங்கும் திட்டத்தையும் நான் அறிவித்திருந்தேன். இந்தத் திட்டத்தின்கீழ் கிராமப்புற குடிசைவாசிகள் ஆண்டொன்றுக்கு 100 ரூபாய் உதவித்தொகை பெறுவார்கள். 9 இலட்சம் கிராமப்புற குடிசை மின் இணைப்புகள் இந்தத் திட்டத்தின்கீழ் பயனடையும்.

நான் இந்த அறிவிப்புகளைச் செய்தபோது, அரசின் இந்த நிதியுதவித் திட்டம் விவசாயிகளை உரிய காலத்தில் சென்றடையாது என்றும், இந்தப் பணம் விவசாயிகளைச் சென்றடைவதில் பெரிய பிரச்சினைகள் எழும் எனவும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. அரசின் இந்த நிதியுதவித் திட்டத்தின் பயன்கள் சிறு மற்றும் குறு விவசாயிகளை அடைவதில் தவறு ஏற்பட வாய்ப்பே இல்லாமல் உரிய காலத்தில் மணியார்டர் மூலமாக பணத்தை அனுப்பும் திட்டத்தை

நடைமுறைப்படுத்தியுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பம்புசெட் வைத்துள்ள 8.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அஞ்சல் பணவிடை அனுப்புவதை வருவாய்த் துறை உறுதிப்படுத்தியுள்ளது. இந்தப் பணம் அஞ்சல் பணவிடைகள் மூலம் அனுப்பப்பட்டதால் இது விவசாயிகளுக்குச் சரியாகப் போய் சேருவதில் எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படவில்லை.

இந்தத் திட்டம் மாபெரும் வெற்றியாக அமைந்துவிட்டது. மொத்தமுள்ள 15.24 இலட்சம் விவசாயிகளில் 13.36 இலட்சம் விவசாயிகள் 81.85 கோடி ரூபாய் அளவு மின் கட்டணத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 28-10-2003 நிலவரப்படி செலுத்தியுள்ளனர். அதாவது 87.69 சதவீதம் விவசாயிகள் கட்டணம் செலுத்தியுள்ளனர் என்பதும், செலுத்தப்பட்ட தொகை, மொத்த கட்டணத் தொகையில் 88.37 சதவிகிதம் என்பதும் குறிப்பிடத்தக்கது. 8.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளில் 87.78 சதவிகிதமான 7.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் 28-10-2003 நிலவரப்படி தங்களது கட்டணத்தை இந்த அரசின் நிதியுதவியுடன் செலுத்தியுள்ளனர். தமிழக மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையில் 88.84 சதவீதம் தொகையை இவர்கள் செலுத்தியுள்ளது, பெரும்பான்மையான விவசாயிகள் அரசின் இந்தப் புதிய திட்டத்தை வெகுவாக வரவேற்றுள்ளனர் என்பதையே காட்டுகிறது.

பிற்பகல் 12-30

மின் இணைப்பின் உரிமம் மாறியது; மின் இணைப்பின் உரிமையாளர் இறந்த பின் வாரிசுதாரர் பெயர் மாற்றம் செய்துகொள்ளாதது; தவறான முகவரிகள் போன்ற காரணங்களால் ஒருசில அஞ்சல் பணவிடைகள் திரும்பிவிட்டன. தமிழ்நாடு மின்சார வாரியம் உரிய பெயர் மாற்றம் செய்ய எளிய நடைமுறையை வகுத்துள்ளது. இந்தப் பெயர் மாற்றங்கள் நவம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள் முடிக்கப்படும். அதற்குப் பிறகு உரிய அஞ்சல் பணவிடைகள் பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அனுப்பப்படும். மின் கட்டணத்தைச் செலுத்த நவம்பர் திங்கள் 30 ஆம் தேதி வரை கால அவகாசம் கொடுக்கப்படும்.



புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தபோதும், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுவதை எனது அரசு உறுதிபடுத்தியுள்ளது. இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் பயனளிக்கும் இந்தத் திட்டம், அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும், குடிசை மின் இணைப்பைப் பொறுத்தவரையில், 9 இலட்சம் கிராமப்புறக் குடிசைவாசிகளுக்கு அஞ்சல் பணவிடை அனுப்பப்பட்டுள்ளது. இவர்களில் 7.5 இலட்சம் குடிசைவாசிகள் 28-10-2003 நிலவரப்படி ஏற்கெனவே தொகையைச் செலுத்திவிட்டனர். இது மொத்த குடிசை இணைப்புகளில் 84.12 சதவீதமாகும். விதிக்கப்பட்ட கட்டணத் தொகையான 5.4 கோடி ரூபாயில் 4.5 கோடி ரூபாய், அதாவது 84.46 சதவீதம் செலுத்தப்பட்டுவிட்டது. இந்தத் திட்டமும் மாபெரும் வெற்றியடைந்துள்ளது.

இவ்வாறாக, ஒழுங்குமுறை ஆணையத்தினால் விதிக்கப்பட்ட கட்டணங்களை ஒவ்வொருவரும் செலுத்தியாக வேண்டும் என்ற கொள்கையை உறுதி செய்யும் அதே நேரத்தில், சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் கிராமப்புற குடிசைவாசிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஏதுவாக இந்த அரசு நிதியுதவி செய்துள்ளது. மிகச் சிக்கலான இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, இந்த அரசு எடுத்த முயற்சி மாபெரும் வெற்றியடைந்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரம் சம்பந்தமாக நடைமுறையில் இருந்த அனைத்து சட்டங்களுக்கும் பதிலாக மின்சாரச் சட்டம் 2003 என்னும் சட்டத்தை மைய அரசு நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளதை அவையில் உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். எனவே, இனிமேல் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இயக்கம் இந்தச் சட்டத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டது. தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசால் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் 10-6-2003 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின்படி, எந்தவிதமான விதிவிலக்குமின்றி எல்லா மின் நுகர்வோர்களுக்கும் மீட்டர் பொருத்தப்படவேண்டும். அதாவது மீட்டர் பொருத்தப்படாமல்

எந்த ஒரு மின் நுகர்வோருக்கும் மின்சாரம் கொடுக்கக்கூடாது. இந்தச் சட்டத்தில் இரண்டு வருடங்களுக்குள் மீட்டர் இல்லாத இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்த வேண்டும் என்று கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மீட்டர் பொருத்துவதற்கான ஒரு வரையறுக்கப்பட்ட திட்டத்தை 16-3-2003-லிருந்து மூன்று மாதத்திற்குள் சமர்ப்பிக்க மின்சார வாரியத்தைக் கோரியுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த மீட்டர் பொருத்தும் திட்டத்தை சமர்ப்பிக்க 31-12-2003 வரை கால அவகாசம் கோரியுள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் புதிய மின் இணைப்புகள் அனைத்தும் மீட்டர் பொருத்தப்பட்டுதான் கொடுக்கப்படவேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது. இவ்வாறாக புதிய சட்டத்தின்படியும், மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவின்படியும் புதிய மின் இணைப்புகளை மீட்டருடன் மட்டுமே கொடுப்பதைத் தவிர தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வேறு வழியில்லை. மீட்டர் பொருத்துவதற்கான இணைப்புகளின் அதிகப்படியான எண்ணிக்கை, செலவு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு உரிய கால அவகாசத்தைப் பெற்று, படிப்படியாக தமிழ்நாடு மின்சார வாரியம் இதைச் செயல்படுத்தக் கருதியுள்ளது.

இனிமேல் எங்கள் முயற்சி திட்டவட்டமான விவசாய அபிவிருத்தித் திட்டத்தை விவசாய பம்புசெட்டுகள் உள்ள விவசாயிகளிடையே செயல்படுத்துவது ஆகும். இந்தத் திட்டத்தின்கீழ் விவசாய பம்புசெட்டு மூலம் பயிர் செய்யப்பட்டு வரும் நிலங்களின் தற்போதைய நிலவரம் நன்கு ஆராயப்பட்டு, அந்த விவசாயி அதிக நிகர வருவாய் பெற உரிய உதவித் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தத் திட்டம் தொடங்கப்படும். விவசாயிகள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதும், அதனால் மேம்பட்ட தரத்துடன் கூடியதொரு வாழ்க்கையை அவர்கள் பெறவேண்டும் என்பதும், அதேசமயம், அவர்கள் தங்கள் விவசாயத்திற்குத் தேவைப்படும் மின்சாரம் உள்ளடக்கிய பல்வேறு செலவுகளை சிரமமின்றி மேற்கொள்ள வேண்டும் என்பதும் எங்களது கோட்பாடாகும். ஒவ்வொரு பண்ணையும் இலாபகரமாக இயங்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்துவோம்.



நான் ஏற்கெனவே சில புள்ளிவிவரங்களை இந்த அவைக்குத் தெரிவித்தேன். அவற்றில் முக்கியமானதை மீண்டும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆண்டிற்கு ஒரு குதிரைத் திறனுள்ள பம்புசெட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் உத்தேச அளவு 1051 யூனிட்டுகள். 5 குதிரைத் திறனுடைய பம்புசெட்டிற்கு ஆண்டிற்கு உத்தேச அளவு 5255 யூனிட்டுகள். மின்சாரத்தின் அடக்க விலை அதாவது உற்பத்திச் செலவு ஒரு யூனிட்டிற்கு 307 காசுகள். மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதித்த கட்டணம் யூனிட்டிற்கு 20 காசுகள் மட்டுமே. வாரியத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ஏற்படும் இழப்பு 287 காசுகள். 5 குதிரைத் திறனுள்ள பம்புசெட் பயன்படுத்தும் மின்சாரத்தின் விலை 16,132 ரூபாய். ஆனால் விவசாயிகள் ஆண்டிற்கு செலுத்தும் தொகை 1250 ரூபாய் மட்டுமே. மின்சார வாரியம் 5 குதிரைத் திறனுள்ள பம்புசெட்டிற்கு வழங்கும் மின் கட்டணச் சலுகை 14,882 ரூபாய். 16.74 இலட்சம் பம்புசெட்டுகளுக்கு அளிக்கும் மின் கட்டணச் சலுகை 2491.25 கோடி ரூபாய் அல்லது 2500 கோடி ரூபாய் ஆகும். ஆகவே தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டிற்கு 2500 கோடி ரூபாய் மதிப்புள்ள மின்சாரத்தை மானியமாக விவசாயத்திற்கு இன்னும் அளித்து வருகிறது என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் பேசுகின்றபோது Wind Mill Power Generation-காற்றாலை மூலமாக மின்சார உற்பத்தி செய்வதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார். ஏற்கெனவே தமிழ்நாட்டில் காற்றாலை மூலமாக மின் உற்பத்தி அதிக அளவில் செய்யப்படுகிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே காற்றாலை மூலமாக மின் உற்பத்தி செய்யும் முதல் மாநிலம் தமிழகம் என்ற பெருமையை நாம் அடைந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) விவசாயிகளுக்காக பிரத்யேகமாக மேலும் காற்றாலை மின் உற்பத்தி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு கேட்டுக் கொண்டார். இது நல்ல யோசனைதான். இதை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியில் ஒன்றைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் உண்மை என்னவென்றால் இலவச மின்சாரம் ரத்தாகிவிட்டது, ரத்தாகிவிட்டது என்று எதிர்க்கட்சியினர் மக்களை, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களை போராட்டத்திற்குத் தூண்ட எவ்வளவோ பகீரத

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 நவம்பர் 4

முயற்சி செய்தாலும்கூட விவசாயப் பெருங்குடி மக்கள் போராடத் தயாராக இல்லை. போராட்டத்திற்கு யாரும் வரவில்லை. காரணம் இந்த அரசின் நல்லெண்ணத்தை விவசாயிகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் தெளிவாகச் சுட்டிக்காட்டியதுபோல் முன்பு இலவச மின்சாரம் என்ற பெயரில் அரசு அந்த மானியச் செலவை ஏற்றுக் கொண்டு சிறு, குறு விவசாயிகளுக்கு, அநேகமாக எல்லா விவசாயிகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு ஒரு சிறிய மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. பெயர் மாற்றம் அவ்வளவுதான். மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று பெயரளவில், உதட்டளவில் சொல்லி இருக்கிறோமே தவிர, உண்மையில் விவசாயிகள் தங்கள் கைப் பணத்தை எடுத்து அந்தக் கட்டணத்தைச் செலுத்தவில்லை. சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணத்திற்கான பணத்தை இந்த அரசே வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே மாற்றுப் பெயரில், கட்டணம் என்ற பெயரில் இலவச மின்சாரத் திட்டம் இன்றைக்கும் தொடருகிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசுகின்றபோது ஒரு கருத்தைத் தெரிவித்தார். விவசாயிகளிடையே ஒரு மனக்குறை இருக்கிறது என்றார். என்ன அந்த மனக்குறை? இன்றைக்கு மணி ஆர்டர் மூலமாக இந்த அரசு பணம் வழங்கிக் கொண்டிருக்கிறது, நாளை முடியவில்லை என்று நிறுத்திவிட்டால் என்ன செய்வது என்ற ஐயப்பாடு விவசாயிகளின் மனதில் இருப்பதாக அவர் தெரிவித்தார். இந்த ஐயப்பாடு வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களின் மனதில் இருக்கலாமேயொழிய, விவசாயிகள் இந்த அரசின்மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் இந்த அரசின்மீது வைத்திருக்கிற நம்பிக்கை ஒரு நாளும் வீண் போகாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இந்தத் திட்டம் தொடரும். விவசாயிகளின் நலன் பாதிக்கின்ற வகையில் எந்த ஒரு திட்டத்தையும், எந்த ஒரு நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீண்டும் சொல்கிறேன், இந்த நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக, கேடயமாக இந்த அரசு என்றைக்கும் இருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி)



2003 நவம்பர் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

என்றைக்கும் விவசாயப் பெருமக்களுக்கு உதவிக் கரத்தை இந்த அரசு நீட்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் நலனைப் பாதிக்க நாங்கள் ஒருபோதும், ஒரு காலத்திலும் அனுமதிக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு (குறுக்கீடுகள்) விவாதம் போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறு விவசாயிகளுக்கு Money Order மூலம் பணத்தை வழங்குகிறோம் என்பதில் ஏற்பட்டிருக்கிற குளறுபடிகளை எதிர்க்கட்சி சார்பிலே எடுத்து வைத்தபோது அதன் நியாயத்தை இந்த அரசு உணர மறுக்கிற காரணத்தாலும், இலவச மின்சாரத்தைத் தர வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தியதை ஏற்காத காரணத்தாலும், ஆனால், இன்றைக்கு Regulatory Board இவையெல்லாம் இன்றைக்குச் சொல்லப்படுகிற காரணங்கள் என்றாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் என்ன வெளிநடப்பா?

**திரு. துரைமுருகன்:** ** எங்கள் அதிருப்தியைத் தெரிவித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வெளிநடப்புதான் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சொன்ன கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலையாக இருக்கிறது. எங்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. (குறுக்கீடுகள்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், அவர்கள் நிறைய விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு முடியாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதை வலியுறுத்தினோம், அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அனைவருக்கும் இலவச மின்சாரம் தர முடியாது என்று சொன்னதை கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச முயன்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புக்கான காரணத்தை துரைமுருகன் முதலில் சொன்னது கரெக்ட். (குறுக்கீடுகள்) அரசுக்கு உள்நோக்கம் கற்பிப்பது, அவற்றையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தொடர்ந்து.... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நான் பேசியது..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தொடர்ந்து வந்த இலவச மின்சாரம் தமிழ்நாட்டில் உள்ள எல்லா விவசாயிகளுக்கும் பயன்பட வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நிராகரித்த காரணத்தினால் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)

## 4. அறிவிப்பு

### மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு ஒரு சட்டமன்றப்





பேரவை உறுப்பினரையும், திருவள்ளுவர் பல்கலைக் கழக கல்விக் குழுவிற்கு இரு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென கோரிக்கைகள் வரப்பெற்றன.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம் *6-5-2006* வரை ஆகும். (குறுக்கீடுகள்)

திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். (குறுக்கீடுகள்)

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

நியமனத் தாள் வேண்டுவோர் சட்டமன்றப் பேரவைச் செயலக செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புமனுத் தாக்கல் செய்ய கடைசி நாள் *5-11-2003* புதன்கிழமை பிற்பகல் *3.00* மணி. வேட்புமனுக்கள் பரிசீலனை, *6-11-2003* முற்பகல் *11.00* மணி, வியாழக்கிழமை. வேட்புமனுக்கள் திரும்பப்பெறுதல், *6-11-2003* பிற்பகல் *3.00* மணி, வியாழக்கிழமை. தேர்தல் நாள் (தேவையிருப்பின்), *7-11-2003*, வெள்ளிக்கிழமை முற்பகல் *10.00* மணி முதல் பிற்பகல் *2.00* மணி வரை. (குறுக்கீடுகள்)

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர அரசே கட்டணத்தை ஏற்பது—தொடர்ச்சி

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) முதலில் விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) விளக்கத்தை முதலில் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) துரைமுருகன் அரசாங்கம்

அறிவித்ததை நீங்கள் கண்டனம் செய்து வெளிநடப்புச் செய்யலாம், அது வேறு. ஆனால் நீங்கள் விருப்பப்பட்டதையெல்லாம் இங்கே அரங்கேற்றிவிட்டுப் போவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். வெளிநடப்புச் செய்வதாக இருந்தால் வெளிநடப்புச் செய்யுங்கள். அவ்வளவுதான்.

(தி.மு.க. உறுப்பினர்கள் கோஷம் இட்டுக்கொண்டிருந்தனர்.)

தயவுசெய்து அவையைவிட்டு வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்)

தயவுசெய்து அவையைவிட்டு வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷம் இட்டுக்கொண்டிருந்தனர்.)

குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடு) செல்வி முருகேசன். (குறுக்கீடுகள்) துரைமுருகன் இப்படி அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பீர்களானால் வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். (கூச்சல்-குழப்பம்) துரைமுருகன் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால் வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும்.

(தி.மு.க உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷம் இட்டுக்கொண்டிருந்தனர்)

அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால் வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை நிச்சயம் வரும். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நான் சொல்வதில் ஒரு வார்த்தை தவறு இருந்தாலும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் ஏற்கெனவே இது குறித்து (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். ஏற்கெனவே இது குறித்து விரிவான விவாதம் நடைபெற்றிருக்கிறது. உங்களைப் பேச அனுமதித்தேன். ஆற்காடு வீராசாமி அவர்களைப் பேச அனுமதித்தேன். தொடர்ந்து நீங்கள் சொன்ன கருத்துகளை எல்லாம் கேட்டேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தைச் சொன்னார்கள். எல்லாவற்றையும் சொல்லி முடித்ததற்குப் பிறகு நீங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள். விரும்புகிறபோது, நீங்கள்



ஒரு வார்த்தையில் அதைச் சொல்லிவிட்டு, ஒரு வாக்கியத்தில் சொல்லிவிட்டுப் போகலாமே தவிர, நீங்கள் ஒரு நீண்ட பிரசங்கம் செய்வதற்கு அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் நீண்ட பிரசங்கம் செய்ய அனுமதிக்க முடியாது. அவையைவிட்டு தயவுசெய்து வெளியேற வேண்டுமென்றால் வெளியேறுங்கள். இல்லாவிட்டால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல் (கூச்சல்-குழப்பம்) (தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்) திருமதி செல்வி முருகேசன்.

***திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 174 முதல் 178 வரையிலான 5 அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை. (குறுக்கீடுகள்)

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 132 முதல் 134 வரையிலான 3 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)

[2003 நவம்பர் 4

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 35 முதல் 38 வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர் மற்றும் பா.ம.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பலமுறை எச்சரித்ததற்குப் பிறகும் அவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கிற காரணத்தால் அவர்களையும் சரி, குந்தகம் விளைவிக்கிற ஏனைய பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களையும் சரி அவையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்.)

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (குறுக்கீடுகள்) அமைச்சரிடம் சொல்லுங்கள். அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.



2003 நவம்பர் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2003). மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 3-11-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேச விரும்புகிறவர்கள் மிகச் சுருக்கமாகப் பேசலாம். (குறுக்கீடுகள்)

(வெளிநடப்பு செய்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவைக்குள் வந்து அமர்ந்தனர்.)

(தி.மு.க. மற்றும் பா.ம.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

(தி.மு.க. உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, அவையில் இப்படி கோஷம் போடக்கூடாது. முதலில் உங்களுடைய இயல்புக்கே இது நல்லதல்ல.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி. பழனிசாமி:** நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவுமீது யாரும் பேசவில்லையா? (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், பேசுகிறீர்களா? (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இப்போது நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

[இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்டு) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2003 நவம்பர் 4

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

### (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வரும் இரு சட்டமுன்வடிவுகளும் ஒரே பொருள் உடையனவாக இருப்பதால் பேரவை உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை வழங்க ஏதுவாக அவற்றை ஒருசேர ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2003). திருவாளர்கள் எஸ்.ஆர்.பி. அவர்கள், வி.கே. லட்சுமணன் ஆகியோர் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை முன்மொழியலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"19-7-2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2003) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிகிறவர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** நான் அதை வழிமொழிகிறேன்.



2003 நவம்பர் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 31/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2003). திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், வி.கே. லட்சுமணன் ஆகியோர் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை முன்மொழியலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"21-7-2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2003) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிகின்றவர்கள்?

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

---

@ 19-7-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது இந்தச் சட்டச் முன்வடிவுகள்மீது பேச விரும்புவோர் மிகச் சுருக்கமாகப் பேச வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிச் சட்டம், அதேபோல் மாநகராட்சிச் சட்டம், பஞ்சாயத்துச் சட்டம் ஆகியவற்றிலே எல்லாம் இப்போது திருத்தம் கொண்டு வந்து, மழைநீர் சேகரிக்கிற ஒரு திட்டத்தை அவசரச் சட்டமாக நம்முடைய அரசு முதலிலே அறிவித்து, பிறகு அதைச் சட்டபூர்வமாக்க இப்போது சட்டம் நம்முடைய அவையிலே முன்மொழியப்பட்டிருக்கிறது.

மழைநீர் சேகரிக்கிற திட்டத்தை உண்மையிலேயே காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. இது ஒரு சிறப்பான திட்டம். வறண்டு போயிருக்கிற நம்முடைய தமிழகத்தை மீண்டும் வளமாக்க வேண்டும் என்று சொன்னால், இன்று நீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டியது ஒரு தலையாய கடமை என்பதை அரசு உணர்ந்திருப்பதற்காக நான் உண்மையிலேயே இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன். ஆனால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிற முறையில் இருக்கக்கூடிய சில பிரச்சினைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய தலையாய கடமை என்று நான் கருதுகிறேன்.

இன்று மாநகரமானாலும் சரி, நகரமானாலும் சரி, பேரூராட்சி, கிராமங்கள் போன்ற பகுதிகளிலே, 'குருவிக்கு ஒரு கூடு இருக்கிறது; மனிதனுக்கு ஒரு வீடு வேண்டும்' என்ற முறையில் கண்டிப்பாக வீடு ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கம் ஏற்கெனவே எப்படியாவது இல்லாதவர்களுக்குக்கூட வீட்டுமனையைக் கொடுத்து அவர்களுக்கு இலவச வீடுகள் group houses போன்றவற்றையெல்லாம் இப்போது கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

@ 21-7-2003ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பிற்பகல் 12-55

ஆனால் ஏற்கெனவே பல ஆண்டுகாலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள், அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரு சிறு இடத்தை முழுமையாகப் பயன்படுத்தி அவர்களில் சிலபேர் ஓட்டு வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள், சில பேர் கூரை வீடுகளில் இருக்கிறார்கள், சில பேர் இன்று அவர்களால் முடிந்த அளவு சின்ன அளவிலே மாடி வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். முழு இடத்தையும் அவர்கள் பயன்படுத்திவிட்டார்கள். ஆனால் இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தில் இந்த அரசாங்கம் கொண்டுவந்திருக்கிற அத்துணை வழிமுறைகளையும் இனிமேல் கட்டக் கூடியவற்றுக்கு நாம் முழுமையாகச் செயல்படுத்த முடியும். ஆனால், முழு வீட்டு மனையையும் பயன்படுத்தி வீடு கட்டிவிட்டவர்கள், இன்று அவர்கள் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்து செய்ய வேண்டுமென்று சொன்னால் ரோட்டிலே போய்க் குழியை வெட்ட வேண்டுமென்று சொன்னால், வெளியே அனுமதிக்க மாட்டோம் என்கிறார்கள் உள்ளாட்சியைச் சார்ந்தவர்கள். சில நேரங்களிலே ஓட்டு வீடுகளிலே அவர்கள் சாதாரண, காலியான டின்களை எல்லாம் அப்படியே மடித்து அதை ஓடுகளுக்கு அடியிலே அப்படியே கொண்டுவந்து பிறகு அதிலே ஒரு பைப்பை வைத்து தனியே அவர்கள் தண்ணீரை வெளியே கொண்டுவர வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட வீடுகளுக்கு எல்லாம் நம்முடைய நகராட்சி அல்லது பேரூராட்சி போன்ற பகுதிகளிலே கட்டாயமாக இப்போது நாம் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற சூழ்நிலையில் இன்று நகராட்சியே ஒரு தொகையை, அவர்கள் ஏதாவது ஒரு பைப்பைப் போட்டுவிட்டு, அதற்கு 500 ரூபாய் கொடு, 300 ரூபாய் கொடு என்று வரி வசூல் செய்வதைப்போல இதையும் செய்வோம் என்று சொல்கிறபோது இதிலே பல தவறுகள் நடக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் சேகரிப்பு என்றால் அதற்குப் பல முறைகள் இருக்கின்றன. பல வழிகள் இருக்கின்றன. பலவிதமாக மழைநீர் சேகரிப்பைச் செய்ய முடியும். ஒரு குழியைத் தோண்டினால்தான் மழைநீரைச் சேகரிக்க முடியும் என்றில்லை. பலவிதமான முறைகள் இருக்கின்றன. அடுக்குமாடிக் கட்டடங்களுக்கு ஒரு முறை, ஒற்றை வீடுகளுக்கு ஒரு முறை, மாடி வீடுகளுக்கு ஒரு முறை, குடிசை வீடுகளுக்கு என்றுகூட எளிமையான, மலிவான முறைகள்

இருக்கின்றன. ஒரு சாதாரண ஓட்டு வீடாக இருந்தால்கூட, கூரையில் இருந்து ஒரு hose pipe-ஐ விட்டு அந்த வீட்டினுடைய sump எங்கே இருக்கின்றதோ அந்த sump-க்குள் அந்த hose pipe-ன் மறுமுனையைக் கொண்டுவிட்டாலே போதும். மழைநீர் சேகரிப்பு அங்கே நடந்துவிடும். ஆகவே, அந்தந்த இடத்திற்கு ஏற்ற ஒரு முறையைத் தேர்ந்தெடுத்து மழைநீர் சேகரிப்பைச் செய்யலாம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறையில் என்ன நடைபெறுகிறது என்று சொன்னால், நகரங்களிலும் சரி, பல்வேறு சிற்றூர்களிலும் சரி, வீட்டைத் தவிர வேறு இடமே இல்லாமல் பழைய நகரங்கள் பல இடங்களிலே இருக்கின்றன. தெருவிலே, சாலையிலே ஒரு சிறிய பள்ளத்தைத் தோண்டி இரண்டு அடி, ஒன்றரை அடி என்று தோண்டி அதில் கொஞ்சம் கல்லைப் போட்டுவிட்டு 400 ரூபாய், 500 ரூபாய், 650 ரூபாய் என்று அங்கே இருக்கிற உள்ளாட்சிகள் வசூலித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் மக்கள் மத்தியிலே அதற்குக் கடுமையான எதிர்ப்பு இருக்கிறது. இது நல்ல திட்டம், திட்டத்தை நாங்கள் குறை சொல்லவில்லை. மழைநீர் சேகரிக்கப்பட வேண்டும். ஆனால் அதற்காக ஒரு Street house, வீதியிலே இருக்கிற வீடு, கொஞ்சம்கூட இடம் இல்லாத வீடு, ஒரு வீதியிலே நான் திரும்பிப் போக, காரே போகாது என்று சொல்லி நடந்து போனேன். வீட்டுக்காரர்கள் அத்தனை பேரும் வெளியே நின்றார்கள். கடைக்காரர்களும் வெளியே நின்று பாருங்கள், பாருங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் இரண்டு அடிக்கு இரண்டு அடி குழி தோண்டி, இரண்டு அடி ஆழம்கூட கிடையாது, ஒன்றரை அடி, இரண்டு அடி இருக்கும். அதிலே கொஞ்சம் கல்லைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அதற்கு மாநகராட்சி 650 ரூபாய் வசூல் செய்திருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுச் சொந்தக்காரர்களிடம் மழைநீர் சேகரிப்பைச் செய்வதற்கான அமைப்பை ஏற்படுத்துவதற்காக உள்ளாட்சி அமைப்புகள் கட்டணத் வசூலித்துக் கொண்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்க ங்கே குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே இதைப்பற்றி பல அறிவிப்புகளைச் செய்து, விளம்பரமும் செய்திருக்கிறேன். அரசு பல விளம்பரங்களை, பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும், வானொலியிலும் வெளியிட்டிருக்கிறது. ஏற்கெனவே மக்கள் தாங்களாகவே முன்வந்து



இந்த மழைநீர் சேகரிப்பு அமைப்புகளைத் தங்கள் வீடுகளில், அலுவலகங்களில், கட்டடங்களில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று போதிய கால அவகாசம் கொடுத்தோம். ஆகஸ்ட் 31 ஆம் தேதிக்குள் மக்கள் தாங்களாக முன்வந்து அவரவர் வீடுகளிலும் கட்டடங்களிலும் இந்த மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று சொன்னோம். ஆகஸ்ட் 31-க்குள் அதைச் செய்யத் தவறினால் செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதிக்குள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே அந்த மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி அதற்கான கட்டணத்தை அவர்களிடம் வசூலிக்கும் என்று சொன்னோம். ஆகவே, யார் எல்லாம் முன்பு கொடுத்த கால அவகாசத்திற்குள் இதைச் செய்யவில்லையோ அவர்களுடைய கட்டடங்களில்தான் உள்ளாட்சி அமைப்புகள் இத்தகைய மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி அதற்கான கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு என்ன அவசியம் நேர்ந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கே புரியும். நீங்களே சொல்கிறீர்கள் எங்கு பார்த்தாலும் வறட்சியாக இருக்கிறது, போதிய மழை பெய்யவில்லை என்று. அதுதான் உண்மை. பலமுறை இந்த அவையில் அதைப்பற்றி விவாதித்து இருக்கிறோம். கடந்த 2 ஆண்டு காலமாக பருவ மழை பொய்த்துவிட்டது. போதிய அளவு மழை பெய்யவில்லை. ஆகவே வேறு என்ன வழி? ஓர் அரசாங்கம் எதை வேண்டுமானாலும் வரவழைத்துக் கொடுக்கலாம். ஆனால் தண்ணீரை எப்படி உற்பத்தி செய்வது? ஆகவே மழை பெய்கின்றபோது ஒரு துளி மழைக் நீரைகூட வீணாக்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. இதற்கு ஏன் ஒரு காலக்கெடுவை நிர்ணயித்தோம் என்றால், அக்டோபர் மாதத்தில்தான் பருவ மழை தொடங்கும். வடகிழக்குப் பருவ மழை. ஆகவே அந்த வடகிழக்குப் பருவ மழைக் காலம் வருவதற்குள், மழை பெய்ய ஆரம்பிப்பதற்குள், இந்த மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஒவ்வொரு கட்டடத்திலும் தயாராக இருந்தால் மழை பெய்கின்றபோது அந்த மழை நீரை எல்லாம் சேகரித்து சேமித்து வைத்தால் வருங்காலத்தில் இந்தத் தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க இது உதவியாக இருக்கும் என்றுதான், அந்த நல்லெண்ணத்தில்தான் அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் சேகரிப்பு வேண்டாம் என்று நாங்கள் நிச்சயமாகச் சொல்ல மாட்டோம். மழைநீர் சேகரிப்பைச் செய்ய வேண்டும்.

பண்டைக் காலத்திலேகூட அது அமலிலே இருந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சென்னை மாநகரத்திலே மட்டும் 34 கோவில்களுக்குச் சொந்தமான 34 குளங்கள் இருக்கின்றன. சென்னை மாநகரத்திலே அந்த 34 குளங்களும் தூர் வாரப்பட்டு அங்கே தண்ணீர் சேகரிக்கப்படுமேயானால் தண்ணீர்ப் பஞ்சம் பெருமளவிலே சென்னை மாநகரத்திலே இல்லாமல் போய்விடும். அதேபோல, எல்லா இடங்களிலேயும் செய்யலாம். தப்பில்லை. ஆனால், சிறிய வீடுகள், அந்த வீட்டுக்கு முன்னாலே 1½ அடி, 2 அடி தோண்டுவதினாலே என்ன பயன் ஏற்படப்போகிறது? அது மழை நீர் சேகரிப்பு ஆகாது. பேருக்குச் சேகரிக்கப்படும். தண்ணீர் அப்படியே போய்விடும். நிற்கவே நிற்காது.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்பின் மூலமாக நகராட்சி நிர்வாகத்திலே சிறிய பள்ளம் அல்ல, நிறைவான பள்ளம் போட்டுத்தான் ஜல்லியை நிரப்பி, பொருளாதாரமும் அதிகப்படி செலவு அல்ல—600 ரூபாய், 700 ரூபாய் என்று சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்றார். அது தவறான தகவல்—400 ரூபாய்க்குள்ளாகத்தான் உள்ளாட்சி அமைப்புகள், நகராட்சி நிர்வாகம் நிறைவாகச் செய்து Rain Water Harvesting-ல் complete-ஆக உள்ளே போய் தண்ணீர் நிரம்பிகூட மேலே வழியவில்லை, உள்ளே போய்க்கொண்டே இருக்கிறது. அந்த அளவிற்கு நகராட்சி நிர்வாகம் தொலைநோக்குப் பார்வையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டுள்ளது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைக் குறை சொல்லவில்லை. வரவேற்கிறோம் என்றுதான் முதலிலேயே சொல்லியிருக்கிறோம். இப்போது கோவை மாநகரத்திலே 650 ரூபாய் வசூலித்ததாக எங்களுடைய தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில இடங்களிலே இப்படி வித்தியாசங்கள் வருவதைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு முதல்வர் துறையினுடைய அமைச்சர் அவர்களும்—அதாவது சில இடங்களிலே இடமேயில்லாமல் முழுமையாக அவர்கள் இடத்தைப் பயன்படுத்தி வீடு கட்டிக்கொண்டு இருக்கிறவர்களுக்கு சிறிய அளவிலே அமைக்கக்கூடியவற்றிற்கு ஒரு தொகையை 200 ரூபாய் அல்லது ஏதாவது ஒரு நிலையான தொகையைக் கரெக்டாக fix





செய்துவிட்டீர்கள் என்று சொன்னால் இதிலே அதிகமாகக் கட்டணம் வசூலிக்கக்கூடிய ஒரு நிலை வராது. ஆகவே, அதை இருநூறோ அல்லது 250 என்றோ குறைந்த கட்டணத்தை...

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நிர்வாகத்தின் மூலமாக, அந்த வீட்டினுடைய கட்டமைப்பு மிகப் பெரிய வீடாக இருந்தால் பைப் லைன் அதிகப்படி வாங்கவேண்டிய அவசியம் இருக்கும். அதனால்தான் ஒரு சில வீட்டிற்கு 650 ரூபாயும், சில வீட்டிற்கு 400 ரூபாய் அல்லது 250 ரூபாயிலேகூட குறைந்த பொருளாதாரச் செலவில் இந்தத் திட்டம் அமைக்கப்படுகின்றது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை நாங்கள் மனதார வரவேற்கிறோம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பு உடனடியாக நிலத்தடி நீர் அதிகரித்து இருக்கிறது மட்டுமல்லாமல், கழிவுநீர்க் கால்வாய்களிலே போகின்ற தண்ணீர்கூடக் குறைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் நகரத்திலே குறிப்பாக கோவை நகரத்திலே பல சிறிய வீடுகள் இருக்கின்ற இடத்திலே மாநகராட்சி நெடுஞ்சாலையில் நீங்கள் பள்ளம் தோண்டிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் நெடுஞ்சாலையிலே பி.எஸ்.என்.எல். கேபிள் இருக்கிறது, டி.வி. கேபிள் இருக்கிறது, எலக்ட்ரிசிட்டி கேபிள் இருக்கிறது. இப்படி பல கேபிள்கள் அதில் இருக்கின்றபோது மாநகராட்சி வாய்மொழியாகச் சொன்னார்களேயொழிய அதிகாரப்பூர்வமாக நெடுஞ்சாலைகளிலே தோண்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லாத நிலையிலே அந்த வீட்டிலே குடியிருக்கின்றவர்கள் நெடுஞ்சாலையிலே அதுபோன்ற பள்ளத்தைத் தோண்டுவதில் பல சிரமங்கள் இருக்கின்றன என்பதை நான் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையிலே பள்ளம் தோண்டுங்கள் என்று எந்த மாநகராட்சி நிர்வாக உத்தரவும் சொல்லவில்லை. வீட்டின்

ஒதுக்குப்புறமாக, வீட்டின் எந்த மூலையிலாவது ஓர் ஒதுக்குப்புறமாக அந்த Structure-ரை எப்படிப் போட்டால் அந்தத் தண்ணீர் இறங்கி அந்த Rain Water Harvesting முழுமையாக நிறைவுபெறும் என்ற ஒரு சூழ்நிலைக்கு அந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் மாநகராட்சி நிர்வாகம் சொல்லியுள்ளது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், உண்மையான நிலை என்னவென்றால், சாலையிலேதான் தோண்டியிருக்கிறார்கள். தனி நபர் அல்ல, மாநகராட்சியே சாலையிலேயே தோண்டி அங்கேதான் மழைநீர் சேகரிப்புச் செய்கிறார்கள். அங்கே மழைநீர் சேகரம் செய்வது என்பது இயலுகின்ற காரியமாக எனக்குப் படவில்லை. அதுபோன்ற விஷயங்களைத் தவிர்க்க வேண்டும். அந்த 450 ரூபாய், 650 ரூபாயிலே குழாய் பதிப்பதில்லை. குழாய் பதிக்கின்ற வேலையை அவர்கள் வீட்டுக்காரர்களிடமே விட்டுவிடுகிறார்கள். அங்கே தோண்டுகின்ற வேலையை மட்டும், அந்த இரண்டு அடி குழியைத் தோண்டிவிட்டு அதற்கு 450 ரூபாய் 650 ரூபாய் என்று வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். கோவை மாநகராட்சியிலேயே வசூலிக்கிறார்கள். இதுதான் உண்மையான நிலை.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், 4, 5 சிறிய சிறிய வீடுகளை ஒன்றாகச் சேர்த்து மாநகராட்சியே ஓர் இடத்தைக் கண்டுபிடித்து அங்கே இந்த மழைநீரைச் சேகரிக்கும் என்று சொன்னால் இந்தப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக அரசு கொண்டுவந்த ஒரு மகத்தான திட்டம், முன்னோடித் திட்டம்தான் இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டம். இதுவரை இந்தியாவிலேயே இவ்வளவு பெரிய அளவில் எங்கும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இது ஒரு முன்மாதிரி முன்னோடித் திட்டமாக அமைந்திருக்கிறது. நாடாளுமன்றத்திலேயே இந்தத் திட்டத்திற்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, மத்திய அரசே பிற





மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டைப் போலவே இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று directive கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். பல அயல்நாடுகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் விஞ்ஞானிகள் இதைப் பாராட்டி தமிழக அரசுக்குக் கடிதங்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய மகத்தான திட்டத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாக சிறிய சிறிய குறைபாடுகள் இருக்கலாம். இது ஒரு புதிய திட்டம். இப்போதுதான் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். என்ன குறைபாடுகள் இருந்தாலும் காலப்போக்கில் அவற்றைச் சரி செய்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை நிச்சயமாகச் சரி செய்வதாக, காலப்போக்கில் செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். நன்றி. இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, இப்படிப்பட்ட சிக்கல்கள் இருப்பதை நீங்கள் ஆங்காங்கே இருக்கக்கூடிய அந்தக் கார்ப்பரேஷன் கமிஷனரிடமோ அதைப்போல நகராட்சியினுடைய இயக்குநரிடமோ சொல்லி, குறைந்த அளவிலே எவ்வளவு தேவைப்படுகிறதோ அதை மட்டும் கலெக்ட் செய்துகொண்டால், இந்தத் திட்டம் நிச்சயமாக வெற்றிபெறும் என்பதிலே ஐயமில்லை. இரண்டாவதாக அதாவது, முதலிலே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திவிட்டு, அவர்களிடம் வீட்டு வரி எப்படி வசூல் செய்கிறோமோ அப்படிச் செய்யலாம் என்று நாம் ஒரு விதியை இதிலே போட்டிருக்கிறோம். எல்லா இடத்திலேயும், கார்ப்பரேஷன் ஆக்ட்டிலேயாக இருக்கட்டும், அதைப்போல முனிசிபாலிட்டி ஆக்ட்டிலேயாக இருக்கட்டும், பஞ்சாயத்து ஆக்ட்டாக இருக்கட்டும், எல்லா ஆக்ட்டிலேயும் இருக்கிறது.

அடுத்து, குடிநீர் இணைப்பையும் அங்கே துண்டிப்பதற்கான ஒரு விதிமுறையையும் நீங்கள் இதிலே கொண்டு வந்திருக்கிறீர்கள். ஏன் என்றால், ஒரு தண்டனை போதும்; இன்னொரு தண்டனை இதற்கு வேண்டாம். இதை வைத்துத் துண்டித்துவிட்டார்கள் என்றால், மறுபடியும் 15,000 ரூபாய் பணம் கட்டினால் தான் முனிசிப்பாலிட்டியிலேயிருந்து கனெக்ஷன் வாங்க முடியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை யாருக்கும் அத்தகைய குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படவில்லை. பொதுவாக, இத்தகைய ஒரு முன்னோடித்

திட்டத்தைக் கொண்டு வரும்போது மக்களை educate செய்ய வேண்டியிருக்கிறது. இது உங்களுக்கு நல்லது, இதை நீங்கள் செய்யுங்கள் என்று சொன்னால் பெரும்பாலானவர்கள் அதைப் பின்பற்றமாட்டார்கள். இப்படிச் செய்யவில்லை என்றால் உங்களுக்கு ஒரு தண்டனை என்று சொன்னால் செய்வார்கள். அதற்காகத்தான் இது. ஒரு குழந்தையிடம் ஒரு மருந்தைக் கொடுத்து, இந்த மருந்து உன் உடம்புக்கு நல்லது, ஆனால் கசப்பாக இருக்கும் சாப்பிடு என்றால், சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடிக்கும். சாப்பிடவில்லை என்றால் அடிப்பேன் என்று சொன்னால் சாப்பிட்டுவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலத்தான் இதுவும். ஆகவே, இந்தத் திட்டத்தை மக்கள் செயல்படுத்த வேண்டுமே என்ற ஆதங்கத்தினாலே கொண்டுவரப்பட்ட ஷரத்துதானே தவிர, யாரையும் தண்டிக்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கசப்பான மருந்தாக இருந்தால்கூட, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தேனிலே குழைத்துக் கொடுத்துவிடுவார்கள். தேனிலே குழைத்துக் கொடுத்தால் நிச்சயமாகச் சாப்பிடுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு குழந்தை வளர்த்த அனுபவம் இல்லைபோல இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அடிப்பதுபோலத்தான் நாங்கள் இப்படி இணைத்திருக்கிறோம் இந்த விதியை என்று சொல்கிறார்கள். ஆனால், இந்த செக்ஷனை வைத்துக் கொண்டு நகராட்சியினுடைய ஆணையாளர்கள் அல்லது மாநகராட்சியினுடைய ஆணையாளர்கள் ஒருவேளை இதைச் செய்யவில்லை என்று சொன்னால் அவர்கள் திடுதிப்பென்று கொண்டுபோய் துண்டித்துவிட்டால், பிறகு—ஏன் என்றால் நகராட்சிச் சட்டத்தின்படி, மாநகராட்சிச் சட்டத்தின்படி, ஓர் இணைப்பை நாம் மீண்டும் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், மீண்டும் அவர்கள் கிட்டத்தட்ட 15,000 ரூபாய் டெப்பாசிட் கட்டினால்தான் வாங்க முடியும்.



400 ரூபாய், 500 ரூபாய் கட்டுவது போய் கடைசியிலே 15,000 ரூபாய் அவர்கள் கொடுத்து ஓர் இணைப்பைப் பெறவேண்டியிருக்கிறது. அதுவும் எங்களுடைய வேலூரை எடுத்துக்கொண்டால் 6 நாளைக்கு ஒருமுறைதான் தண்ணீர் கொடுக்கிறோம். 6 நாளைக்கு ஒரு முறை தான் அதுவும் 1 மணி நேரம், 2 மணி நேரம் தான் தண்ணீர் வருகிறது. அதையும் நீங்கள் எடுத்துவிட்டீர்கள் என்று சொன்னால்— அதை எடுக்கப் போவதில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சில நேரங்களிலே இது போன்ற சட்டத்தை அதாவது இதைச் செயல்படுத்தக்கூடிய நகராட்சியினுடைய ஆணையாளர்கள் ஏதாவது தவறு செய்துவிட்டால், பிறகு ஒரு பிரச்சினை வரும். ஆகவே, நீங்கள் இந்த விதியை எடுத்துவிட்டு, நீங்கள் வீட்டு வரி வசூல் செய்வதுபோல, செய்யக்கூடிய செலவைச் செய்துவிட்டு எடுத்துவிட்டாலே போதும் என்ற விதியே போதும்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன் அவர்களும் பேச வேண்டியிருக்கிறது. விட்டு விடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே பேசுகின்றபோதே சொன்னேன். இந்தத் திட்டத்தை நாங்கள் மனதார வரவேற்கிறோம். அதுமட்டுமல்ல, கழிவு நீர்க் கால்வாயிலேகூட இப்பொழுது தண்ணீர் அதிகமாகச் செல்வதில்லை; காரணம், இந்தக் கூரைத் தண்ணீர் எல்லாம் இந்த மழைநீர் சேகரிப்பு வழியாகச் சென்றுவிடுகிறது என்று நான் சொன்னேன். ஆகவே, ஒட்டுமொத்தமாக நாங்கள் இந்தத் திட்டத்தை மனதார வரவேற்கிறோம். அதே சமயத்திலே சிறிய வீட்டுக்காரர்களைப் பற்றித்தான் நான் எடுத்துச் சொன்னேன். இன்னொரு யோசனை. கோவை போன்ற நகரங்களிலே வறட்சிக் காலத்திலே நிறைய ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, அவை பொய்த்துப் போய் இருக்கின்றன. ஆகவே, இந்தக் கூரையிலிருந்து வடிகின்ற தண்ணீரை எல்லாம் பொய்த்துப் போன ஆழ்குழாய்க் கிணறுகளில் விடுவதற்கு மாநகராட்சி வகை செய்யும் என்று சொன்னால், கண்டிப்பாக நிலத்தடி நீர் அதிகமாகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் சேகரிப்பு பற்றிய விவாதத்தில் கலந்துகொள்வதற்கு

அனுமதித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைப்பற்றிக் கூற வேண்டும் என்றால், இந்தத் திட்டத்தை எதற்காக அம்மா அவர்கள் அமல்படுத்தினார்கள் என்பதற்கு ஒருசில கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன். தமிழகத்திலே கடந்த 2 ஆண்டு காலமாக வறட்சியின் காரணமாக விவசாயம், பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது. அதன் காரணமாக, நிலத்தடி நீர் மிகவும் குறைந்துள்ளது. மேலும் பருவ மழை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவதால் விவசாயம் பாதிக்கப்படுவது மட்டும் அல்லாமல் குடிநீருக்கே அவதிப்படுகிற நிலை ஏற்பட்டுள்ளதால், ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு கிட்டத்தட்ட ஆயிரம் அடிக்குக் கீழேதான் அந்த ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிலையை எல்லாம் பார்த்து இன்னும் 25 ஆண்டுகளில் குடிப்பதற்குக்கூட தண்ணீரே கிடைக்காது என்று நிலத்தடி நீர் ஆராய்ச்சி வல்லுநர்கள் எல்லாம் கூறியபடி, அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில் உதித்த திட்டம்தான் இந்த மழை நீர் சேகரிப்புத் திட்டம்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அனைத்து எதிர்க்கட்சியினரும் இன்றைக்கு ஆதரித்தார்கள். ஆனால், அவர்கள் ஒரு நடைமுறைச் சிக்கலைக் கூறியிருக்கிறார்கள். அந்த நடைமுறைச் சிக்கல், குழி வெட்டுவது, அது ரொம்பச் சிரமமான காரியம், அதற்குப் பணம் அதிகமாக வசூலிக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட கையேடுகளை எல்லாம் பார்த்தீர்களேயானால், மிக எளிதான முறையிலே அந்த மழைநீர் சேகரிப்பு பற்றிய வழிமுறைகள் எல்லாம் கையேடுகளிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, முதலிலே இந்தத் தண்ணீர் வருவதற்கு முன்பு, மழை வருவதற்கு முன்பு, இதில் நடைமுறைச் சிக்கலைக் கூறியவர்கள் எல்லாம், மழை வந்ததற்குப் பிறகு, நடைமுறையிலே இதையெல்லாம் பார்த்ததற்குப் பிறகு, அவர்களாகவே முன்வந்து நாங்களாகவே அந்தத் திட்டத்தை ஆதரிக்கிறோம் என்று இன்றைக்கு அவற்றை எல்லாம் அவர்கள் ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு கட்டமாக அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். முதல் கட்டம், அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பது. தனியார் வீடுகளில் அமைக்கப்படுவது என்பது முதல் கட்டம். அந்த முதல் கட்டத்தில்தான் தற்போது எதிர்க்கட்சியினர் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே





முதலிலே சிறு குறை இருந்தது. ஆனால் மழை வந்ததற்குப் பிறகு அந்தப் பயனை அனுபவித்ததற்குப் பிறகு தாங்களாகவே முன்வந்து அனைவருமே இந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்று கிராமப்புறத்திலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக இரண்டாவது கட்டம். இரண்டாவது கட்டத்திலே கிட்டத்தட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை, சுற்றுப்புறச்சூழல் மற்றும் காடு வளர்ப்புத் துறை, பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை, மற்றும் கல்வித் துறை ஆகிய பல துறைகளின் மூலமாக அம்மா அவர்கள் ஆணையிட்டதற்குப் பிறகு அந்த நிலத்தடி நீர் உயர்ந்து இன்றைக்கு குடி தண்ணீர் பிரச்சினை தீர்ந்து விவசாயிகள் விவசாயம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு சிறிய ஆய்வு. இந்த ஆய்வின் மூலமாக ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாநகரத்தில் மட்டும் குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு செய்ததில் சென்னை மாநகரத்தில் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 3,19,934. அவற்றில் கிட்டத்தட்ட 3,18,699 வீடுகளில் மழை நீர் சேகரிப்புப் பணிகள் இன்றைக்கு முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பரவலாக சென்னை முழுவதுமாக 759 இடங்களில் சர்வே செய்யப்பட்டதில் மழை பெய்வதற்கு முன்பு கிணற்றில் உள்ள நீர் மட்டம் மிகவும் குறைந்திருந்தது. சில கிணறுகள் வறண்டு போய் இருந்தன. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதினால் இரண்டு அடியிலிருந்து ஆறு அடி, ஏழு அடி, எட்டு அடி தூரம் தண்ணீரின் மட்டம் உயர்ந்துள்ளதாக இன்றைக்கு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், அந்தத் தண்ணீர் எல்லாம் குடிப்பதற்கு உகந்ததாக இல்லாமல் இருந்தவை தற்போது உவர்ப்புத் தன்மை நீங்கி குடிப்பதற்கு உகந்ததாக இருக்கிறது என்று சர்வே செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் வெற்றியடைந்ததற்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இராமநாதபுரம் மாவட்டத்திலே மைக்கேல்பட்டணம் என்ற ஊரில் கிட்டத்தட்ட 360 வீடுகளிலும், காவேரிப்பட்டணம் என்ற ஊரில் 415 வீடுகளிலும் இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றியதன் பயனாக, அப்பகுதி மக்கள் குடிநீர் தேடி பல மைல்கள் நடந்த நிலை மாறி, இன்றைக்கு தண்ணீர் பஞ்சம் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயிருந்த கிணறுகள் எல்லாம், உவர் நிலமாக இருந்த கிணறுகள்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2003 நவம்பர் 4

எல்லாம், இன்றைக்கு குடிநீர் கிணறுகளாக மாறியிருக்கின்றன. வேலை தேடி வேறு மாவட்டங்களுக்குச் சென்ற மக்கள் எல்லாம், இன்றைக்கு அந்தந்த இடங்களிலேயே தொழில்கள் செய்யக்கூடிய நிலையிலே இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

பிற்பகல் 1-15

மேலும் இந்த மழை நீர் சேகரிப்பைப் பொறுத்தவரையிலே அடுத்தப்படியாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒவ்வொரு விவசாய நிலத்திலும் அந்தந்த விவசாயிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் பண்ணைக் குட்டைகள் அமைப்பதன் மூலம் மழை நீரைச் சேகரிக்க முடியும். இப்படி ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய நிலத்திலும், அரசு புறம்போக்கு நிலத்திலும் மழை நீரைச் சேகரிப்பதன் காரணமாக, பண்ணைக் குட்டைகள் அமைப்பதன் மூலமாக நிலத்தடி நீர் இன்றைக்கு உயர்ந்து காணப்படுகிறது. இந்தச் சீரிய பணியை தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

அதேபோல, $1\frac{1}{2}$ இலட்சம் பொய்த்த கிணறுகள். அந்தப் பொய்த்த கிணறுகளிலே இருக்கின்ற மண்ணையெல்லாம் தூர் வாரியதன் பயனாக இன்றைக்கு நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது. இவற்றையெல்லாம் எதற்குத் தெரிவிக்கிறேன் என்றால் இன்றைக்கு வறட்சியின் காரணமாக, வறட்சி பீடித்திருந்த தமிழகத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய தலைமையில், சீரிய திட்டத்தின் பயனாக நிலத்தடி நீர் மிக அதிகமாக உயர்ந்திருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டதுபோல, இவற்றையெல்லாம் நாடாளுமன்றத்திலே நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இது ஒரு முன்மாதிரியான திட்டம்; இந்த முன்மாதிரியான திட்டத்தை அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்றுகூட கூறியிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே கூறியதுபோல, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்ற இரண்டு ஊராட்சிமன்றத் தலை[illegible]களை [illegible]ல்லாம் அயல் நாட்டிலே அழைத்து, இன்றைக்கு அம்மா [illegible]டைய திட்டத்தையெல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்க[illegible]. ஆகவே, இந்தத் திட்டத்தை வரவேற்று அமர்கின்றேன்.



2003 நவம்பர் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். பதிலுரை.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. மக்கள் தொகையின் அடிப்படையில் கூடிக்கொண்டே இருக்கின்றன. இன்றைய காலச் சூழ்நிலையில் விளை நிலங்கள், கட்டடங்களாகவும், மனைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. பண்டைய கால வரலாறு பின்பற்றப்பட வேண்டும்; இந்த மழை நீர் சேகரிப்புத் திட்டம் வரலாற்றுத் திட்டமாகக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய உயர்ந்த கொள்கையில் இன்றையதினம் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பண்டைய காலத்தில் வெட்டவெளியில் இடங்கள் பரந்து கிடந்தன. ஆங்காங்கே பருவ மழையின் காரணமாக குளங்கள், ஏரிகள் மற்றும் வெற்றிடங்கள் நீர் நிறைந்த பகுதிகளாக நெடுநாட்களாக தேங்கிக் கிடந்தன. அன்றையச் சூழ்நிலையில் நிலத்தடி நீர் உயர்ந்து, நிலத்து நீர் தரம் உயர்ந்து காணப்பட்டது. அந்தச் சூழ்நிலை பின்பற்றப்பட வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையில், இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள், பெரும்பகுதி வாழ்கின்ற மக்கள் தொகைக்குத் தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் அதோடு மட்டுமல்லாமல் விவசாய விளை நிலங்களுக்கு தண்ணீர் வசதி அவசியம் என்ற சூழ்நிலையில், மழை நீர் சேகரிக்கும் திட்டத்தை, ஒரு புதிய திட்டத்தை அறிவித்து இன்றையதினம் கட்டடங்களிலும், கட்டப்படுகின்ற கட்டடங்களிலும், ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிற கட்டடங்களிலும், அது மட்டுமல்லாமல் அரசுக் கட்டடங்களிலும், அனைத்துக் கட்டட அமைப்புகளிலும் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை அறிவித்து, இன்று இத்திட்டம் மக்களிடையே மிகப் பெரிய விழிப்புணர்ச்சியையும், மிகப் பெரிய வரவேற்பையும் அதோடு மட்டுமல்லாமல் மிகப் பெரிய மக்கள் இயக்கமாக இன்றைக்கு தமிழகம்தோறும் அத்தனை உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த 4 ஆண்டு காலமாக பருவ மழையின் அளவு குறைந்துள்ளது. அதனால் நிலத்தடி நீரின் மட்டம் வெகு விரைவாக மிகவும்

[திரு. எம்.சி. சம்பத்] [2003 நவம்பர் 4

ஆழத்திற்குச் சென்றுள்ளது. எதிர் வருகின்ற பருவ மழையில் இந்தத் திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற ஒரு அத்தியாவசியமான திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், அந்த அடிப்படையில் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை கட்டமைப்புகளிலும் மழைநீர் சேகரிப்பினை உருவாக்க வேண்டுமென்று கட்டாயமாக்கியுள்ளார்கள். அந்தக் கட்டமைப்புகளில், அந்தக் கட்டடங்களில் அமைக்கத் தவறினால், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக அக்கட்டடங்களில் மழைநீர் சேகரிக்கும் அமைப்பு முறையினை உருவாக்கி, அதற்குண்டான கட்டணத்தை மாதந்தோறும் குடிநீர் வரி வசூல் செய்வதைப்போல, வசூல் செய்துகொள்ள வேண்டுமென்று இந்தத் திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1-20*

அந்த நிலையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மாநகராட்சிக் கட்டடங்கள், நகராட்சிக் கட்டடங்கள், ஊராட்சிக் கட்டடங்கள், பேரூராட்சிக் கட்டடங்கள் ஆகிய அனைத்துக் கட்டமைப்புகளிலும் இந்த மழைநீர் சேகரிப்பினை நகராட்சிச் சட்டங்கள் மூலம் கட்டாயமாக்கவேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையில் இன்றையதினம் இந்தத் திட்டம் அத்தனை உள்ளாட்சி அமைப்புகளிலும்—ஊராட்சியை எடுத்துக்கொண்டால் 99% நகராட்சிகளை எடுத்துக்கொண்டால் 99.63%, பேரூராட்சிகளில் 92%—அதோடு மட்டுமல்லாமல் அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் இந்த மழைநீர் சேகரிப்பு முறை முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இன்றையதினம் சாலையோரங்களில் ஓடுகின்ற மழைநீரைச் சேமிக்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதனால் run away water from the road surface என்ற முறையில் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டுமெ[illegible] இந்[illegible] திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமை[illegible] அ[illegible]மா அவர்கள், சாலையில் ஓடி, வடிகாலில் கலந்து, த[illegible]ணீர் வீணாகக் கழிவுநீரில் கலப்பதைத் தடுக்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தை உருவாக்கி, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்கள். அந்த



2003 நவம்பர் 4] [திரு. எம்.சி. சம்பத்]

அடிப்படையிலே இன்றையதினம் நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கின்ற அத்தனைச் சாலைகளிலும், உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கின்ற அனைத்துச் சாலைகளிலும், ஊராட்சி அமைப்புகளிலே இருக்கின்ற அனைத்துச் சாலைகளிலும் முழுமையாக இந்த மழைநீர், percolation pit மூலமாக அமைக்கப்பட்டு, மழைநீர் சேகரிப்பு முறை உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உருவானதுதான் இந்த மிகப் பெரிய மகத்தான திட்டம். அதோடுமட்டுமல்லாமல், பல்வேறு மாநில முதல்வர்கள், வெளிநாடுகளில் இருக்கின்ற பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பாராட்டுகின்ற திட்டம் இந்தத் திட்டம். ஆகவே, அந்த அடிப்படையிலே, 'வருகின்ற மழையை விட்டுவிட்டு, வராத மழைக்கு அழுவது ஏன்' என்ற அடிப்படையில், அதோடுமட்டுமல்ல; 'விண்ணின் மழைத்துளி, மண்ணின் உயிர்த்துளி' என்ற அடிப்படையில் இந்த நகராட்சிச் சட்டங்களுக்கான இரண்டாம் திருத்த அவசரச் சட்டம், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2003) நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2003) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் தீர்மானத்தை வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய தீர்மானம் வலியுறுத்தப்படவில்லை. திரு.வி.கே. லட்சுமணன் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2003)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை புதன்கிழமை (5-11-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.**

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

17. 2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை விதிகள் இயற்றியது குறித்து நெடுஞ்சாலைத் துறையின் 5-6-2003 ஆம் நாளிட்ட 110-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 34/2002) 66(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

18. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூல் தொகுதி-1)-ல் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 20-5-2003-ஆம் நாளிட்ட 46-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

19. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூல் தொகுதி-1)-ல் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 20-5-2003-ஆம் நாளிட்ட 47-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. 28-2-1996-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (M) துறையின் 30-1-1996 ஆம் நாளிட்ட SRO B-49/96 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் 20-5-2003-ஆம் நாளிட்ட 48-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூல் தொகுதி-1)-ல் திருத்தம் செய்தது குறித்து பணியாளர்

[2003 நவம்பர் 4

மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 10-6-2003-ஆம் நாளிட்ட 67-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 2000-2001-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

23. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

15. 2003-2004-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

16. 2003-2004-ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

17. 2003-2004-ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

18. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்தி நான்காவது அறிக்கை. (2003-2004).

19. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்தி ஐந்தாவது அறிக்கை. (2003-2004).

20. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்தி ஆறாவது அறிக்கை (2003-2004).

21. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்தி ஏழாவது அறிக்கை. (2003-2004).

22. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்தி எட்டாவது அறிக்கை. (2003-2004).



2003 நவம்பர் 4]

23. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி இரண்டாவது அறிக்கை. (2003-2004).

24. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி மூன்றாவது அறிக்கை. (2003-2004).

25. பொதுக் நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி நான்காவது அறிக்கை. (2003-2004).

26. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தி ஐந்தாவது அறிக்கை. (2003-2004).

27. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை. (2003-2004).

28. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை. (2003-2004).

29. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தி எட்டாவது அறிக்கை. (2003-2004).

185083
00 008
V2, 1, 3, P03
P03. 52.2

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.